
# வரலாறு

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி




சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# வரலாறு

## தரம் - 7

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
(2008 ஆம் ஆண்டிலிருந்து 7 ஆந் தரத்துக்கானது)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

வரலாறு
தரம் 7
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

© பதிப்புரிமை தேசிய கல்வி நிறுவகத்துக்குரியது.

முதற்பதிப்பு : 2007

பதிப்பாசிரியர்கள் : திரு.உ.நவரத்தினம் - பணிப்பாளர்
திரு.ச.கருணாகரன் - உதவிச் செயற்றிட்ட அதிகாரி

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

புதிய நூற்றாண்டில் ஏற்படுத்தப்படும் இக்கலைத்திட்ட மறுசீரமைப்பானது தற்போது பாடசாலைகளில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு வழிமுறையாகக் கருதப்பட முடியும். இக்கலைத்திட்டமானது இன்றைய இளஞ் சந்ததியினர் எதிர்நோக்கியுள்ள தனிப்பட்ட இயலாமையிலிருந்து அவர்களை விடுவிக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் கல்வி முறையினை நோக்கின் இன்றைக்கு பல வருடங்களுக்கு முன் இலங்கையானது கல்வித்துறையிலே மிகவும் முதன்மை ஸ்தானத்திலிருந்தது. ஆனால் தற்போது ஆசியாவின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பின்னடைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியுதாகவுள்ளது. எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளாது நிகழ்காலத்தை மாத்திரம் கருத்திற் கொண்ட கலைத் திட்டங்களை மீண்டும் மீண்டும் முன்வைத்தமை இப்பின்னடைவுக்கான காரணிகளுள் ஒன்றாகும்.

இவ்வாறான நிலையிலிருந்து விடுபடும் நோக்கில் தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரிகள் தெளிவானதொரு தொலைநோக்கின் அடிப்படையில் கலைத்திட்டத்தில் மறுசீரமைப்பை மேற்கொள்ள முன்வந்துள்ளனர். புதிய கலைத்திட்டத்தின் நோக்கமானது மாணவர் சமூகத்தின் தேடலையும் கற்றலையும் ஊக்குவிப்பதுடன் மாணவர்களின் தேர்ச்சிகளை மேம்படுத்துவதுமாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு ஆசிரியரின் வகிபாகத்தில் முழுமையான மாற்றம் ஏற்படுவது அத்தியாவசியமானது. இப்புதிய கலைத்திட்டத்தின் கீழ் தற்போது நிலவும் ஆசிரியர் மையக்கல்வியிலிருந்து மாணவர் மையக்கல்விக்கும் தேர்ச்சி மையக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் இட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் ஆசிரியர்கள் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் தயாராகுதல் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது ஆசிரியர்களை அவ்வாறானதொரு முறைமைக்கு இட்டுச் செல்வதற்கும் பெருமளவு பங்களிப்புச் செய்யுமென நம்புகின்றேன்.

வழிகாட்டியிலுள்ள வழிகாட்டல்களை நன்கு பின்பற்றுவதனூடாக வெற்றிகரமான ஆசிரியராக மிளிர்வதற்கான ஆற்றல் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் கற்பித்தலின் போது மாணவர்களைக் கணிப்பிடுவதற்கும் இது உங்களுக்கு உதவும். தேடலும் தர உள்ளீடுகளும் அடங்கிய வழிகாட்டலானது மாணவர்களுக்கு உதவும் வகையில் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு அதிபர்களுக்கு நேரசூசியைத் தயாரிக்கும் போதும் அருமையான வளங்களைப் பகிர்ந்தளிக்கும் போதும் வெளிவாரி கண்காணிப்புகளின் போதும் இவ்வழிகாட்டல்கள் பெரிதும் உதவும்.

இவ்வழிகாட்டியானது விதிக்கப்பட்ட ஒன்றன்று. ஆசிரியர்களுக்கு ஆக்கத் திறனுடன் பொருத்தமான பல்வேறு செயற்பாடுகளையும் சுயமாக உருவாக்கிக் கற்பிக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டியிலுள்ள செயற்பாடுகள் மாதிரிகளாகும். பிரதேச வேறுபாடுகளுக்கேற்ப ஆசிரியர்கள் சுயமாகச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள முடியும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இவ் ஆசிரியர் வழிகாட்டியைத் தயாரிப்பதில் உதவிய கல்வியியலாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், வெளிவாரியான உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எனதுமனமார்ந்த நன்றிகளைத் தெிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் ஜே.டபிள்யூ.விக்கிரமசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கையின் கலைத்திட்டக் கொள்கையில், பாடசாலைப் பாடத்திட்டமானது, எட்டு வருடங்களுக்கு ஒருமுறை காலத்திற்கு இயைந்ததாகக் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கேற்ப 2007 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்ற கல்விச் சீர்திருத்தத்தின் கீழ், இப்பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டற் கோவையும் அறிமுகஞ் செய்யப்படுகின்றன.

இதுவரை நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களில் குறித்த பாடத்துடன் தொடர்பான விடயத் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்கமும், அமைந்திருந்தமையால் அவற்றைக் கற்பிக்கும் பணி ஆசிரியரின் மீது சுமத்தப்பட்டிருந்தது. இச் செயற்பாடுகள் மூலம் ஏராளமான தகவல்களை மாத்திரம் அறிந்த மாணவர் பரம்பரை ஒன்று உருவானது.

புதிய கலைத்திட்டச் சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்படுகின்ற பாடத்திட்டங்களில் அவ்வப் பாடங்களில் மாணவர் அடைந்து கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் பல இனங்காணப்பட்டுள்ளன. இந்தப் புதிய பிரவேசத்தின் மூலம் அதிகமான விடயங்களைக் கற்கின்ற அதேநேரம் அவற்றை நடைமுறையில் செயற்படுத்துகின்ற தேர்ச்சி கொண்ட மாணவர் பரம்பரை ஒன்றின் உருவாக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் புதிய பாடத்திட்டத்தைக் கையாளுகின்ற ஆசிரியர்கள் இவ்வேறுபாட்டைச் சரியாகப் புரிந்துகொள்வதுடன் அதில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இந்நூலின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிப் பகுதியில் புதிய கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு ஒன்று விதந்துரைக்கப்பட்டுள்ளது. இச் செயலொழுங்கின் கீழ் மாணவர் நூலகத்தைப் பயன்படுத்தல், புத்தகங்கள் வாசித்தல், சுற்றாடலை அவதானித்தல், தகவல் அறிந்தோரைச் சந்தித்து விடயங்களைச் சேகரித்தல், தமது சகபாடிகளிடமிருந்து பல்வேறு விடயங்களைக் கற்றல், தாம் அறிந்தவற்றை அவர்களுடன் பரிமாறிக் கொள்ளல், இயலுமெனில் இணையத்தளம் மூலம் தகவல் திரட்டல் போன்ற கண்டறிதல் மூலமான கற்றல் கலாசாரம் ஒன்றைக் காண முடியும். இதற்குக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாடப்புத்தகத்தினை உசாத்துணை நூலாகக் கொள்ள முடியும். இவ்வாறு கண்டறியப்படுகின்ற தகவல்கள் மிகச் சரியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்டும் முழுமையாகவும் மாணவர்களுக்கு சென்று அடையச் செய்வது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்கப்படுகின்ற பணியாகும். இந்த வகையில் ஆசிரியரின் வகிபாகம் புதிய அறிவுகள் மூலம் போதிக்கப்படுவது அவசியமாகும். இங்கு மாணவர்கள் ஏராளமான விடயங்களைக் கண்டறிந்து, பல்வேறு அம்சங்களையும் தெரிந்தவர்களாக மாறுகின்றனர். இத்தகைய செயற்பாட்டுக் கற்றல் சூழலானது மாணவர்களைப் பெரிதும் கவர்வதாக அமையும்.

இதற்காக, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் விதந்துரைக்கப்பட்ட மாதிரிச் செயற்பாடுகளைக் கையாண்டு, இன்னும் பல்வேறு செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்நூலை ஒரு வழிகாட்டியாகக் கொள்ளவும். இதனூடாக புத்தாக்கத் திறனுடைய ஓர் ஆசிரியராக இருந்து. பல்வேறு புதிய செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இந்தப் புதிய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் போது மாணவர் எப்போதும் செயற்படுபவர்களாகக் காணப்படுவர். இதனால் அவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும். அவற்றுக்கு நீங்கள் மதிப்பளியுங்கள். அவர்களை உற்சாகப்படுத்துங்கள். இன்னும் மாணவர்கள், சில சந்தர்ப்பங்களில் எதிர்கொள்கின்ற க'டங்கள், இடையூறுகளை உங்களால் அவதானிக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் உதவி செய்யுங்கள். அயலில் உள்ள சகபாடிக்கு உதவி செய்ய மாணவரை வழிப்படுத்துங்கள். இவ்வாறு செயற்பாட்டின் போது இடம்பெறுகின்ற கணிப்பீட்டுச் செயலொழுங்கானது, சிறந்ததொரு கற்றலுக்கு உதவியாக அமையும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ள, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை நீடிப்பதற்கான உபகரணமானது, ஒப்படையாக அல்லது பயிற்சியாக மாணவர் கற்றவற்றை, மேலும் பலப்படுத்தக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனைச் செயற்படுத்துவதில் உங்களது அவதானத்தைச் செலுத்துங்கள். இதனை மாணவரை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பமாகவும் ஆக்கிக் கொள்ளுங்கள். இவ்வாறான கற்றல் - கற்பித்தலை நீடிக்கும் உபகரணங்களைத் தயாரித்து, பல்வேறு பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதில் உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள்.

விமல் சியம்பலாகொட,
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# எழுத்தாளர் குழு

**ஆலோசனைக் குழு :**

| | |
|---|---|
| பேராசிரியர் ஜே.டப்ளியூ.விக்கரமசிங்ஹ | - பணிப்பாளர் நாயகம் தேசிய கல்வி நிறுவகம். |
| திரு.விமல் சியம்பலாகொட | - உதவிக் பணிப்பாளர் நாயகம் தேசிய கல்வி நிறுவகம். |
| பேராசிரியர் மாலினி அந்தகம | - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் எம்.யூ.த.சில்வா | - றுகுணு பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் இந்திராணி முனசிங்ஹ | - கொழும்பு பல்கலைக்கழகம். |
| கலாநிதி எஸ்.அனுசியா | - தென் கிழக்குப் பல்பலைக்கழகம். |
| திரு.ரீ.இராசேந்திரன் | - திறந்த பல்கலைக்கழகம். |

**மேற்பார்வை :**

| | |
|---|---|
| திரு.உ.நவரத்தினம் | - பணிப்பாளர், சமூக விஞ்ஞானத்துறை தேசிய கல்வி நிறுவகம். |

**இணைப்பாளர்கள் :**

| | |
|---|---|
| திருமதி.டி.எச்.சந்திமாநி'ானி தர்மபால | - செயற்திட்டஅதிகாரி (தே.க.நி) |
| திரு.எஸ்.கருணாகரன் | - உதவிச் செயற்றிட்ட அதிகாரி (தே.க.நி) |

**எழுத்தாளர் குழு :**

| | |
|---|---|
| திரு.பீ.எல்.ஆர்.றோஹண குமார | - இளைப்பாறிய பிரதான செயற்திட்ட அதிகாரி. (தே.க.நி) |
| திரு.எஸ்.எம்.தயானந்த | - இளைப்பாறிய செயற்திட்ட அதிகாரி (தே.க.நி) |
| திரு.சீ.எஸ்.ஜயசிங்ஹ | - முகாமையாளர், ஆசிரியநிலையம் ஹொரணை. |
| திருமதி.ஏ.இந்திராணி | - இர/குழந்தை யேசு கன்னியர்மடம். தேசிய பாடசாலை, இரத்தினபுரி. |
| திருமதி.ஜே.வீ.காந்தி | - வலயக் கல்விக் காரியாலயம். |
| திருமதி.நந்தா மனம்பேதி | - கே/புனித யோசப் மகளிர் கல்லூரி கேகாலை. |
| திருமதி.ஆர்.டப்ளியூ.எஸ்.தேல | - டி மெஸன்ட் வித்தியாலயம். கந்தானை. |

| | |
|---|---|
| திருமதி.மஞ்சரி புஞ்சிஹேவா | - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மகளிர் கல்லூரி. ஹங்குரங்கெத்த. |
| திருமதி.எஸ்.ஏ.என்.பெரேரா | - கே / ரன்வல மகாநாக மகா வித்தியாலயம். கேகாலை. |
| திரு.எச்.வீரரத்ன | - இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர். |
| திரு.யூ.எல்.சிபார்தீன் மரிக்கார் | - க/பாரதி தமிழ் வித்தியாலயம் வத்தேகம. |
| திருமதி.எஸ்.பாலசுந்தரம் | - முன்னாள் பிரதிப் பணிப்பாளர். இலங்கை பரீட்சைத் திணைக்களம். |
| திரு.என்.சிதம்பரநாதன் | - முன்னாள் பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம். |
| திரு.என்.எம்.எம்.முஹ்யித்தீன் | - இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர். ஹோமாகம வலயம். |

**வரைபடங்கள் :**

| | |
|---|---|
| செல்வி.கே.எல்.ஏ.கீதானி | - தேசிய கல்வி நிறுவகம். |

**கணனி வடிவமைப்பு** - செல்வி.சுபத்திரா குமாரவேல்.

**மேலட்டை வடிவமைப்பு**

| | |
|---|---|
| செல்வி.சந்தியா அத்தபத்து | - தேசிய கல்வி நிறுவகம். |
| செல்வி.எம்.என்.எப்.றிஹானா நயீம் | - தேசிய கல்வி நிறுவகம். |

**ஏனைய உதவிகள்** :

| | |
|---|---|
| திரு.ஆர்.எம்.ரூபசிங்ஹ | - தேசிய கல்வி நிறுவகம். |

# பொருளடக்கம் பக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | II |
| உதவிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | IV |
| எழுத்தாளர் குழு | VI |
| பொருளடக்கம் | VIII |
| அறிமுகம் | IX |

பாடத்திட்டம் (பகுதி - I)

| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 1 |
| 2.0 | 7 ஆந் தரத்துக்கான பாட நோக்கங்கள் | 2 |
| 3.0 | பாடத்திட்டம் | 3 |
| 4.0 | பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் | 10 |

கற்றல் கற்பித்தல் முறையியல் (பகுதி - II)

| | |
|---|---|
| அறிமுகம் | 12 |
| வரலாற்று கற்பித்தலுக்கான உத்திகள் | 15 |
| கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் | 16 |

கணிப்பீடும் மதிப்பீடும் (பகுதி - III)

| | |
|---|---|
| அறிமுகம் | 172 |
| கற்றல் கற்பித்தற் செயற்பாட்டை நீடிப்பதற்கான கருவிகள் | 174 |

# அறிமுகம் :

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கல்விச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப புதிய ஆசிரியர் வழிகாட்டித் தொகுப்பும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது அதற்காகத் தயாரிக்கப்பட்ட தரம் 7 வரலாற்றுப் பாடத்துக்குரிய நூலாகும்.

இவ்வழிகாட்டி நூல் 3 பகுதிகளைக் கொண்டுள்ளது. 1 ஆம் பகுதி பாடத்திட்டத்தையும் 2 ஆம் பகுதி கற்றல் - கற்பித்தல் செயன்முறையினையும் 3ஆம் பகுதி கணிப்பீட்டையும் உள்ளடக்கியுள்ளது. 1 ஆம் பகுதியில் பாடத்திட்டத்தில் தரம் 7 இற்குரிய வரலாற்றுப் பாடத்திட்டத்தில் அடங்கும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. 2ஆம் பகுதியில் அதற்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் செயன்முறை முன்வைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தல் ஊடாக எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை மாணவர்கள் அடைவதை உறுதிப்படுத்துவதுடன் அதனை இனங் காண்பதற்கும் கணிப்பீடும் மதிப்பீடும் உதவி புரிகின்றன.

இங்கு பாடத்திலுள்ள விடய உள்ளடக்கம் முழுவதும் அடங்கும் வகையில் செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனப்படுபது கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். சில மாதிரிகள் மட்டுமே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இமாதிரிகளைக் கவனத்தில் கொண்டு நீங்கள் செயற்பாடுகளைத் தயாரித்துக் கொள்வதுடன் முன்வைக்கப்பட்டுள்ள மாதிரிச் செயற்பாட்டையும் உங்கள் ஆக்கத்திறனுக்கேற்ப விருத்தி செய்தும் கொள்ளலாம்.

வரலாற்றுப்பாட நோக்கங்களை நிறைவேற்றி, தேர்ச்சிகள் நிறைந்த புதிய உலகிற்குப் பொருத்தமான மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கு இந்த ஆசிரியர் வழிகாட்டி நூல் கைகொடுத்து உதவும் என எதிர்பார்க்கிறோம்.

வரலாற்றுப் பாடக் குழு.

பகுதி - I

# பாடத்திட்டம்

# 1. அறிமுகம்

வரலாற்றைக் கற்பது மனித நாகரிக வளர்ச்சியில் நிகழ்ந்த அரசியல், பொருளாதார, சமூக, கலாசார துறைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றின் பல்வேறுபட்ட இயல்புகளை ஒப்பீட்டுரீதியிலும் விமர்சன ரீதியிலும் விளங்கிக் கொள்வதற்காகும். - சூழல் மற்றும் தேசிய மரபுகளைப் பேணி அனைத்து மக்களும் ஒன்றாக இணைந்து நல்ல சமூகமொன்றை உருவாக்கும் நோக்கைக்கொண்டிருத்தல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தின் ஊடாக தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை பாடசாலைக் கலைத்திட்டத்தில் கட்டாய பாடமாக வரலாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ் இனங்காணப்பட்ட வரலாறு பாடசாலைப் பாடத்திட்டம் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப தரம் 6 இலிருந்து தரம் 11 வரையான வரலாற்றுப் பாடத்திட்டம் இனங்காணப்பட்ட பாடத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தரம் 7 இற்கான இப்பாடத்திட்டம் அதன் விளைவினாலாதாகும். இது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஆறு தொனிப் பொருள்களை உள்ளடக்கிய இப்பாடத்திட்டத்தில் இலங்கை மற்றும்இலங்கை தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய உலக வரலாற்று நிகழ்ச்சிகள் என்பன தொனிப் பொருள்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கேற்ப தரம் 7 இற்கு உலகின் புராதன நதிக்கரை நாகரிகங்களின் தோற்றம், அவற்றின் பரம்பல், இலங்கையில் தென்னிந்திய படையெடுப்பு, அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைதல், பொலன்னறுவை இராச்சியம், மத்தியகால ஐரோப்பா, மத்தியகால இலங்கை ஆகிய தொனிப் பொருள்கள் கற்பதற்கான விடயங்களாகும். தரம் 7 இலிருந்து தரம் 11 வரையிலுள்ள கலைத்திட்டத்தைக் கற்பதன் மூலம் பின்வரும் தேர்ச்சிகளை மாணவர் அடைவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

* வரலாற்று வளர்ச்சி - போக்குகள் பற்றி விவரிப்பார்.
* எதிர்காலத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு முந்தையகாலம் பற்றிய தர்க்க ரீதியான அறிவைப் பயன்படுத்துவார்.
* தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்கி நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
* வரலாற்றில் இடம்பெற்ற முக்கியமான நபர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு நடப்பார்.
* தேசிய தனித்துவத்தை இனங்கண்டு அவற்றை மதித்துத் தமதாக்கிக் கொள்வார்.
* வரலாற்று அனுபவங்களைக் கொண்டு தற்கால நிகழ்வுகளை வினைதிறன் மிக்கதாகக் கையாளுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 2.0 தரம் 7இற்கான பாடத் தேர்ச்சிகள்.

- புராதன நதிக்கரை நாகரிகங்கள் பற்றிய தகவல்களை விவரித்து அவற்றின் நல்ல பண்புகளை தற்காலத்திலும் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பார்.

- நாகரிகப் பரம்பலில் பெற்ற வெற்றிகள் பிற்கால உலக சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை விவரித்து அவ்வெற்றிகள் ஊட்டம் பெறுவதற்கு பங்களிப்புச் செய்வார்.

- தென்னிந்திய செல்வாக்கு அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைவதற்கு காரணமான விதத்தை விவரித்து நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.

- பொலன்னறுவைக்காலத்தில் முக்கியம் பெற்ற ஆட்சியாளர்களின் அரசியல், பொருளாதார, கலாசார சேவைகளை மதிப்பதுடன் அவற்றின் நல்ல பண்புகளை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.

- பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைவதற்கு ஏதுவான காரணங்களை ஆராய்ந்து குடிமக்கள் என்ற வகையில் அக் குறைபாடுகள் மீண்டும் ஏற்படாது முன்னோடியாகச் செயற்படுவார்.

- மத்தியகால ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களை அட்டவணைப்படுத்தி அனுபவங்களைப் பெற்றுக்கொள்வார்.

- மத்திய கால இலங்கையின் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை விவரித்து தற்காலத்தை உருவாக்குவதற்கு அந்த அனுபவங்களைப் பயன்படுத்துவார்.

- இலங்கையின் வரலாற்றுச்சிறப்பினையும், புகழினையும். அறிந்து பெருமையுடன் செயற்படுவார்.

- வரலாற்றுத் தகவல்கள் கொண்டு தேசப்படத்தில் குறித்துப்பெயரிடும் ஆற்றலை வளர்த்துக் கொள்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 3.0 பாடத்திட்டம்.

## 7.1 புராதன நதிக்கரை நாகரிகங்கள்.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| உலகின் நாகரிகத்தின் ஆரம்ப வளர்ச்சி ஆகியவற்றை கற்று அதன் பின்னரான நாகரிகம் தொடர்பாக விசாரித்து அறிவார். | • விவசாயத்துக்குச் சாதகமான வளமான மண் / சமதரை, நீர் வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப குடியிருப்புக்களுக்காக நதிப்பள்ளத்தாக்குகள் தெரிவு செய்யப்பட்ட விதத்தை விவரிப்பார்.<br>• புராதன நதிக்கரை நாகரிகப் பரம்பலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• நதிக்கரை நாகரிகங்களின் சிறப்பான அம்சங்களை அட்டவணைப்படுத்துவார்.<br>• நதிக்கரை நாகரிகங்களிலிருந்து பிற்கால நாகரிகங்கள் பெற்றுக்கொண்ட கொடைகள் பற்றித் தகவல்களைக் கற்றறிந்து அவற்றை மென்மேலும் விரித்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்வார். | 7.1 புராதன நதிக்கரை நாகரிகங்கள்.<br>7.1.1 குடியிருப்பதற்கு நதிக்கரைகளைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள்.<br>7.1.2 நதிக்கரை அருகில் தோன்றிய நாகரிகங்கள். யூபிரடிஸ் - தைகிறிஸ் - மெசப்பொத்தேமியா, குவாங்கோ - சீனா, நைல் - எகிப்து, இந்துநதி - சிந்து,<br>7.1.2.1. மெசப்பொத்தேமிய நாகரிகம்.<br>• அமைவிடம், பரம்பல்<br>• சிறப்புபண்புகள்.<br>• ஆட்சி முறை<br>• பொருளாதாரம்.<br>• சமயவழிபாடுகள், நம்பிக்கைகள்.<br>• கலாசாரம்.<br>- பிற்கால நாகரிகங்களுக்கான கொடைகள்<br>7.1.2.2 எகிப்திய நாகரிகம்.<br>• அமைவிடம், பரம்பல்<br>• சிறப்பம்சங்கள்<br>• ஆட்சி முறை<br>• பொருளாதாரம்<br>• சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும்<br>• கலாசாரம்<br>- பிற்கால நாகரிகங்களுக்கான கொடைகள் | 10 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | | 7.1.2.3 இந்து நதிக்கரை நாகரிகம்.<br>- அமைவிடம், பரம்பல்<br>- சிறப்பு பண்புகள்<br>• ஆட்சி முறை<br>• பொருளாதாரம்<br>• சமூகம்<br>• கலாசாரம்<br>- பிற்கால நாகரிகங்களுக்கான கொடைகள்<br>7.1.2.4 சீன நாகரிகம்.<br>- அமைவிடம், பரம்பல்<br>- சிறப்புப் பண்புகள்.<br>• ஆட்சி முறை<br>• பொருளாதாரம்<br>• சமூகம்.<br>• கலாசாரம்<br>- பிற்கால நாகரிகங்களுக்கான கொடைகள் | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.2 நாகரிகத்தின் பரம்பல்.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| உலக நாகரிகங்களின் பரம்பல் நிகழ்ந்த விதத்தினை பகுப்பாய்வு செய்து அவற்றை தற்காலச்சம்பவங்களுடன் ஒப்பிடுவார். | கிரேக்க, உரோம நாகரிகங்கள் பற்றிய தகவல்களை ஆராய்வார். | 7.2. நாகரிகப் பரம்பல்<br>7.2.1 கிரேக்கம்.<br>- அமைவிடம், பரம்பல்<br>- ஆட்சி நடவடிக்கைகள்.<br>• அடிமை முறை.<br>• நகர அரசுகள்.<br>• சனநாயகத்தின் ஆரம்பம்.<br>- விவசாய, வர்த்தக நடவடிக்கைகள்.<br>- சிந்தனை சுதந்திரம்<br>• தத்துவஞானிகள்.<br>• விஞ்ஞானிகள்<br>• சிந்தனையாளர்கள்.<br>- சமயம்.<br>- கலை.<br>- மக்கள் வாழ்க்கை<br>- மகா அலெக்சாந்தரின் எழுச்சி (பேரரசு விரிவடைதல்)<br>7.2.2 உரோமாபுரி.<br>- அமைவிடம், பரம்பல்<br>- ஆட்சி முறை, குலம், குடியரசு, பேரரசு.<br>- சட்டம், சட்ட நிர்வாகம்.<br>- சமயம்.<br>- வர்த்தகம் - நாணயம் பயன்படுத்தல்., உள்நாட்டு வர்த்தகம்.<br>- மக்கள் வாழ்க்கை.<br>- நடைமுறைக்குட்படுதல்.<br>உதாரணம் :<br>கிரேக்கத்தில் தத்துவங்களாக இருந்தவை உரோமில் நடைமுறைக்கு வந்தமை. | 10 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| | இந்திய நாகரிகத்தின் சிறப்பான அம்சங்களை விவரிப்பார். | 7.2.3 இந்தியா.<br>- வேத காலத்திலிருந்து மகத பேரரசுவரை.<br>• குலங்கள் (நான்கு வர்ணங்கள்)<br>• பதினாறு பாரிய குடியேற்றங்கள்<br>• பேரரசுக் காலம்<br>• சிறப்புப் பண்புகள்<br>• சமயச் சிந்தனை விருத்தி<br>• இந்து<br>• சமணம்<br>• பௌத்தம்.<br>• கலையும் இலக்கியமும்.<br>• இதிகாசங்கள்<br>• அரசியல் சிந்தனைகள்.<br>• சமூக அமைப்புகள்.<br>• வர்ண முறை.<br>• பொருளாதாரம்<br>• விவசாயம்<br>• வர்த்தகம்<br>• கைத்தொழில்<br>• கல்வி. | |
| | • அரேபிய நாகரிகம் தோற்றம் முதல் பரம்பல் வரையுள்ள சிறப்பான அம்சங்களை அட்டவணைப்படுத்துவார். | 7.2.4 அரேபியா<br>• தோற்றம் - பரம்பல்<br>• இஸ்லாம் சமயத்தின் பரம்பல்<br>• மொழியும் இலக்கியமும்<br>• வர்த்தகம்<br>• விஞ்ஞானம், மருத்துவம்.<br>• கைத்தொழில்<br>• கட்டடக் கலை<br>• மக்கள் வாழ்க்கை | |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.3 தென்னிந்தியப் படையெடுப்பும் அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| தென்னிந்திய செல்வாக்கு, அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமான விதத்தை விவரிப்பார். | • இலங்கையில் பல்வேறு செல்வாக்குகளைச் செலுத்திய தென்னிந்திய அரசுகளை இந்திய புறவுருப்படத்தில் குறித்துப்பெயரிடுக.<br>• இலங்கை, தென்னிந்திய அரசுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளின் இயல்பினை ஆராய்வார்.<br>• அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சி யடைந்தமைக்கு தென்னிந்திய படை -எடுப்புக்கள் செல்வாக்குச் செலுத்திய விதத்தினை விபரிப்பார். | 7.3 தென்னிந்திய படையெடுப்பும் அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைதலும்.<br>7.3.1 தென்னிந்திய அரசுகளும் அவற்றின் செல்வாக்கும்.<br>• இலங்கையில் பல்வேறு செல்வாக்குச் செலுத்திய தென்னிந்திய அரசுகள்<br>• தென்னிந்திய அரசுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளின் தன்மை.<br>  • இராச தந்திரம்<br>  • சமயம், கலாசாரம்<br>  • பொருளாதாரம். | 02 |
| | • அனுராதபுரம் வீழ்ச்சியடைதலும் சோழர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்ட விதத்தினை விளக்குவார். | 7.3.2 தென்னிந்தியப் படையெடுப்பு.<br>தென்னிந்திய படையெடுப்புக்களுக்கு இலங்கை உட்பட்டமைக்கான காரணங்கள்.<br>• இலங்கை, தென்னிந்தியா மீது மேற் கொண்ட படையெடுப்பின் தன்மை.<br>கட்டம் - 01 - படையெடுப்பு ஆட்சிக்குப் பழக்கப்படுதல்.<br>கட்டம் - 02 - பொருளாதார நன்மைகளுக்கு<br>கட்டம் - 03 - அரசியல் ஆதிக்கம் பெறுவதற்கு | 02 |
| | | 7.3.3 அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைதலும் சோழர் ஆதிக்கமும்.<br>• அனுராதபுர இராச்சியம் வீழ்ச்சி யடைந்தமைக்கான காரணங்கள்.<br>• சோழர் ஆதிக்கம் உருவாகுதல்.<br>• சோழர் ஆட்சி நடைபெற்ற விதம். (மும்முடி சோழ மண்டலம்) | 02 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.4 பொலன்னறுவை இராச்சியம்

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| பொலன்னறுவை இராச்சியத்தில் முக்கியத்துவம் பெறும் அரசர்கள், அவர்கள் அரசியல், கலாசாரம், பொருளாதாரம் என்பவற்றிற்குச் செய்த பணிகள் என்பன பற்றி விவரிப்பார். | • முதலாம் விஜயபாகு மகாபராக்கிரமபாகு ஆகிய மண்ணர்களின் பணிகளைப் பகுப்பாய்வு செய்வார்.<br>• பொலன்னறுவைக் காலத்தின் கடைசி மன்னனான நிசங்கமல்லனின் பணிகளை விவரிப்பார்.<br>• பொலன்னறுவை இராச்சியத்துக்கு தலைமைத்துவம் அளித்த பெண்மணிகளின் அரசியல் நடவடிக்கைகளை விசாரணை செய்வார். | 7.4 பொலநறுவைக் கால அரசர்கள் மற்றும் அவர்களின் பணிகள் பற்றிய முக்கிய அம்சங்கள்.<br>• முதலாம் விஜயபாகு<br>• மகாபராக்கிரமபாகு<br>• நிசங்கமல்லன்<br>• இராணி லீலாவதி | 09 |
| | | 7.4.2 மாகனின் படையெடுப்பு<br>• படையெடுப்பின் இயல்பு<br>• மாகனின் ஆட்சி. | 06 |
| • பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சி -யடைந்தமைக்கான காரணங்களை ஆராய்வார். | • அனுராதபுர நாகரிகம் சீரழிந்ததற்கு மாகனின் படையெடுப்பு எவ்வளவிற்குச் செல்வாக்குச் செலுத்தியது என்பதை விவரிப்பார். | 7.4.3 பொலன்னறுவையின் வீழ்ச்சி<br>• வீழ்ச்சிக்கான காரணங்கள். | |

## 7.5 மத்தியகால ஐரோப்பா

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| • மத்தியகால ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார சமூக மாற்றங்களை விவரிப்பார். | • கிறிஸ்து சமயத்தின் தோற்றம் பரம்பல் பற்றிய தகவல்களை விவரிப்பார். | 7.5 மத்தியகால ஐரோப்பா<br>7.5.1 கிறிஸ்து சமயப் பரம்பல்<br>• கிறிஸ்து சமயத்தின் தோற்றம்<br>• அது உரோமப் பேரரசின் அரச சமயமாக்கப்பட்டமை.<br>• பாப்பரசரும் கிறிஸ்தவ திருச்சபைகளும் | 02 |
| | • மானிய முறைக்காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல், பொருளாதார சமூகக் கட்டமைப்புப் பற்றிப் பகுப்பாய்வு செய்வார். | 7.5.2 மானிய முறை<br>• தோற்றம்<br>• அடிப்படைப் பண்புகள்<br>• வீழ்ச்சி | 02 |
| | • சிலுவை யுத்தத்திற்கான காரணங் -களையும் அதன் விளைவுகளையும் விபரிப்பார். | 7.5.3 சிலுவை யுத்தம்<br>• அறிமுகம்<br>• சிலுவை யுத்தத்தின் செல்வாக்கு. | 02 |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.6 பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் இலங்கை.

| தேர்ச்சி | தேர்ச்சிமட்டம் | விடய உள்ளடக்கம் | பாடவேளை |
| --- | --- | --- | --- |
| • மத்தியகால இலங்கையில் இடம் பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளை | • இலங்கையின் இராசதானிகள் இடம் பெயர்ந்தமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை விவரிப்பார். | 7.6 பொலநறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் இலங்கை.<br>7.6.1 இலங்கையின் இராசதானிகள் இடம் பெயர்ந்தமை.<br>• தம்பதெனிய, யாப்பகூவா, குருணாகலை, கம்பளை, கோட்டை.<br>• முக்கிய அரசர்களினுடைய அரசியல் செயற்பாடுகள். | 05 |
| | • பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பதினைந்தாம் நூற்றாண்டுவரையுள்ள காலப்பகுதியில் இலங்கை மக்களின் வாழ்க்கைக் கோலம், சமய, இலக்கிய நடவடிக்கைகள் என்பன பற்றிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்வார். | 7.6.2 வாழ்க்கைக் கோலம்<br>7.6.3 சமய வளர்ச்சியும் இலக்கியமும். | 05 |
| | • யாழ்ப்பாண இராச்சியத்தின் முக்கிய அரசர்களைப் பற்றிய தகவல்கள் அடங்கிய கையேடு தயாரிப்பார். | 7.6.4 யாழ்ப்பாண இராச்சியம் | 02 |

# 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்.

வரலாறு பாடத்திட்டதின் உள்ளடக்கக் கருத்துக்களை வெற்றிகரமாகவும் செயற்றிறன் வாய்ந்த வகையிலும் கற்பதற்கும் அதனூடாக கற்றல் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் ஏற்புடைய வகையில் மாணவர்களின் பங்கு பற்றலை விருத்தி செய்யும் விதமாகப் பாடசாலை வேலைத்திட்டம் வழங்கப்படுதல் மிகவும் அவசியமாகும். இவ்வேலைத்திட்டம் மாணவர்களின் வாழ்க்கைக்கும் அவர்களது சமூகத்திற்கும் நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும்.

இங்கு அவ்வாறான சில ஆலோசனைகள் மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப வேறு ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் தயாரிப்பதற்கான சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

- வரலாற்று மன்றத்தை நிறுவி அறிவு வளர்ச்சிக்கான கலந்துரையாடல்கள், கூட்டங்கள், விவாதங்கள், கண்காட்சிகள், சஞ்சிகைகள், சுவர் பத்திரிகைகள் போன்றவற்றில் ஈடுபடுவதற்கு வழிப்படுத்துதல்.

- மேலும் காலத்திற்கு காலம் வரலாறு முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு அல்லது பிரதேசங்களுக்கான கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல் வேண்டும். வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் விருத்தி செய்து கொள்வதற்கும் ஏதுவாக முன்னேற்பாட்டுடன் கூடிய கல்விச் சுற்றுலாவை ஒழுங்குபடுத்தல் முக்கியமானது.

- இலங்கையின் புகழ்பெற்ற வரலாற்றாய்வாளர்களை பாடசாலைக்கு வரவழைத்து அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுக்கவும்.

- தொல்பொருள்கள் அழிவுக்குள்ளாகி வரும் இன்றைய காலகட்டத்தில் பிரதேசத்தில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் தொடர்பாகத் தேடியாராயவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் பாடசாலை, மக்கள் பங்குபற்றலுடனான மக்கள் வேலைத்திட்டங்களையும் மேற்கொள்ளல்.

- வரலாற்று பாடத்திற்குரிய சித்திரங்கள், சிலைகள், செதுக்கல்கள் ஏனைய அரும் பொருட்களை அவதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கக்கூடியவாறும் அருங்காட்சியகத்தின் நிகழ்ச்சி நிரலை ஏற்பாடு செய்தல் உகந்தது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## பகுதி - II

# கற்றல் - கற்றல் முறையியல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# அறிமுகம்

இப்பாடத்திட்டத்திற்கு ஏற்ப கற்றல் - கற்பித்தல் முறைமைகளைத் தீர்மானிக்கும்போது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களிடத்தில் தேர்ச்சிகளை உருவாகுவதற்கு ஏற்ற வகையில் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தேர்ச்சி மட்டக் கல்விக்கு ஆயத்தம் ஆகும்போது ஆசிரியர் பங்கில் தெளிவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

எமது வகுப்பறைகளில் கடந்த காலங்களில் பரவலாகச் செயற்படுத்தப்பட்டு வந்த கடத்தும் வகிபங்கு (Transmission Role), பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட பரிமாற்ற வகிபங்கு (Transaction Role) என்பன வகுப்பறையில் இப்போதும் காணப்படுகின்றன. பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளிடத்தில் காணப்படும் சிந்தனைத் திறன்கள், தனியாள் திறன்கள், சமூகத் திறன்கள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை கருத்திற் கொள்வதன் மூலம் கற்றல் - கற்பித்தல் முறைமைகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திசார் மாற்றங்களையும், அவை எவ்வாறு செய்யப்படல் வேண்டுமென்பதையும் இனங் காண்பது கடினமன்று.

கடத்தும் வகிபங்கில், கற்பிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவற்றையும் ஆசிரியர் தான் தெரிதுள்ளதாக எடுத்துக் கொண்டு, மாணவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக ஒன்றுமே அறிந்திராதவர் எனக் கருதிக் கொண்டு விடய அறிவை மாணவர்களுக்குச் செலுத்தும் ஒருவராகவே காணப்படுவார். இம்முறையில் ஆசிரியர் விரிவுரையாளர் போலத் தொழிற்படுவதோடு, மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கோ, மாணவர்களின் தனியாள் திறன்களை, சமூகத் திறன்களை விருத்தி செய்வதற்கோ செய்யும் பங்களிப்பு போதுமானதல்ல.

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுவது, பரிமாற்றல் வகிபங்கின் ஆரம்ப கட்டமாக அமைகின்றது. இதன்போது ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியருக்கும் கருத்துக்கள் பரிமாற்றப்படுவதோடு, அதைத் தொடர்ந்து மாணவர் - மாணவர் இடைத் தொடர்பும் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கிடையிலும் கருத்துப் பரிமாறல் நடைபெறுவதோடு, அது தர்க்கரீதியான கலந்துரையாடலாக மாறும். தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளியதிலிருந்து சிக்கலானதற்கும், தூல விடயத்திலிருந்து கருத்துநிலை விடயத்திற்கும் மாணவர்களைக் கொண்டு செல்லும் வகையில் ஆசிரியர் தொடந்து வினாக்களைத் தொடுப்பதில் ஈடுபடல் வேண்டும்.

தேர்ச்சி மட்டக் கல்வியில் மாணவர் செயற்பாடுகள் வலுவான இடத்தைப் பெறுவதோடு, வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் அந்தந்தத் தேர்ச்சி மட்டங்கள் தொடர்பாகக் குறைந்தது அண்மிய தேர்ச்சிமட்டங்களையாவது அடைந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் ஒரு வளவாளராக (Resource Person) மாற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்றலுக்குத் தேவையான உபகரணங்களும் மற்றும் வசதிகளும் உபகரணங்களும் மற்றும் வசதிகளும் கொண்ட கற்றற் சூழலொன்றைத் திட்டமிடுதல், மாணவர்கள் கற்கும் விதத்தை அருகிலிருந்து அவதானித்தல், மாணவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை இனங்காணுதல், தேவையான முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

வழங்கல் மூலம் கற்றலை விருத்தி செய்வதோடு வகுப்பறைக்கு வெளியிலும் மாணவர்கள் கற்பதற்கும், கற்பதைத் தூண்டுவதற்கும் உரியவாறு கற்றல் உபகரணங்களைத் திட்டமிடுவதும் ஆசிரியரின் அடிப்படைக் கடமைகளாகும். இவ்வாறான ஆசிரியர் பங்களிப்பு நிலைமாற்றல் வகிபங்கு (Transformation Role) எனப்படும்.

ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியின் முதற்பகுதியாக இங்கு அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள விரிவான பாடத்திட்டமும், அதனை அமுல்படுத்தும்போது பயன்படுத்தக்கூடிய செயற்பாடுகள் இரண்டாம் பகுதியாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் குறைந்தது மூன்று படிகளைக் கொண்டதாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. செயற்பாட்டின் முதற்படியில் மாணவர்களைக் கற்றலுக்குத் தயார் செய்வதில் ஈடுபடுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு மாணவர்களைத் தயார் செய்து கொள்ளும்படி (தொடர்புறுத்தும் படி) “ஈடுபடுத்தும் படி” (Engagement Step) எனப்படும். இப்படியில் ஆரம்பத்தில் ஆசிரியர் பரிமாற்றல் வகிபங்கின் மூலம் மாணவர்களுடன் கலந்துரையாடலை ஆரம்பிப்பார். பின்னர் மாணவர்கள் விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவதற்குத் தேவையான முன்னறிவை மீட்கும் வகையிலும், செயற்பாட்டுக்குத் தேவையான சைகைகளைக் கொடுக்கும் வகையிலும் கலந்துரையாடலை விரிவுபடுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கலந்துரையாடலில் கருத்துப் பரிமாற்றலுக்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள் ஆசிரியரிடம் இருத்தல் வேண்டும். வினாக்களை முன்வைத்தல் / படங்கள், பத்திரிகை விளம்பரங்கள், அறிவித்தல்கள், மின் அட்டைகள் (Flash Cards) போன்ற ஆர்வம் ஊட்டுவனவற்றைப் பயன்படுத்தல் / பிரசினங்கள், புதிர்கள், விடய ஆய்வுகள் / கலந்துரையாடல், நடித்தல், கவிதைகள், பாடல்கள், செய்துகாட்டல்கள் (Demonstrations) கட்புல, செவிப்புல சாதனங்கள் போன்றன பயன்படுத்துவதும் வரவேற்கத்தக்கதாகும். முதலாம் படி பின்வரும் மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

* வகுப்பு மாணவர்களின் கவனத்தை ஈர்த்துக் கொள்ளல்.
* தேவையான முன்னறிவை மீட்டிக் கொள்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
* செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கண்டறியும் விடயங்களுக்குத் தேவையான ஆரம்ப விடயங்களை வழங்குதல்.

செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்களுக்குப் பாட விடயங்களைக் கண்டறிந்து கொள்வதற்கும் (Exploration) சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. மாணவர்கள் பேறுகளைக் கண்டு பிடிப்பது, அதற்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட அறிவுறுத்தல் படிவத்தினை அடிப்படையாகக் கொண்டாகும். பாட அலகுடன் தொடர்பான பல்வேறு விடயங்களையும் கூட்டாகச் செயற்பட்டு ஆராய்ந்து குழுவாக் கற்பதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும். வழங்கப்பட்டுள்ள உபகரணங்களையும், மற்றும் வளங்களையும் பயன்படுத்தித் தெளிவான விளக்கத்துடன், தர்க்க ரீதியான கலந்துரையாடலுடன் ஆராய்ந்து பேறுகளைக் கண்டுபிடிப்பது போன்றன இப்படிமுறையில் எதிர்பார்க்கப்படும் முக்கிய பண்புகள் சிலவாகும். இவ்வாறன செயற்பாடுகளில் மாணவர்கள் தொடர்ந்து ஈடுபடுவதால் சுயகட்டுப்பாடு, ஒழுக்கம், ஏனையோருக்கு உதவுதல், நேர முகாமைத்துவம், உயர் தரத்துடனான இறுதிப் பெறுபேற்றைப் பெறல், நேர்மை போன்ற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய பண்புகளை விருத்தி செய்து கொள்ளல் போன்றன மாணவர்களிடத்தில் விருத்தியாகும்.

மாணவர்கள் கண்டுபிடிப்புக்களில் ஈடுபடும்போது குழுத்தலைவர்களைத் தெரிவு செய்வதை ஆசிரியர் தவிர்த்துக் கொள்வதோடு தலைவர் குழுவிலிருந்து உருவாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கக்கூடிய பின்னணியை மட்டும் ஆசிரியர் ஏற்படுத்த வேண்டும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இதனால் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களின் கண்டறிந்த விடயங்களையும் பேறுகளையும் ஏனைய மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கும் போது அக்குழுவின் ஒவ்வொரு அங்கத்தவரும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேலைப்பகிர்வு இருப்பது பயனுடையதாகும். கண்டறிந்தவற்றை விளக்கமளித்தல் (Explanation) இப்படியின் முக்கிய எதிர்பார்ப்பு ஆகும். வகுப்பறையில் வழக்கமாக ஒலிக்கும் ஆசிரியர் குரலுக்கு மேலதிகமாக மாணவர்களின் குரல்களும் கருத்துள்ளவாறு ஒலிக்கத் தொடங்குகின்றது. இது இப்படியில் உள்ள முக்கிய அம்சமாகும்.

செயற்பாட்டின் மூன்றாம் படியில் குழுக்களால் கண்டறிந்தவற்றையும் பேறுகளையும் மேலும் விருத்தி செய்து ஆழமாக விரிவாக்கிக் கொள்வதற்கு (Eleboration) மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பித்த பின் அவற்றை மேலும் அபிவிருத்தி செய்யும் வகையிலான கருத்துக்களை வழங்குவதற்கு முதலில் அக்குறிப்பிடப்பட்ட குழுவின் அங்கத்தவர்களுக்கும், பின்னர் ஏனைய குழுக்களின் அங்கத்தவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம் இது நிறைவேற்றப்படுகின்றது. எவ்வாறாயினும் இறுதியில் பேறுகளைத் தொகுப்பது ஆசிரியரின் பொறுப்பாகும். இதன்போது மாணவர்கள் ஆராய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்ட முக்கிய விடயங்கள், எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், விதிகள் போன்றவற்றை மாணவர்களிடையே உறுதிப்படுத்திக் கொள்வது எதிர்பார்க்கப்படுகின்றது.

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செய்கை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் வெற்றிகரமாக நடைபெறுகிறதாவெனத் தொடர்ந்து தேடிப் பார்ப்பது இம்முறையின் கீழ் ஆசிரியரது பிரதான கடமையாகும். இதற்கான கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த வேண்டியதோடு, இது கற்றல் - கற்பித்தற் செய்கையினுள் இடம்பெறுவதற்கு, திட்டமிட்ட செயற்பாட்டுகளைத் தயாரிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஆசிரியருக்கு வழங்குகிறது. செயற்பாட்டின் இரண்டாம் படியில் மாணவர்கள் விடயங்களை ஆராயும்போது கணிப்பீட்டையும் (Assessment), செயற்பாட்டின் மூன்றாம் படியில் மாணவர்கள் அவர்களது பேறுகளை விளக்கும்போது கணிப்பீட்டோடு சார்ந்த மதிப்பீட்டையும் (Evaluation) நிகழ்த்துவதற்கு ஆசிரியருக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான விளக்கம் வேறாகத் தரப்பட்டுள்ளது.

இதுவரை விரிவாக்கப்பட்ட கற்றல் - கற்பித்தல் முறைமை நிலைமாற்றல் பங்களிப்பைச் செய்வதற்கு ஆசிரியரை உட்படுத்துகின்றது. இங்கு குழு ஆய்வுக்கு முதலிடம் அளிக்கப்படுவதோடு கொடுக்கல் வாங்கல், தர்க்க ரீதியான கலந்துரையாடல் என்பவற்றோடு சிறிதளவாக ஆசிரியரின் விரிவுரைக்கும் இடமுண்டு. பாடப் பிரவேசத்தின் போது பரிமாற்றல், கலந்துரையாடல் முறை என்பன நடைபெறுவதோடு, இறுதிப்படியில், தொகுப்பின் கீழ் சிறிய விரிவுரைக்கும், அத்தோடு எண்ணக்கரு உருவாவதற்கும் இடம் ஏற்படுகிறது. புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தயாரிக்கப்பட்ட இப்பாடத்திட்டத்தோடு தொடர்பான கற்றல் - கற்பித்தல் முறைமைகளை அபிவிருத்தி செய்யும்போது நிலைமாற்றல் வகிபங்குக்கு மேலதிகமாக கடத்தும் வகிபங்கிலும், பரிமாற்றல் வகிபங்கிலும் காணப்படக்கூடிய முக்கிய இயல்புகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளமை இம்முறையின் விசேட தன்மையாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# வரலாறு கற்பித்தலுக்கான உத்திகள்.

வரலாற்றைக் கற்பிக்கும் ஆசிரியர் தகவல்களை வழங்குவதை விட தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் மாணவர்கள் ஊக்கம் பெறுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால் கற்பித்தல் பணி மிகவும் பயனுள்ள தாகும். எனவே இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் கலந்துரையாடுதல் மூலங்களைப் பயன்படுத்துதல், அவதானித்தல் போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துதல் விரும்பத்தக்கதாகும். வரலாற்றைக் கருத்துள்ள வகையில் கற்பதற்கு மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சில வழிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய அருங்காட்சியகம், பிரதேச அருங்காட்சியகம் போன்றவற்றின் மூலம் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களின் கீழ் அருங்காட்சிப் பொருள்களைப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

- மாணவர்கள் பிரதேச வரலாற்றை அறிந்து கொள்ள ஆர்வம் மூட்டுவதினூடாகத் தேசிய வரலாற்றை அறிய வழிப்படுத்தல்.

- ஊடகங்கள் மூலம் தகவல்களைப் பெறச் சந்தர்ப்பம் வழங்குதல். (வானொலி, தொலைக்காட்சி, கல்விச்சேவை.)

- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிட ஆர்வமூட்டுதல்.

- ஆதாரமான மூலங்களைப் பயன்படுத்துவதற்கு ஆர்வமூட்டுதல்.

- மாணவர் தமது ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பங்களை வழங்கும் விதத்தில் செய்திப்பத்திரிகைகள். சஞ்சிகைகள் வெளியிடுதல், கண்காட்சிகள் நடத்துதல், பாடசாலை அருங்காட்சியகத்தை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட ஊக்கம் அளித்தல்.

- வரலாற்று ஆசிரியராகிய உங்களால் தற்காலப் பிரச்சினைகளை நடுநிலையாகவும் யதார்த்தமாகவும் நோக்குகின்ற திறனுள்ள குடிமக்களை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்ய முடியும். இதற்கான உங்களது பொறுப்பு மிகப் பெரிதானதாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# புராதன நதிக்கரை நாகரிகம்

**அலகு 7.1** **(10 பாடவேளைகள்)**

## அறிமுகம்

புராதன காலந்தொட்டு மனிதன் தனது வாழ்க்கைக்காகப் பல்வேறு வாழ்வாதார முறைகளில் ஈடுபட்டான் என்பதனை அறிய முடிகின்றது. அதற்காகப் பொருத்தமான இடங்களில் தமது வீடுகளை அமைத்துக் கொள்ள அவர்கள் சிந்தித்தனர்.

ஆரம்ப காலத்தில் வேட்டையாடி வாழ்ந்த மனிதனுக்கு நிரந்தர வசிப்பிடங்கள் இருக்கவில்லை. வேட்டை கிடைக்காவிடின் உணவின்றி இருந்தார்கள். உணவு தொடர்பாக நிச்சயமின்மையினால் நிரந்தரமான வசிப்பிடங்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இவ்வாறு நிரந்தரமற்ற ஜீவனோபாயத்துடன் வாழ்ந்த வேட்டையாடுங் கால மனிதர்கள் பிற்காலத்தில் ஓரிடத்தில் குடியேறுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

புதிய கற்கால யுகத்தில் வாழ்ந்த மனிதர்கள் வேட்டையாடுவதை மட்டுமன்றி விலங்கு வளர்ப்பு, வேளாண்மை செய்தல் என்பவற்றையும் செய்ய அறிந்து கொண்டனர். மண்வீடுகளை அமைக்கவும், நெருப்பை உபயோகித்து உணவு சமைக்கவும் பழகிக் கொண்டனர்.

இவ்வாறாக வாழ்ந்த மக்கள் தமது உணவை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்ள ஒரு வழியைத் தேடினர். அதற்காக பிரதானமாக விவசாயத்தில் ஈடுபட்ட அவர்கள் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு நதிக்கரைகள் மிகவும் பொருத்தமானவை என விளங்கிக் கொண்டனர். எனவே அவ்விடங்களில் குடியேற ஆரம்பித்தனர். அப்பிரதேசங்களில் காணப்பட்ட வளமான மண், நீர், பொருத்தமான காலநிலை போன்ற காரணிகள் வசிப்பிடங்களை அமைக்கும் போது கவனத்தில் எடுக்கப்பட்டன.

இவ்வாறு நதிக்கரைகளில் குடியேறிய மனிதர்களுக்கு தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு செல்வது மிகவும் இலகுவாக இருந்தது.அங்கு அவர்களுடைய உணவை நிரந்தரமாகப் பெற்றுக் கொள்வதற்கு வழி ஏற்பட்டமையால் வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய விடயங்கள் பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு மேலும் சந்தர்ப்பம் கிடைத்தது. நிர்வாக நடவடிக்கைகள், சமய நம்பிக்கைகள், கட்டடம் அமைத்தல், கலை நிர்மாணங்கள், போக்குவரத்து, வைத்தியத்துறை போன்றவற்றில் கூடிய அக்கறை செலுத்தியமையால் அவர்களுக்கு சிறந்த நாகரிகம் ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடிந்தது.

பிரதானமான நான்கு நதிக்கரைகளில் தோன்றிய அவ்வாறன சிறந்த நாகரிகங்கள் பற்றியும். அவற்றால் உலகம் பெற்றுக் கொண்ட கொடைகள் பற்றியும் கற்றல் இந்த அலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**விடய உள்ளடக்கம் :**

**தேர்ச்சி** :- உலகின் நாகரிகத்தின் ஆரம்ப வளர்ச்சி ஆகியவற்றை கற்று அதன் பின்னரான நாகரிகம் தொடர்பாக விசாரித்து அறிவார்.

**தேர்ச்சிமட்டம்** :- விவசாயத்துக்குச் சாதகமான வளமான மண்/ சமதரை, நீர் வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப குடியிருப்புக்களுக்காக நதிப்பள்ளத்தாக்குகள் தெரிவு செய்யப்பட்ட விதத்தை விவரிப்பார்.

- புராதன நதிக்கரை நாகரிகங்களின் பரம்பலைத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- புராதன நதிக்கரை நாகரிகங்களின் சிறப்புப் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.
- நதிக்கரை நாகரிகங்களிலிருந்து பிற்கால நாகரிகங்கள் பெற்றுக்கொண்ட கொடைகள் பற்றித் தகவல்களைக் கற்றறிந்து அவற்றை மென்மேலும் விரித்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.

**விடய உள்ளடக்கம் :**

## 7.1 புராதன நதிக்கரை நாகரிகங்கள்

- **நதிக்கரை நாகரிகங்கள் தோன்றுவதில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி**

மந்தைவளர்ப்புக் காலத்தின் பின் ஆரம்பிக்கும் புதிய கற்கால யுகத்தில் மனிதர்கள் விலங்கு வளர்ப்பு, விவசாய நடவடிக்கைகள் போன்றனவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தனர். பின்னர் உணவைப் பெற்றுக் கொள்வதற்கு நிரந்தரமான வழியைத் தேடிய அவர்கள் அதற்கு மிகவும் பொருத்தமான பிரதேசமாக நதிக்கரைகளைத் தெரிவு செய்து கொண்டனர்.

### 7.1.1 வசிப்பிடமாக நதிக்கரைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கான காரணங்கள்


- வளமான மண்.
- நீர் வசதி.
- சமவெளியான நிலம்.
- பொருத்தமான காலநிலை.

### 7.1.2 நதிக்கரைகளை அண்டித் தோன்றிய நாகரிகங்கள்

- மொசபத்தேமியா - யூப்பிரட்டீஸ், தைகிரிஸ் நதிகள்.
- எகிப்து - நைல்நதி.
- இந்தியா - இந்துநதி.
- சீனா - குவாங்கோநதி.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

நதிக்கரைகளின் அமைவிடத்தையும் பரவலையும் காட்டும் படம்




இணைப்பு 7.1.1.

### 7.1.2.1 மொசப்பத்தேமிய நாகரிகம்

அமைவிடமும் பரம்பலும்

பாரசீகக் குடாவில் சங்கமிக்கும் யூப்பிரட்டீஸ், தைகிரிஸ் நதிகளுக்கிடைப்பட்ட பிரதேசம் முழுவதும் பரந்துள்ளது.




தேசப்படம். 7.1.2

தற்போது ஈராக் என அழைக்கப்படுவது இப்பிரதேசமாகும்.




Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**சிறப்பு அம்சங்கள்**

- ஆட்சி முறை

  - ஆரம்ப காலத்தில் சுதந்திரமான நகர ஆட்சி முறையொன்று காணப்படல்.
  - "பட்டேஸிஸ்" என அழைக்கப்பட்ட குருமார்கள் நிர்வாகம் செய்தல்.
  - கடவுள் வழிபாட்டுத்தலமே நிர்வாகத்தின் பிரதான மத்திய நிலையமாகும்.
  - அது "சிகுரான்" என்னும் பெயரால் அழைக்கப்படல்.

சிகுராத் தேவாலயம்



படம். 7.1.1

- பிற்காலத்தில் இரு நகரங்களுக் கிடைப்பட்ட பிரதேசங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு பபிலோனியப் பேரரசு உருவாக்கப்படல்.

- "ஹம்முராபியினால்" சட்டத் தொகுதி தயாரிக்கப்படல்.

**பொருளாதாரத் தகவல்கள்**

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைகள் நடைபெறல்.

- விவசாய உற்பத்திகள்
  - தானியங்கள் - கோதுமை, வாற்கோதுமை.
  - காய்கறிகள் - சின்ன வெங்காயம், உள்ளி, சலாது, கரட்.
  - பழங்கள் - பேரீச்சம்பழம், மாதுளை, அப்ரிகட், பீச்சஸ், திராட்சை, அத்திப்பழம்.
  - இறைச்சி வகை - ஆட்டிறைச்சி, செம்மறியாட்டிறைச்சி, மாட்டிறைச்சி, வெண்ணெய், வெண்ணெய்க்கட்டி, பால்.
  - மீன்பிடிக்கைத்தொழில் - மீன், கருவாடு, தேனீ வளர்ப்பு.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- **கைத்தொழில் உற்பத்தி**

    - விவசாயக் கைத்தொழிலுக்கு அவசியமான உபகரணங்கள் - கலப்பை, அரிவாள், கத்தி என்பனவற்றை உற்பத்தி செய்தல்.
    - மதகுருமார்களால் அவசியமான உணவும் விதைவகைகளும் பகிர்ந்தளிக்கப்படல்.

- **போக்குவரத்து**

    கழுதைகள்,எருதுகள்,குதிரைகள் என்பவற்றைப் பயன்படுத்தியும் மூங்கில்களால் தயாரிக்கப்பட்ட வட்டவடிவமான படகுகள் பயன் படுத்தியும் கப்பல்கள்கட்டியும் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

- சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும்.
    பிரதானமான கடவுள் நால்வர் பற்றிய எண்ணக்கரு.
    பூமிக்கு அதிபதி - என்லே
    தேவலோகத்துக்கு அதிபதி - அனு
    சமுத்திரத்துக்கு அதிபதி - என்கி
    கல்விக்கு அதிபதி - ஏனில்

- எல்லா நகரங்களுக்கும் தேவாலயங்கள் இருந்தன.

- கோள் நட்சத்திரங்களுக்கு வழிபாடுகள் செய்தல்.

- **கலாசாரம்**

    கல்வி - முதலாவது பாடசாலை சுமேரியாவில் கட்டப்பட்டது.
    - தொழில்களில் ஈடுபடுவதற்காகக் கல்வி வழங்கப்பட்டது.

- கலை, கைப்பணி - கொல்லர்கள், பொற்கொல்லர்கள், அரக்கு வேலை செய்வோர், கண்ணாடி வேலை செல்வோர், தச்சர்கள், நுட்பமான சிற்பிகள், சிலை செதுக்குவோர், செதுக்கல் செய்வோர்.

    கலைநுட்பத்தின் மாண்பைக் கூறும் வெண்கலத்தாலான தலையொன்று.



பட உரு. 7.1.2

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- எழுத்துக்கலை - முதன் முதலாக எழுத்துக்களை அறிமுகப்படுத்துதல் உருவ எழுத்து முறை - மண் தட்டின் மீது எழுதுதல்.

களிமண்ணாலான அறிவித்தல் பலகை.



பட உரு. 7.1.3

- ஆடை அணிகள்
    - செம்மறியாட்டு உரோமம் (கம்பளி) அதிகமாக உபயோகித்தல்.
    - லினன் புடைவை எகிப்திலிருந்து பெற்றுக் கொள்ளல்.
    - இழைக்கப்பட்ட கடினமான உரோமப் புடைவைகளை (கம்பளிப் புடைவைகளை) மென்மைப்படுத்த அறிந்திருத்தல்.
    - உயர் குலத்தவர்கள் முழு உடம்பும் மறையும் வகையில் ஆடை அணிந்ததுடன் சாதாரண மக்கள் இடுப்புக்குக்கீழ்ப்பட்ட பகுதி மறையும் விதத்தில் உடைகளை உபயோகித்தல்.
    - தங்கம், வெள்ளி, முத்து என்பவற்றால் ஆபரணங்கள் தயாரித்தல்.


- வீடுகள் மூன்று வகையாக இருந்தன.
    - ஏழை மக்கள் கூம்பு வடிவ முகடுள்ள வீடுகளில் வசித்தனர்.
    - அவை காய்ந்த பச்சைச் செங்கற்களினால் அமைக்கப்பட்ட வீடுகளாகும்.
    - பணக்காரர்களின் வீடுகள் சுட்ட செங்கற்களால் நீள் வடிவில் அமைக்கப்பட்டவையாகும்.
    - உயர் குலத்தவர்களின் வீடுகளில் சதுர வடிவான முற்றம் ஒன்று மத்தியில் இருந்ததோடு அவ்வீடுகள் சுட்ட செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தன.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பிற்கால நாகரிகங்களுக்குக் கிடைத்த கொடைகள்.
    - எழுத்துக் கலை.

- கல்வி விருத்திக்கு எழுத்துக்கலையின் செல்வாக்கு.
    - விஞ்ஞான தொழினுட்ப அறிவு.
    - வெண்கலப் பயன்பாடு ஆரம்பிக்கப்படல்.
    - ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்கள் என்றும், ஒரு மாதத்துக்கு 30 நாட்கள் எனவும், ஒரு வருடத்துக்கு 365 நாட்கள் எனவும் அறிந்திருத்தல்.
    - அளவிடும் கலை - வானியல், கணிதம் பற்றிய அறிவு.
    - கைத்தாளம், புல்லாங்குழல், வீணை, மேளம் ஆகிய சங்கீத உபகரணங்களைப் பயன்படுத்துதல்.
    - தரைப் போக்குவரத்துக்கு மாட்டுவண்டியையும், கடற் போக்குவரத்துக்கு கப்பல்களையும் பயன்படுத்துதல்.
    - அளவை, நிறுவை முறைகள்.
    - ஒரு வட்டத்தை 360' பாகைகளாகப் பிரித்தல்.
    - 60 செக்கன் ஒரு நிமிடம், 60 நிமிடம் - ஒரு மணித்தியாலம் என்பது சுமேரியர்களினால் பிற்கால நாகரிகத்துக்கு வழங்கப்பட்ட கொடையாகும்.
    - மருந்துகளும், மூலிகைத் தாவரங்களும் பற்றிய அறிவு.

## 7.1.2.2 எகிப்திய நாகரிகம்




தேசப்படம் 7.1.3

- அமைவிடமும் பரம்பலும்

- நைல் நதியை அண்மித்த பகுதிகளில் பரவியிருந்தமை, தற்போதைய சூடான்,எகிப்து பிரதேசங்களில் பரவியிருந்தமை.

- ஆரம்ப காலத்தில் மேல் எகிப்து, கீழ் எகிப்து என இரு இராச்சியங்கள் இருந்தமை.

- மெம்பீஸ் நகரத்தைத் தலைநகராக்கிக் கொண்டு மேகஸ் என்னும் அரசன் இவ்விரு இராச்சியங்களையும் ஒருங்கிணைத்தல்.

- **சிறப்பு அம்சங்கள்**

**ஆட்சி முறை**

- எகிப்திய மன்னர்கள் ‘பாராவோ’ என அழைக்கப்படல்.

- மன்னன் தெய்வமாக மதிக்கப்பட்டமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.


- எல்லையற்ற அதிகாரங்களுக்கு உரிமையாகியிருந்த பாராவோ மன்னர்கள் சட்டதிட்டங்களை ஆக்கியமை, வரி அறவிடல் போன்ற கருமங்கள் செய்தமை.

- மத குருமார்களினதும், உயர் குலத்தவர்களினதும் உதவியும், ஆலோசனைகளும் பெற்று நிர்வாக நடவடிக்கைகளை நடாத்திச் சென்றமை.

- மாவட்டம், மாநகரம், சிறு நகரம், என்றவகையில் நாடு பிரிக்கப்பட்டிருந்ததோடு, நிர்வாகத்துக்காக பல்வேறு பதவிகளைக் கொண்ட அதிகாரிகள் இருந்தமை.

- பாராவோ மன்னர்கள் மரணத்தின்பின் தமது பூதவுடலைப் பேணி வைப்பதற்கு பிரமிட் என்னும் கட்டடங்களை கட்டியமை.

பிரமிட்.



உரு 7.1.4

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- **பொருளாதாரத் தகவல்கள்**

  - விவசாய நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையொன்று இருத்தல்.

- **விவசாய உற்பத்திகள்**

  - தானியங்கள் - கோதுமை, வாற்கோதுமை.
  - காய்கறிகள் - போஞ்சி, கோவா, ஈரவெங்காயம்.
  - பழங்கள் - செம்பூசனி, (வத்தகை) திராட்சை, ஒலிவ், பேரீச்சம்பழம்.
  - இறைச்சி வகை - மீன் உற்பத்திகள்.

- **கைத்தொழில் உற்பத்திகள்**

    - மரக் கலப்பை, துலாக் கிணறு முறை என்பவற்றைப் பயன்படுத்தல்.

    - அரிவாள் ஆரம்பத்தில் செப்பினாலும், பின்னர் வெண்கலத்தினாலும், இரும்பினாலும், உருவாக்குதல்.

- **போக்குவரத்து**

    - கடல்மார்க்கம் :- பாய்க்கப்பல், தோணி.
    - தரைமார்க்கம் :- மாட்டுவண்டி, குதிரை வண்டி.

- **சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும்**


    - பல கடவுள் கொள்கை.

    - தெய்வங்களுக்காக அழகான ஆலயங்களை அமைத்தல்.

    - ஒவ்வொரு நகரத்துக்கும் சிறப்பான ஒவ்வொரு தெய்வம் (கடவுள்) இருத்தல்.

    - மறு பிறப்பில் நம்பிக்கை.


அபுசிம்பல் கோயில்



பட உரு 7.1.5

- **கலாசாரம்**

எகிப்திய எழுத்துக்கள்



பட உரு 7.1.6

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- **கல்வியும் எழுத்துக் கலையும்**

  - சித்திர எழுத்து முறையொன்றைப் பயன்படுத்துதல்.
  - ஆரம்ப காலத்தில் எழுத்துக்களை எழுதும் முறையை மதகுருமார்களும், எழுதுனர்களும் மாத்திரம் அறிந்திருத்தல்.
  - பிற்காலத்தில் மத வழிபாட்டுத் தலங்களுக்கு அண்மையில் பாடசாலைகள் உருவாதல்.
  - அவற்றில் மாணவர்களுக்கு வாசிப்பு, எழுத்து, கணிதம் என்பன கற்பிக்கப்படல்.
  - 24 எழுத்துக்களைக் கொண்ட அரிச்சுவடியொன்று உருவாக்கப்படல்.

- **கலைத்திறன்**

  - மத வழிபாட்டுத் தலங்கள் அமைத்தல்.
  - அவ் வழிபாட்டுத்தலங்களின் சுவர்களை மனிதர்களின் அன்றாட வாழ்க்கையோடும், சமயத்தோடும் சம்பந்தமான சித்திரங்களினால் அலங்கரித்தல்.
  - கட்டட நிர்மாணக் கலையின் அற்புதமான தயாரிப்பாகக் கருதக் கூடிய பிரமிட்களை அமைத்தல்.

- **ஆடை அணிகள்**

  - லினன் துணியைப் பயன்படுத்தல்.
  - கம்பளி நார்களினால் மென்மையான துணிகளை நெய்தலுக்கும், அவற்றை வர்ணமேற்றுவதற்கும் அறிந்திருத்தல்.
  - மென்மையான ஆடைகளை உபயோகித்தல்.
  - பாதணிகள் தொப்பிகள் உபயோகித்தல்.
  - முத்துக்களினாலான ஆபரணங்களை அணிதல்.
  - வாசனைப் பொருட்கள், வாசனைத் தைலங்கள் (எண்ணெய் வகைகள்) உபயோகித்தல்.

- **பிற்கால நாகரிகங்களுக்குக் கிடைத்த கொடைகள்**

**எழுத்துக் கலை**


- உலகுக்கு கடதாசி, பேனை, மை போன்ற எழுத்து உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- ஆரம்பத்தில் எழுதுவதற்குப் (தாளாக) பயன்படுத்தப்பட்ட ஒரு புல் வகையினால் கடதாசி தயாரித்தல்.
- கரி - காய்கறிப் பிசின், ஒட்டடை, என்பவற்றைச் சேர்த்து மை தயாரித்துக் கொள்ளல்.

- **விஞ்ஞான தொழினுட்ப அறிவு**

- முதற் தடவையாக சந்திரனின் பயணப் பாதையை அடிப்படையாகக் கொண்டு நாட்காட்டி ஒன்றைத் தயாரித்தல்.
- சூரியனின் பயணப்பாதை அடிப்படையாகக் கொண்டு மிகவும் சரியான நாட்காட்டி ஒன்று அமைக்கப்படல்.
- எல்லா மாதத்துக்கும் 30 நாட்கள், ஒவ்வொரு பருவத்துக்கும் 4 மாதங்கள் என வரக்கூடிய விதத்தில் ஒரு வருடத்தை மூன்று பருவங்களாகப் பிரித்தல்.
- அவர்களுடைய சூரிய வருட நாட்காட்டி 365 நாட்களைக் கொண்டிருத்தல்.
- சூரிய நிழலின் பிரமாணத்தில் நேரத்தைக் காட்டும் கடிகாரம், நீர்க்கடிகாரம், நேரத்தைக் காட்டும் கண்ணாடிப் பேணி என்பவற்றை அமைத்தல்.

## 7.1.2.3 இந்து நதிக்கரை நாகரிகம்

- அமைவிடமும் பரம்பலும்.
- இந்து நதிக்கரையோரத்தில் அமைக்கப்பட்டிருத்தல்.




பட உரு 7.1.4

- ஹரப்பா நாகரிகத்துக்குரியது என அறியப்படும் மிகவும் பரந்த ஒரு பிரதேசத்தில் பரம்பியிருத்தல்.
- இதுபற்றி பஞ்சாப், இந்து, பலுகிஸ்தான் ஆகிய பிரதேசங்களில் செய்யப்பட்ட அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்படல்.
- பிரதானமாக மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களை மையப்படுத்திக் கொண்டு பரவியிருத்தல்.

**சிறப்பு அம்சங்கள்**

- அரச மாளிகையொன்றின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்படாமையினால், மதகுருமார்களின் ஆட்சிமுறையொன்று இருந்ததாக அனுமானிக்கப்படுகின்றது.
- உயர் குல வகுப்பினரின் நிர்வாகமாக இருத்தல். ( ஆட்சியாக இருத்தல்)

**பொருளாதாரத் தகவல்கள்.**

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கோலமொன்று இருத்தல்.

  - கோதுமை, வாற்கோதுமை, ஈச்சை, பேரீத்தையும், எள், காய்கறி, பழவகை.

  - மொஹஞ்சதாரோவில் பெரிய தானியக்களஞ்சியம் இருத்தல்.

- விலங்கு வேளாண்மை - ஆடு, மாடு, செம்மறியாடு, என்பன இறைச்சிக்காக வளர்க்கப்பட்டன.

- **வியாபாரம்**

- உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரம் இருந்தமைக்கான சான்றுகள் உண்டு. (லோக்கில் துறைமுகத்தில், கப்பல் கட்டும் தளத்திற்கான இடிபாடுகள் கிடைத்துள்ளன.)

- கப்பலொன்றினதும் மீன்களினதும் உருவங்கள் இலச்சினைகளில் இருந்தமையினால் கடற்பாதைகள் பற்றி அறிந்திருந்தார்கள் எனலாம்.

- **போக்குவரத்து**

- தவளம், மாட்டுவண்டி மூலம் பொருட்கள் பரிமாறிக் கொள்ளல். மாணிக்கம் செப்பு, பெறுமதியான மரவகைகளைப் பிற நாடுகளிலிருந்து கொண்டுவரல்.

- **கைத்தொழில்**

- செங்கல் தயாரித்தல், துணிவகை, ஆபரணங்கள் தயாரித்தல், இலச்சினைகள் தயாரித்தல், (வியாபாரச் சின்னம்) யானைத்தந்த உபகரணங்கள், தாயக்கட்டைகள் என்பன.

- **சமூகத் தகவல்கள்**


  - பிரதானமான இரண்டு நகரங்களை மையப்படுத்திக் கொண்டு நகர சமூக முறையொன்று இருத்தல்.

  - உயர்குலத்தவர், தொழிலாளர் என சமூக அமைப்பு பிரிக்கப்பட்டிருந்தமை.

  - தொழிலாளர்களை கைப்பணிக் குழுவினர், குயவர்கள், உலோக வேலை செய்வோர், நெசவாளர்கள், என வகைப்படுத்த முடியும்.


  - கிராமிய மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர்.

- **கலாசாரம்**
  - கல்வியும் எழுத்துக் கலையும்.
  - எழுத்துக்களும், உருவ எழுத்துக்களும்.
  - சமயம் - தாய்த்தெய்வ வழிபாடு.
  - மரம், விலங்கு என்பவற்றுக்கான வழிபாடு.



சிந்துப் பள்ளத்தாக்கு மதகுரு
பட உரு 7.1.7

- **கலைத்திறன்**
- தாய்த்தெய்வ உருவத்தை களிமண்ணால் செய்தல்.
- மதகுரு உருவத்தை செம் மணல்கல் என்பவற்றால் செய்தல்.
  - நடன மங்கைகளின் உருவத்தை வெண்கலத்தினால் செய்தல். (சுட்டகளிமண்ணால் செய்த) இலச்சினைகள்.
- **ஆடை அணிகள்**



சிந்துநதிப் பள்ளத்தாக்கு ஆபரணம்

பட உரு 7.1.8

  - பெண்கள் விசிறி போன்ற தலை அணியொன்றை அணிதல்.
  - மடிசார்சால்வை, அங்கவஸ்திரம் ஆபரணங்கள் என்பனவற்றை ஆண், பெண் இருபாலாரும் அணிதல்.
  - வர்ணங்களினாலான அலங்கார உடைகள்.
  - நறுமணப் பொருட்கள் பயன்பாடு.


- **பிற்கால நாகரிகங்களுக்குக் கிடைத்த கொடைகள்**

    - இலச்சினைகள்.
    - உலோக நாணயப் பயன்பாடு.

- **விஞ்ஞான, தொழினுட்ப அறிவு**

    - வெண்கலக் கைத்தொழில்.
    - சுட்ட செங்கல் பயன்பாடு.

## 7.1.2.4. சீன நாகரிகம்




தேசப்படம் 7.1.5

- அமைவிடமும் பரம்பலும்.

- கி . மு. இரண்டாம் நூற்றாண்டு ஆரம்பமாகும் போது குவாங்கோ நதிக் கரையில் சீன மக்கள் குடியேறுதல்.

- வேளாண்மைக்குப் பொருத்தமான வளமான மண், சமவெளியான நிலம், நீர் வசதி என்பன இருந்தமையினால் சீன மக்கள் இப்பிரதேசத்தில் குடியேறுதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஆரம்ப காலத்தில் சிறு இராச்சியங்களாக ஒழுங்கமைக்கப்படல். கி, மு 1750ல் 'ங் அரச வம்சத்தின் கீழ் ஒற்றுமைப்படல். அன்யான் தலைநகரமாதல்.

- பின்னர் சீனாவின் அநேகமான பிரதேசங்களில் சுதந்திரமான சிறிய இராச்சியங்கள் தோன்றுதல். அதிகாரப் பரவலுக்காக இந்த இராச்சியங்களுக்கு இடையே போர் ஏற்படல்.

- கி. மு. முதலாம் நூற்றாண்டில் சீனா மத்திய நிர்வாகம் ஒன்றுடன் பெரிய பேரரசாக மாறுதல்.

- **சீனா நாகரிகத்தின் சிறப்பு அம்சங்கள்**

- நிர்வாக முறை.
  - சீன நிர்வாக அமைப்பு அரசவம்ச ஆட்சி அடிப்படையில் அமைதல்.
  - சீனச் சக்கரவர்த்தி பிரதேச நிர்வாகத்துக்கு உயர் குலத்தவர்களை உயர்பிரபுக்களாக நியமித்தல்.

- பிரதேச நிர்வாகிகளின் கடமைகள்.
  - பேரரசுக்கு படையினரை ஒழுங்குபடுத்துதல், பேணி நடாத்துதல், அவசியமேற்படின் பேரரசுக்கு படைகளை வழங்குதல்.
  - பேரரசுக்கு அவசியமான சேவையாளர்களை வழங்குதல்..

- பொருளாதாரத் தகவல்கள்.
  - பொருளாதாரம் விவசாய அடிப்படையில் அமைதல்.
    விவசாய உற்பத்திகள் - நெல், தினை, கோதுமை, வாற்கோதுமை.
  - விலங்கு வேளாண்மை - பால், இறைச்சி, வெண்ணெய்க்கட்டி, வெண்ணெய்.
  - விவசாயிகள் வயலை உழும் போது அரசனும் வயலுக்குள் இறங்கி அவ்வேலைக்கு உதவுதல்.

**கைத்தொழில்**

- விவசாய உபகரணங்கள், ஆடைவகை (பட்டு), ஆபரணங்கள், அலங்கார களிமண் பாத்திரங்கள், யுத்த ஆயுதங்கள், உற்பத்தி செய்தல்.

**வியாபாரம்**

- தரைப் பட்டுப்பாதை, கடற்பட்டுப்பாதை என்பவற்றினூடாக சீனாவின் உற்பத்திப் பொருட்களை ஐரோப்பாவின் சந்தைக்கு வழங்குதல், பட்டு, களிமண் பாத்திரங்கள், பீங்கான், பொருட்கள்.

**போக்குவரத்து**

- ஊடகங்களாவன - கப்பல்களும், வண்டிகளும்.
- சமூகத் தகவல்கள்.

  - அரசர்களுக்கு மாளிகைகளும், உயர் குலத்தவர்களுக்குப் பெரிய வீடுகளும் நிர்மாணித்தல்.

  - பல்வேறு திட்டங்களையும் காட்டுருக்களையும் உருவாக்குவதன் மூலம் மாளிகைகள், வீடுகள் அமைத்தல்.

  - சாதாரண மக்கள் களிமண்ணையும், செங்கல்லையும் உபயோகித்து வீடமைத்தல், நிலக்கிழ் வீடமைத்தல், குடும்ப முறை காணப்பட்டது.

- **விவசாயிகளும் அடிமைகளும்**
  - விவசாயிகளும், அடிமைகளும், மிகவும் மோசமான வகையில் பாதிப்புக்கு உட்பட்ட சமூக அமைப்பாக இருந்தது.

  - சீனப் பேரரசன் யுத்தமொன்றில் வெற்றிபெற்றால் பிடிக்கப்படும் சிறைக்கைதிகள் அடிமைகளாக்கப்படுதல்.

  - விவசாயிகளிடம் அதிக அளவு வரி அறவிடல்.

- **கலாசாரம்**

- சமயம்.

கொன்பூசியஸ்
பட உரு 7.1.9




1. லாஓட்ஸே (டாஓ), கொன்பியூஸியஸ் ஆகிய சமயத் தலைவர்கள் மூலம் போதனை செய்யப்பட்ட சமயத்தைப் பின்பற்றுதல்.

2. பட்டுப்பாதையூடாக பௌத்த சமயம் ஸொரோஸ்ட்ரியன் (ஸரதுஸ்திரா) கிறிஸ்தவ சமயம் என்பன கொண்டுவரப்படுதல்.


- கலைத்திறன்.

வெண்கலத்தினாலான குதிரை
பட உரு 7.1.10



- செப்பனிடப்பட்ட அலங்கார களிமண்பாத்திரங்கள், பீங்கான் வகைகள் செய்தல்.
- செம்பு, ஈயம், வெண்கலம், தங்கம் ஆகிய உலோகங்களினால் சிலைகள் பல்வேறு ஆயுதங்கள், ஆபரணங்கள் செய்தல்.

அலங்காரக் களிமண் பாத்திரம்.
பட உரு 7.1.11



- உடை.

- பருத்தி, லினன், பட்டுத்துணிவகைகளின் உற்பத்தியும், பாவனையும் பட்டு மிகவும் பெறுமதி வாய்ந்த துணிவகையாக இருந்தது.

- சங்கீதமும் இலக்கியமும்.

- சங்கீத உபகரணங்கள், வீணை, கிராமியப் பாடல்கள், அரசசபையில் பாடப்படும் பாடல்கள். சாதாரண மக்கள் புத்தகங்கள் எழுதுதல்.
- பிற்கால நாகரிகங்களுக்குக் கிடைத்த கொடைகள்.

- எழுத்துக் கலை.

- ஆரம்ப காலத்தில் சித்திர எழுத்துக்களைப் பயன்படுத்தினர் எனினும் பின்னர் சீன அரிச்சுவடியைத் தயாரித்தல்
- என்புகள், பட்டுத்துணி, மூங்கில் துண்டுகள் கடலாமை ஓடுகள் என்பன எழுதுவதற்கு உபயோகித்தல். பின்னர் கடதாசியைப் பயன்படுத்தல்.

- விஞ்ஞான அறிவு.

- கடதாசி, வெடிமருந்து, திசையறிகருவி என்பவற்றைக் கண்டுபிடித்தல். (இக்கண்டு பிடிப்புக்கள் நவீன உலகின் மிகப் பெறுமதியான கொடைகளாகும்.)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**செயற்பாடு 7.1.1**

**தேர்ச்சி மட்டம்** - உலகின் நாகரிகத்தின் ஆரம்ப வளர்ச்சி ஆகியவற்றை கற்று அதன் பின்னரான நாகரிகம் தொடர்பாக விசாரித்து அறிவார்.

**செயற்பாடு** - நாகரிகத்தின் எழுச்சி.

**நேரம்** - 40 நிமிடங்கள்.

**தரஉள்ளீடுகள்** - இணைப்பு 7.1.1.1. - பிரமிட் படம்.

- இணைப்பு - 7.1.1.2 - புராதன நதிக்கரைகளை அண்டிய நாகரிகங்களைக் காட்டும் உலகப் படமும் அதற்கு உரிய செயற்பாட்டுப் பத்திரமும்.
- இணைப்பு - 7.1.1.3. - அட்டவணையும் செயற்பாட்டுப் பத்திரமும்.
- பிறிஸ்டல் அட்டைகள்.
- பாடநூல்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

**படி 7.1.1.1.**

- இணைப்பு 7.1.1.1. இலுள்ள பிரமிட்டின் உருவைக் காட்சிப் படுத்துங்கள். அதனூடாகச் சில வினாக்களை வினவுங்கள்.
    - இது என்ன?
    - இது எந்த நாட்டில் அமைந்துள்ளது?

இவை போன்ற வினாக்களை வினவுவதோடு பின்வரும் விடயங்களும் வெளிவரக் கூடிய விதத்தில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- பிரமிட்டை உருவாக்கியவர்கள் எகிப்து மக்கள் ஆவர்.
- நைல் நதிக்கரை நாகரிகம் மிகப்பழைமை வாய்ந்த புராதன நதிக்கரைகளை அண்டி உருவான நாகரிகங்களில் ஒன்றாகும்.
- அவ்வாறான இன்னும் மூன்று நாகரிகங்கள் இருக்கின்றன.
- மொசபத்தேமியா, இந்து, குவாங்கோ நதிக்கரை நாகரிகங்கள் என அவை அழைக்கப்படுகின்றன.
- இந் நாகரிகங்கள் யூப்பிரடீஸ், தைகிறீஸ் நதிக்கரை, நைல்நதிக்கரை, இந்து நதிக்கரைகளை அண்மித்து உருவாகின.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இந் நாகரிகங்களில் மொசப்பதேமிய நாகரிகத்தின் பிரதானமான நகரங்கள் நிப்பூர், லாகா ், உர் என்பனவாகும்.

- நைல் நதிக்கரை நாகரிகத்தின் பிரதானமான நகரங்கள் நூபியா, அஸ்வான், தீப்ஸ் என்பனவாகும்.

- இந்து நதிக்கரை நாகரிகத்தின் பிரதானமான நகரங்கள் மொஹஞ்சதாரோ, ஹரப்பா, லோதால் என்பனவாகும்.

- குவாங்கோ நதிக்கரை நாகரிகத்தின் பிரதானமான நகரங்கள் அன்யான், பீஜிங் என்பனவாகும்.

- இந் நாகரிகங்களுள் நைல் நதிக்கரை நாகரிகம் மாத்திரம் ஆபிரிக்காக் கண்டத்துக்கும், ஏனைய நாகரிகங்கள் ஆசியக் கண்டத்துக்கும் உரித்தானவை.

**படி 7.1.1.2**

- வகுப்பு மாணவர்களை பொருத்தமான வகையில் நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.

- இணைப்பு 7.1.1. உள்ள படத்தைக்காட்சிப்படுத்துங்கள்.

- அப்படத்தில் நதிக்கரைகளை அண்டிய நாகரிகங்கள் உருவான இடங்களை அறிமுகப்படுத்துங்கள்.

- நதிக்கரை நாகரிகங்களுக்கு உரிய பிரதானமான நகரங்களையும் அறிமுகப்படுத்துங்கள்.

- பின்பு உரிய நாகரிகங்களின் பெயர்களையும் நகரங்களின் பெயர்களையும் தேசப்படத்தில் இருந்து நீக்கிவிட்டு நான்கு குழுக்களுக்கும் ஒவ்வொரு நாகரிகமும் அதற்குரிய நகரங்களின் பெயர்களும் இடங்களும் வரக்கூடிய விதத்தில் படங்களைப் பெற்றுக் கொடுங்கள்.

- பெற்றுக் கொடுத்த இடப்பெயர்களையும், நகரங்களின் பெயர்களையும் உலகப்படத்தில் உரிய இடங்களில் பொருத்துவதற்கு வழிப்படுத்துங்கள். (இதற்கு ஒவ்வொரு நாகரிகத்துக்கும் உரிய பிரதேசங்களையும் வெவ்வேறாக எடுக்கக்கூடிய வகையில் உலகப்படத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் குழுக்களுக்கு வழங்குங்கள்.)

- அவசியமேற்படும் போது குழுக்களுக்கு உதவியையும் அறிவுறுத்தல்களையும் வழங்குங்கள்.

- செயற்பாட்டின் இறுதியில் அந்தந்தப் பகுதிகளை ஒன்று சேர்த்து உலகப்படத்தை மீண்டும் தயாரியுங்கள்.

படி 7.1.1.3

- 7.1.1.3 செயற்பாட்டுப் பத்திரத்தில் உள்ள அட்டவணையைக் கரும்பலகையில் எழுதி அதனை எல்லோரும் குறித்துக் கொள்ளச் செய்யுங்கள்.
- மாணவர்கள் அட்டவணையைப் பூர்த்தி செய்யவேண்டிய முறையைப் பற்றி விளக்கமளியுங்கள்.
- மாணவர்கள் அட்டவணையைப் பூர்த்தி செய்யும் முறையை அவதானியுங்கள்.
- மாணவர்கள் தேசப்படப் பகுதிகளை அடையாளமிட்ட பின்னர் வகுப்பறையில் முன்வைத்து, மீண்டும் உலகப்படத்தை ஒழுங்குபடுத்துங்கள்.

(20 - நிமிடங்கள்)

பின்வரும் விடயங்கள் வெளிப்படக் கூடிய விதத்தில் கலந்துரையாடுங்கள்.

- உலகில் முதன்முதலில் உருவான நதிக்கரை நாகரிகங்கள் நான்கு உள்ளன.
- அவை ஒழுங்கு முறையாக மொசப்பத்தேமியா, நைல் நதிக்கரை, இந்து நதிக்கரை, குவாங்கோ நதிக்கரை நாகரிகங்கள் ஆகும்.
- அவற்றை அண்டிய நதிகள் முறையே யூப்பிரடீஸ் தைகிரீஸ், நைல், இந்து, குவாங்கோ என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு நாகரிகத்தினதும் பிரதானமான நகரங்களாக முறையே நிப்பூர், லாகா', உர், நூபியா, அஸ்வான், தேயிஸ், மொஹஞ்சதாரோ, ஹரப்பா, லோதால், அன்யாக், பீஜிங் என்பன விளங்குகின்றன.

(22 நிமிடங்கள்)


Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- உலகிலே முதன்முதலில் உருவான நதிக்கரை நாகரிகங்கள் நான்கையும் பெயரிடுவார்.
- அந்நாகரிகங்களை உலகப்படமொன்றில் குறித்துக் காட்டுவார்.
- அந்நாகரிகங்கள் உருவான நதிக்கரைகளைப் பெயரிடுவார்.
- ஒவ்வொரு நாகரிகத்துக்கும் உரிய பிரதானமான நகரங்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- உலகில் உருவான நான்கு நாகரிகங்களில் மூன்று அமைந்திருப்பது நாம் வாழ்கின்ற ஆசியாக் கண்டத்தில் என்பதை அபிமானத்துடன் கூறுவார்.
- தேசப்படங்களைச் சரியாக அடையாளமிடப் பங்களிப்புச் செய்வார்.
- அவசியமான சந்தர்ப்பங்களில் தாமாக முன்வந்து செயற்படுவார்.

பின்தொடர்வேலை - உலகப் படமொன்றில் நதிக்கரை நாகரிகங்கள் உருவான இடங்களையும் அவற்றின் பிரதானமான நகரங்களையும் அடையாளமிடுங்கள்.

**இணைப்பு 7.1.1.1**



பிரமிட்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு - 7.1.1.2**
**செயற்பாட்டுப் பத்திரம்.**

**முதலாம் குழு - செயற்பாட்டுப் பத்திரம்.**

- உங்களுக்குக் கிடைத்துள்ள தேசப்படப்பகுதியில் நாகரிகம் உருவாவதற்குக் காரணமாக அமைந்த யூப்பிரடீஸ், தைகிரீஸ் நதிக்கரைகளை அடையாளப்படுத்துங்கள்.
- அந்நாகரிகத்துக்குரிய பிரதன நகரங்களான ஊர், கி", லாகா", நிப்பூர் ஆகிய இடங்களை அடையாளப்படுத்துங்கள்

**இரண்டாம் குழு - செயற்பாட்டுப் பத்திரம்.**

- உங்களுக்குக் கிடைத்துள்ள தேசப்படப்பகுதியில் நாகரிகம் உருவாவதற்குக் காரணமாக அமைந்த இந்து நதிக்கரையை அடையாளப்படுத்துங்கள்.
- அந்நாகரிகத்துக்குரிய பிரதான நகரங்களான மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய இடங்களை அடையாளப்படுத்துங்கள்.

**மூன்றாம் குழு - செயற்பாட்டுப் பத்திரம்.**

- உங்களுக்குக் கிடைத்துள்ள தேசப்படப்பகுதியில் நாகரிகம் உருவாவதற்குக் காரணமாக அமைந்த நைல் நதிக்கரையை அடையாளப் படுத்துங்கள்.
- அந் நாகரிகத்துக்குரிய பிரதான நகரங்களான நூபியா, அஸ்வான், தீப்ஸ் ஆகிய இடங்களை அடையாளப்படுத்துங்கள்.

**நான்காம் குழு - செயற்பாட்டுப் பத்திரம்.**

- உங்களுக்குக் கிடைத்துள்ள தேசப்படப்பகுதியில் நாகரிகம் உருவாவதற்குக் காரணமாக அமைந்த குவாங்கோ நதிக்கரையை அடையாளப் படுத்துங்கள்.
- அந் நாகரிகத்துக்குரிய பிரதான நகரங்களான அன்யான், பீஜிங் ஆகிய இடங்களை அடையாளப் படுத்துங்கள்.

**இணைப்பு - 7.1.1.3. செயற்பாட்டுப்பத்திரம்.**

| | நாகரிகம் | அண்டியநதி | பிரதான நகரங்கள். |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

**செயற்பாடு - 7. 1. 2**

**தேர்ச்சி மட்டம்** :- உலகின் நாகரிகத்தின் ஆரம்ப வளர்ச்சி ஆகியவற்றை கற்று அதன் பின்னரான நாகரிகம் தொடர்பாக விசாரித்து அறிவார்.

**செயற்பாடு** :- நதிப் பள்ளத்தாக்கிலிருந்து தோன்றிய புத்துணர்வு.

**நேரம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :-

- இணைப்பு 7.1.2.1. - ஏழு உலகமகா அதிசயங்களில் சிலவற்றின் படங்கள்.
- இணைப்பு 7.1.2.2. - நதிக்கரை நாகரிகங்களின் கண்டுபிடிப்புகள் தொடர்பான உருவப்படங்களும் தகவல்களும். (இத்தகவல்களையும் உருவப்படங்களையும் பாடத்துக்கு முன் ஆசிரியர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.)
- இணைப்பு - 7.1.2.3. - செயற்பாட்டுப் பத்திரம்.
- பிறிஸ்டல் அட்டைகள்.
- பசை.
- கத்தரிக்கோல்.
- பாடநூல்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு.

## படி 7.1.2.1

- உலகமகா அதிசயங்கள் சிலவற்றின் படங்களைக் காட்சிப்படுத்தி பின்வரும் வினாக்களை வினவுதல்.
  1. இவை யாவை?
  2. இப்படங்களின் முக்கியத்துவம் என்ன?
  3. இப்படங்களுக்கு உரிய நாடுகள் யாவை?

இவ்வாறு வினாவுவதோடு பின்வரும் விடயங்கள் வெளிவரக் கூடியவாறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- ஏழு உலகமகா அதிசயங்களில் மூன்று நதிக்கரை நாகரிகங்கள் மூன்றிலிருந்து கிடைத்துள்ளன.
- பிரமிட், தொங்கு தோட்டம், சீனப்பெருஞ்சுவர், என்பன முறையே நைல்நதிக்கரை, மொசப்பத்தேமியா, குவாங்கோ நதிக்கரை நாகரிகங்களுக்கு உரித்தானவை.
- நதிக்கரை நாகரிக மக்கள் அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம் என்பவை பற்றி முக்கியமான கருத்துக்களையும் கண்டுபிடிப்புகளையும் உலகுக்கு வழங்கியுள்ளனர்.

(10 - நிமிடங்கள்)

## படி 7.1.2.2

- வகுப்பைப் பொருத்தமான வகையில் குழுக்களாகப் பிரியுங்கள்.

- ஒரு குழுவுக்கு ஒன்று வீதம் செயற்பாட்டுப் பத்திரங்களைப் பகிர்ந்து கொடுங்கள்.

- முன் தினங்களில் தயாரித்துக் கொண்ட படங்களைப் பயன்படுத்தி இணைப்பு 7.1.2.2 இற்குரிய செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- நதிக்கரை நாகரிகங்களின் நிர்வாக முறை, பொருளாதாரம், சமயம், விஞ்ஞானம், கலைத்தன்மை என்பவற்றை அட்டவணைப்படுத்தச் செய்யுங்கள்.

- உரிய படங்களையும் முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

- செயற்பாட்டுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் என்பவற்றை வழங்குங்கள்.

(30 - நிமிடங்கள்)

## படி - 7.1.2.3

- மாணவர்களின் செயற்பாடுகளை வகுப்பறையில் காட்சிப்படுத்தச் செய்யுங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது செயற்பாட்டை விளக்குவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஒவ்வொரு குழுவினரும் முன்வைத்த தகவல்கள் பற்றி ஏனைய குழுக்களின் கருத்துக்களை விசாரியுங்கள்.

- அவசியமான அம்சங்களைக் குறித்துக் கொள்வதற்கு மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

- மாணவர்களின் ஆற்றல்களை இனங்கண்டு கொள்வதோடு பின்வரும் விடயங்கள் வெளிவரக்கூடிய விதத்தில் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- நதிக்கரை நாகரிகங்களை அண்டி முறையான நிர்வாக முறையொன்று நடைபெற்றது.

- நதிக்கரை நாகரிகங்கள் எல்லாவற்றிலும் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது.

- எல்லா நாகரிகங்களிலும் ஒரு சிறந்த சமூக அமைப்பு காணப்பட்டது.
- நதிக்கரை நாகரிகங்களை அண்டி அநேக சமய வழிபாடுகள் காணப்பட்டன.
- நதிக்கரை நாகரிகங்களில் விருத்தியடைந்த விஞ்ஞான, தொழினுட்ப அறிவு காணப்பட்டது.
- நதிக்கரை நாகரிகங்கள் அனைத்திலும் வீடமைப்பு, கலைத்திறன் என்பன உயர் மட்டத்தில் காணப்பட்டன.

(40 - நிமிடங்கள்)


## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்.

- நதிக்கரை நாகரிகங்களின் நிர்வாக முறை, சமூக, பொருளாதார அமைப்பு, விஞ்ஞானம், கலை என்பன பற்றிய தகவல்களை விவரிப்பார்.
- சேகரித்த தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.
- நாகரிகம் என்ற வகையில் அம்மக்களிடம் இருந்த ஆக்கத்திறனை மதிப்பார்.
- குழுக்களுக்கிடையே ஒத்துழைப்புடன் செயற்படுவார்.
- மாணவர்கள் நிர்வாக முறை, பொருளாதார, சமூகத் தன்மைகள் ஆகியன பற்றி தகவல்களை வகுப்பில் எடுத்துக் கூறுவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இணைப்பு - 7.1.2.1. - உலக மகா அதிசயங்களின் படங்கள்

பிரமிட்



தொங்கு தோட்டம்



சீனப் பெருஞ்சுவர்



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு - 7.1.2.2.**

**செயற்பாட்டுப் பத்திரம் - இலக்கம் - 1.**

- நான்கு நாகரிகங்களுக்கும் உரிய பொருளாதார தகவல்களைச் சேகரியுங்கள்.
- சேகரித்த தகவல்களை ஆக்கத்திறனுடன் கோவைப்படுத்துங்கள்.
- அவற்றை வகுப்புக்கு முன்வையுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் - இலக்கம் - 2.**

- நான்கு நாகரிகங்களுக்கும் உரிய நிர்வாக முறை பற்றிய தகவல்களைச் சேகரியுங்கள்.
- சேகரித்த தகவல்களை ஆக்கத்திறனுடன் கோவைப் படுத்துங்கள்.
- அவற்றை வகுப்புக்கு முன்வையுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் - இலக்கம் - 3.**

- நான்கு நாகரிகங்களுக்கும் உரிய சமய வழிபாட்டு முறைகள் பற்றி தகவல்களைச் சேகரியுங்கள்.
- சேகரித்த தகவல்களை ஆக்கத்திறனுடன் கோவைப் படுத்துங்கள்.
- அவற்றை வகுப்புக்கு முன்வையுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் - இலக்கம் - 4.**

- நான்கு நாகரிகங்களுக்கும் உரிய விஞ்ஞானத் தகவல்கள் பற்றிய அம்சங்களைச் சேகரியுங்கள்.
- சேகரித்த தகவல்களை ஆக்கத்திறனுடன் கோவைப் படுத்துங்கள்.
- அவற்றை வகுப்புக்கு முன்வையுங்கள்.

## செயற்பாடு - 7.1.3

**தேர்ச்சி மட்டம்** :- புராதன நதிக்கரை நாகரிகங்களினால் கிடைத்த கொடைகள் பற்றிய தகவல் கோவையொன்றைத் தயாரித்து அவற்றை பாதுகாப்பதற்கு ஊக்கமெடுப்பார்.

**செயற்பாடு** :- கடந்த காலம் தந்த அற்புதமான கொடைகள்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :-

- இணைப்பு 7.1.3.1.ல் எடுக்கப்பட்டவை.
- இணைப்பு 7.1.2.3. செயற்பாட்டுப் பத்திரம்.
- பிரிஸ்டல் அட்டைகள்.
- காட்போட் அட்டைகள்.
- பாட நூல்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு.

### படி - 7.1.2.1

- இணைப்பு 7.1.3.1.ல் குறிப்பிடப்பட்டுள்ள சுமேரிய, (மொசப்பதேமியர்களின்)பாடசாலையொன்றின் தகவல்களிலிருந்து எடுக்கப்பட்ட பந்தியினை வகுப்புக்குக்காணக் கூடியவாறு பிரிஸ்டல் அட்டையில் எழுதி மாணவர்களுக்கு அதனை வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்.

1. களிமண் தட்டுக்களைப் பயன்படுத்தியவர்கள் யாவர்?
2. பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வகையில் மாணவன் உணவாகப் பயன்படுத்தியவை யாவை?
3. இங்கு குறிப்பிடப்படும் மாணவனின் சிறந்த தன்மைகள் யாவை?

இவ்வினாக்களுக்கு விடைகளைப் பெற்றுக்கொண்டு பின்வரும் விடயங்கள் வெளிவரக் கூடியவாறு கலந்துரையாடலை நடாத்துங்கள்.

- களிமண் தட்டுக்களை எழுத்து விடயங்களுக்காகப் பயன்படுத்தியவர்கள் மொசப்பதேமியா மக்கள் ஆவர்.

- மொசப்பதேமிய நாகரிகத்தில் பிரதான உணவாக பாண் முக்கியம் பெற்றது.

- புராதன நதிக்கரை நாகரிக மாணவர்களிடம் அநேக சிறந்த நற்குணங்கள் காணப்பட்டன.
- மொசப்பதேமியாவைப் போன்றே ஏனைய நதிக்கரை நாகரிகங்களிலிருந்தும் பல முக்கியமான கொடைகள் உலகுக்குக் கிடைத்துள்ளன.

(10 - நிமிடங்கள்)

**படி - 7.1.2.3**

- வகுப்பைப் பொருத்தமானவகையில் குழுக்களாகப் பிரியுங்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம் 7.1.2 இணைப்பை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு நாகரிகத்தினாலும் உலகுக்குக் கிடைத்த கொடைகளை அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- அட்டவணைப் படுத்திய தகவல்களை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

(30 - நிமிடங்கள்)

**படி - 7.1.2.3**

- மாணவர்கள் அட்டவணைப் படுத்திய விடயங்கள் அடங்கிய பத்திரத்தை வகுப்பில் முன்வைக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் தத்தமது விடயங்களை விளக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சேகரித்த தகவல்களுடன் பின்வரும் விடயங்களும் வெளிவரக் கூடியவாறு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.

- புராதன நதிக்கரை நாகரிகங்களினால் உலகுக்கு அநேக அருட்கொடைகள் கிடைத்துள்ளன.
- அந்த கொடைகளை நிர்வாகம், பொருளாதாரம், சமயம், விஞ்ஞானம், கலை ஆகிய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

- அவ்வாறு கிடைத்த அருட்கொடைகள் பல நூற்றாண்டுகள் கழிந்த நிலையிலும் இன்றைக்கும் பொருத்தமானவையே.
- அவ்வாறான ஆக்கங்கள் மதிக்கப்பட வேண்டும்.

(40 - நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்.

- நதிக்கரை நாகரிகங்களிலிருந்து கிடைத்த கொடைகளைப் பெயரிடுவார்.
- நதிக்கரை நாகரிகங்களிலிருந்து கிடைத்த கொடைகளை மதிப்பார்.
- அவ்வாறு கிடைத்த கொடைகளை ஆக்கத்திறனுடன் அட்டவணைப் படுத்துவார்.
- குழுக்களுக்குள்ளும் குழுக்களுக்கிடையிலும் ஒத்துழைப்புடன் வேலை செய்வார்.
- தான் அட்டவணைப்படுத்திய நாகரிகங்களுக்கு உரிய கொடைகள் பற்றிய விபரங்களை வகுப்பில் முன்வைப்பர்.

**பின் தொடர் வேலை :-** நதிக்கரை நாகரிகங்களினால் கிடைத்த கொடைகளின் படங்களைச் சேகரியுங்கள்.

**இணைப்பு 7.1.3.1**

நான் எனது களிமண் தட்டிலுள்ளவற்றை மௌனமாக வாசித்தேன். மதியபோசனம் எடுத்த பின் மீண்டும் இன்னொரு களிமண் தட்டைச் செய்தேன். பின்னர் ஆசிரியரின் கட்டளைப்படி பாடத்தை உரத்து வாசித்தேன். மாலை நேரத்தில் எழுத்துப் பயிற்சி தந்தார். பாடசாலை முடிவடைந்த பின் வீட்டுக்குப் போனேன். வீட்டுக்குள் செல்லும் போது அப்பா வீட்டினுள் ஓய்வாக இருப்பதைக் கண்டேன். என்னால் இன்று எழுதப்பட்ட பயிற்சிகளையும் களிமண் தட்டில் எழுதியவற்றையும் அப்பாவுக்குக் கேட்கும்படி வாசித்தேன். அவர் இதனால் சந்தோசப்பட்டார். அடுத்த நாள் காலையிலே விழித்துக் கொண்ட நான் பாடசாலைக்குப் போக வேண்டுமென்று அம்மாவிடம் கூறினேன். அவர் எனக்கு இரு சிறிய பாண்துண்டுகளைத் தயாரித்துத் தந்தார். நான் அதை எடுத்துக் கொண்டு விரைவாகப் போனாலும் மாணவர் தலைவன் நீங்கள் பிந்தியது ஏன் எனக் கேட்டான். குழப்பமடைந்த மனதுடன் ஆசிரியர் இருந்த அறைக்குச் சென்ற நான் அவருக்கு கௌரவமாக வணக்கம் செலுத்தினேன்.

**இணைப்பு 7.1.3.2 - செயற்பாட்டுப் பத்திரம்.**

- உலகுக்கு பிரதான நாகரிகங்கள் வழங்கிய அருட்கொடைகள் அடங்கிய பட்டியல் ஒன்று உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- அதனைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துங்கள்.
- அங்கு குறிப்பிடப்பட்டுள்ளவற்றை வகுப்பில் சிறு விளக்கத்துடன் முன்வையுங்கள்.

| நாகரிகம் | கொடையாக வழங்கியவை. |
|---|---|
| இந்து நதிக்கரை<br><br>குவாங்கோ<br><br>யூப்பிரடீஸ் தைகிறீஸ்<br><br>நைல் | |

**அலகு - 7.2**

## அறிமுகம்

கிரேக்கம், உரோமாபுரி, அரேபியா முதலிய நாடுகள் உலகிலேயே வளர்ச்சியடைந்த நாகரிகங்களைக் கொண்டிருந்தன என்பது பற்றி ஏற்கனவே அறிந்திருந்தோம். அக்காலகட்டங்களில் இந்த நாகரிங்களின் செயற்பாடு இலங்கை மீது செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை எமது வரலாற்றிலும் காணக் கூடியதாக உள்ளது. நாகரிகமடைந்த நாடுகள் உள்நாட்டில் தமது அரசியல் அதிகாரத்தை கட்டியெழுப்பிக் கொண்டதுடன் பல்வேறு நாடுகளினது ஆட்சி முறை, சட்டம், கலை, சமயம் முதலிய துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதே போன்று உலகில் அனேகமான நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளையும் கொண்டிருந்தன. இந் நாகரிகங்களுக்குரியதெனக் கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கங்கள், உலகின் வளர்ச்சியடைந்த கலாச்சாரங்களுக்கு அத்திவாரமிடுவதிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளதையும் காண முடிகின்றது. இவ்வாறு செல்வாக்குச் செலுத்திய நாகரிகங்களின் ஆரம்பம், வளர்ச்சி மற்றும் உலகுக்கு வழங்கியுள்ள முன்மாதிரிகள் என்பவை பற்றிக் கற்பதே இவ்வலகின் நோக்கமாகும்.

**அலகு - 7.2**

**தேர்ச்சி** :- உலக நாகரிகங்களின் பரம்பல் நிகழ்ந்த விதத்தினை பகுப்பாய்வு செய்து அவற்றை தற் காலச்சம்பவங்களுடன் ஒப்பிடுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- கிரேக்க, உரோம நாகரிகங்கள் பற்றிய விபரங்களைத் தேடி அறிவார்.

- இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகளை விபரிப்பார்.
- அரேபிய நாகரிகத்தின் ஆரம்பம் முதல் அதன் வளர்ச்சியின் சிறப்புப் பண்புகளை அட்டவணைப்படுத்துவார்.
- ஒவ்வொரு நாகரிகத்திலிருந்தும் உலகுக்குக் கிடைத்த முன்மாதிரிகளை விபரிப்பார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## நாகரிகப் பரம்பல்.

### 7.2.1 கிரேக்கம்

**அமைவிடம்**

மேற்கே அயோனியன் கடலாலும் கிழக்கே ஈஜியன் கடலாலும் தெற்கே மத்தியதரக் கடலாலும் சூழப்பட்ட தீபகற்பமும் தெற்கில் அமைந்துள்ள கீரீட் முதலிய தீவுக் கூட்டங்களும் கிரேக்கம் எனப்படும்.

- **ஆரம்பமும் பரம்பலும்**

கிரேக்க வரலாற்றின் ஆரம்பத்தைக் கற்பதற்கான மூலாதாரங்களாக புராண மற்றும் வீர காவியங்களான "ஹோமர்" எழுதிய "இலியட்", "ஒடிசி" எனும் இரு நூல்கள் காணப்படுகின்றன. "ஹெசியட்" என்பவரின் "வேலையும் நாளும்" (Work and days) எனும் நூலும் முக்கிய மூலாதாரமாகும். கிரேக்க நாகரிகம் கி.மு 1000 ஆம் ஆண்டளவில் ஆரம்பமானதாக நம்பப்படுகின்றது. (அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கி.மு 1000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே அங்கு மினோவன், மைசீனியன் எனும் இரு நாகரிகங்கள் நிலவியதாக அறியப்பட்டுள்ளது.)

- **ஆட்சி நடவடிக்கைகள்**

- முதன் முதலாக கிரேக்கத்துள் பிரவேசித்த நாடோடி ஆரியக் குழுவினரால் இங்கு சிறு கிராமங்கள் அமைக்கப்பட்டன.
- இவை கி.மு. 700 ஆம் ஆண்டளவில் நகர அரசுகளாக பரிணமித்தன.
- அவர்களுக்கே உரிய ஆட்சிமுறை ஒன்று கட்டியெழுப்பப்பட்டது.
- சுயாதீனமான நகர அரசுகளின் ஆட்சி நடவடிக்கைகள் அதன் பிரசைகளாலே மேற்கொள்ளப்பட்டன.
- ஒவ்வொரு நகர அரசுகளிலும் ஒவ்வொரு அரசியல் யாப்பு காணப்பட்டது.
- அதென்ஸில் சனநாயகமும் ஸ்பாட்டாவில் மன்னராட்சியும் காணப்பட்டன.
- அதென்ஸ், ஸ்பாட்டா, கொரித், ஆகேடியா என்பன முக்கியமான நகர அரசுகளாகும்.

- **சமூக அமைப்பு**

- கிரேக்க சமூகம் பிரசைகள், அடிமைகள் எனும் இரு வகுப்பினரைக் கொண்டிருந்தது.
- பிரசைகள் கடின வேலை செய்வது தகாத காரியமாகக் கருதப்பட்டது.
- அடிமைகள் பிரசைகளாகக் கருதப்படவில்லை.
- பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடும் உழைப்பு அடிமைகளால் வழங்கப்பட்டதுடன் அன்றாட வீட்டு வேலைகளிலும் அவர்களின் உழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- **சனநாயகத்தின் ஆரம்பம்**

- அதென்ஸ் நகர அரசிலேயே சனநாயகம் ஆரம்பமானதாகக் கருதப்படுகின்றது.
- 18 வயதுக்கு மேற்பட்ட கிரேக்க ஆண்கள் மட்டுமே பிரசைகளாக மதிக்கப்பட்டனர்.
- நகர அரசுகள் சிறு அலகுகளாகக் காணப்பட்டதுடன் பிரசைகளின் அளவும் வரையறுக்கப்பட்டதாக இருந்தமையால் அனைவரும் ஆட்சிக்கருமங்களில் ஈடுபடுவது இலகுவாக இருந்தது.

- விவசாயம், வர்த்தக நடவடிக்கைகள்

- கோதுமை, வாற்கோதுமை (பார்லி) முதலிய தானியங்களைப் பயிரிட்டனர்.
- ஒலிவ், திராட்சை முதலிய பழங்களைப் பயிரிட்டனர்.
- விலங்கு வளர்ப்பில் ஈடுபட்டனர்.
- கிரேக்க இனத்தவர் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதுடன், இலங்கையுடனும் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்ததாக தொலமியின் தேசப்படம் மூலம் அறிய முடிகின்றது.
- அவர்கள் இலங்கையை "தப்ரபேன்" எனும் பெயரால் குறிப்பிட்டனர்.

- சுதந்திர சிந்தனை

கிரேக்க கல்வி முறையின் நோக்கம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மாணவர்களுக்கு முழுமையான கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் ஆகும். இதன் பயனாக சுதந்திரமான சிந்தனைப் போக்கு ஏற்பட்டது.

- தத்துவ ஞானிகள்

- சோக்கிரட்டீஸ்

ஒரு முடிவை அல்லது கொள்கையை ஏற்றுக் கொள்ள முன்னர் அதனைப் பற்றி ஆழமாக ஆராய வேண்டும் என்ற கொள்கையுடையவர்.

- பிளேட்டோ
    - தனது குருவான சோக்கிரட்டீஸின் கொள்கையையே பின்பற்றினார்.
    - ("ரிபப்லிக்") குடியரசு எனும் நூலில் இறைமையுடன் கூடிய அரசாங்கம் பற்றிய கொள்கையை வெளியிட்டார்.
    - "அகடமி" எனும் பெயரில் கல்வி நிலையம் ஒன்றை நடாத்தினார்.

- அரிஸ்டோட்டில் :-

வானியல், கணிதம், கவிதை, அரசியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம், இரசனை இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்த அறிவுள்ளவராகத் திகழ்ந்தார்.

- விஞ்ஞானிகள்


- ஹிப்போகிரடீஸ் -

இவர் நவீன மேலைத்தேய வைத்தியத் துறையின் பிதாவாகக் கருதப்படுகிறார். தொழில்வாண்மையாக வைத்தியர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை ஒன்றையும் அறிமுகப்படுத்தினார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- டிமோகிரடஸ் - அணுவைப் பற்றிய கொள்கையை வெளியிட்டவர்.
- யூக்ளீட் - கேத்திர கணிதம் பற்றிய நூலை எழுதிய கணிதமேதை.
- பைத்தகரஸ் - கணிதத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளைச்
- ஆக்கிமிடீஸ் செய்த கிரேக்க கணித மேதைகள்.

கிரேக்க தத்துவஞானிகள். படம்.




பட உரு 7.2.1

- சமயம்

- சூரியன், சந்திரன், காற்று முதலிய இயற்கைப் பொருட்களை வணங்கினர்.
- பிரபஞ்சத்துக்கு அதிபதியான சியூஸ் தெய்வத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- சூரியக் கடவுள் - அப்பலோ.
- சமுத்திரங்களுக்கு அதிபதி - பொசிடன்.
- ஹெருனா மற்றும் அதீனா பெண் தெய்வங்களை வழிபடுவதற்கான ஆலயங்களைக் கட்டினர்.
- ஒவ்வொரு நகர அரசுக்கும் என்று சிறப்பான ஒரு தெய்வம் அல்லது பெண் தெய்வம் காணப்பட்டது.
  உதாரணம் :- அதென்ஸ் நகருக்கு அதீனா பெண் தெய்வம்.

- **கலைகள்.**



அதீனா தேவமாளிகை

பட உரு 7.2.2

- கட்டடக்கலை
- சுண்ணக்கல்லினாலும் மினுக்கப்பட்ட பளிங்குக்கற்களினாலும் கட்டடங்கள் கட்டப்பட்டன.




Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அதென்ஸ் நகரில் "அக்ரோபொலிஸ்" எனும் இடத்தில்கட்டப்பட்ட "பாத்தீனன்" கட்டடம் (அதீனா பெண் தெய்வத்துக்குரிய கோயில்)
- டொரிக் மரபுப்படி அமைக்கப்பட்ட தூண்களில் தெய்வீகக் கதைகள் அலங்காரமாகச் செதுக்கப்பட்டிருந்தன.
- டயோனிசியஸின் விசாலமான அரங்கம். (நடனம், நாடகங்களுக்கானது)

- சிற்பக்கலை

அதீனா தேவதை

பட உரு 7.2.3



- கலைகளில் ஆற்றலுடைய கிரேக்கக் கலைஞர்கள் யானைத் தந்தம், தங்கம் முதலியவற்றில் சிலைகளை வடித்தனர்.
  உதாரணம் :- அதீனா தெய்வச் சிலை.
  சியுஸ் கடவுளின் சிலை.

பரிதி வட்டம் எறியும் வீரனின் சிலை.

பட உரு 7.2.4



- இலக்கியங்கள்

- கிரேக்கரிடம் மேலான இலக்கியப் படைப்புக்கள் காணப்பட்டன.
- ஹோமர் எனபவரால் எழுதப்பட்ட இலியட், ஒடிசி.
- ஈஸ்சீகலஸ், சொபொக்லீஸ், யுரிபிடஸ் முதலியோர் நாடகங்களை எழுதினர்.
- ஹெரடோடஸ் வரலாற்றின் பிதாவாகக் கருதப்படுகின்றார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- மக்கள் வாழ்க்கை முறை

- கிரேக்க சமூகத்தில் பிரசைகள், அடிமைகள் எனும் இரு வகுப்பினர் காணப்பட்டனர்.
- அடிமைகள் கடின வேலை செய்தமையால் அவர்கள் சிரமமான வாழ்க்கையையே மேற்கொண்டனர்.
- பிரசைகள் எளிமையான, சாதாரண வாழ்க்கை முறையை மேற்கொண்டனர்.
- பெண்கள், ஆண்களை விடக் குறைவான அந்தஸ்தில் காணப்பட்டனர்.
- நாடகம், இசை, விளையாட்டு என்பனவற்றில் அதிக அக்கறை காட்டப்பட்டது.
- கல்வி ஆண்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது.

- மகா அலெக்சாந்தரின் எழுச்சி (சாம்ராச்சியப் பரம்பல்)

- மசிடோனியாவில் பிலிப் மன்னனின் மறைவின் பின்னர் கி. மு. 336 இல் அவனது மகன் அலெக்சாந்தர் அரசனானான்.
- அவனது திறமையான தலைமைத்துவம் காரணமாக கிரேக்கத்தை தனது ஆட்சியின் கீழ்க்கொண்டுவர முடிந்தது.
- பாரசீகப் பேரரசனுக்கு எதிராகப் போரிட்டு அவனை வென்றான்.
- பீனிசியா நகரம் மற்றும் எகிப்து முதலியவற்றை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தான்.
- நைல் நதிக் கழிமுகத்தில் அலெக்சாந்திரியா எனும் நகரை நிர்மாணித்தான்.
- இந்தியா மீதும் ஆக்கிரமிப்பொன்றை மேற்கொண்டான்.
- பபிலோனியாவில் தனது தலைநகரை அமைத்துக் கொண்டான்.
- 33 வயதில் காலமாகும் போது அவனது ஆட்சியின் கீழ் பரந்த பேரரசொன்று காணப்பட்டது.


## 7.2.2. ரோம்

- ஆரம்பமும் பரம்பலும்

- இத்தாலியின் தைபர் நதிக்கழிமுகம் அருகே ரோம் நகர் அமைந்துள்ளது.
- ரொமியுலஸ், ரீமஸ் எனும் இருசகோதரர்களுக்கிடையிலான போட்டி காரணமாகவே ரோம் நகர் உருவானதாக ஒரு நாட்டார் கதை நிலவுகிறது.
- கி. மு. 753 அளவில் இந்நகரம் நிர்மாணிக்கப்பட்டது.
- இத்தாலியிலிருந்த ஆரியக் குழுக்களிலே பிரதானமான இலத்தீனர்களின் தலைநகராக ரோம் திகழ்ந்ததால் அவர்கள் ரோமர்கள் என அழைக்கப்பட்டனர்.
- கி. மு. 270 களில் இத்தாலி தீபகற்பம் முழுவதும் ரோம ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- பின்னர் கிரேக்கம் உட்பட மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளும் ரோமப் பேரரசின் ஆட்சிக்குட்பட்டன.

ஜுலியசீசர்

பட உரு 7.2.5



- கி. மு. 3. ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் மத்தியதரைப் பிரதேசங்களுடன் வட ஆபிரிக்காவிலும் ரோமப் பேரரசு விரிவடைந்தது.
- ஜுலியசீசர் ரோமப் பேரரசின் புகழ் மிக்க ஆட்சியாளனாவான்.
- ரைன் நதி வரையிலான பிரதேசங்கள் ரோம சாம்ராச்சியத்தின் கீழ் வந்தன.
- இப்பேரரசு இங்கிலாந்தையும் வெற்றிகொண்டது.

- ஆட்சி முறை

- ஆரம்பத்தில் கோத்திர சமூகவமைப்புகாணப்பட்டது. உதாரணம் :- எட்ரஸ்கன்.
- கி. மு. 500 அளவில் ரோமில் குடியாட்சி நிறுவப்பட்டது.
- குடியாட்சி முறையின் கீழ் கவுன்சிலர் இருவரினால் ஆட்சி நடாத்தப்பட்டது.
- இவர்களினால் யுத்த நடவடிக்கைகளும் சிவில் நிர்வாகமும் மேற்கொள்ளப்பட்டன.
- பேரரசன் ஜீலியசீசரால் பேரரசுக்கு ஏற்றவகையில் ஆட்சி முறையொன்று உருவாக்கப்பட்டது.
- சீசர் ஆணையிடும் அதிகாரியாக செயற்பட்டான்.

- செனட்சபை உறுப்பினர்களின் சதித்திட்டத்தால் ஜுலிய சீசர் கொல்லப்பட்டான்.
- ஒகஸ்து சீசரின் ஆட்சிக் காலம் ரோமின் பொற்காலமாகும்.
- ஒகஸ்து சீசரின் ஆட்சிக் காலத்திலேயே யேசுநாதர் பிறந்தார்.
- ரோமப் பேரரசர்களுள் குளோடியஸ், நீரோ, ஜஸ்டீனியன், மகாகொன்ஸ்தன்தைன் என்போர் முக்கியமானவர்களாவர்.

- சட்டமும் சட்டவாட்சியும்

- ஜஸ்டீனியா மன்னன் பிரபலமான சட்டத்துறை அறிஞனாவான்.
- இவனது பெயரில் சட்டத்தொகுப்பொன்றும் இயற்றப்பட்டது.
- ரோமச் சட்டம் ரோமர்களால் உலகுக்கு வழங்கப்பட்ட பொக்கி'மாகும்.
- இலங்கையில் அமுலில் இருக்கும் ரோமன் டச்சு சட்டமும் இதனைச் சார்ந்ததாகும்.
- ஜுரி சபைமுறை ரோமச் சட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**சமயம்**

- இங்கு ஆரம்ப கட்டத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட சமயமொன்று காணப்படவில்லை.

- மழை, வெயில், மின்னல் முதலிய இயற்கை நிகழ்வுகள் தெய்வாம்சங்களாகக் கருதப்பட்டன.

- பல தெய்வக் கொள்கை நிலவியது.


- ஜூபிட்டர், மினர்வா எனும் தெய்வங்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது.

- உயிருடனிருக்கும் பேரரசர்களும் மரணித்த பேரரசர்களும் தெய்வங்களாக வணங்கப்பட்டனர்.
  உதாரணம் :- சீசர் வழிபாடு.

- கொன்ஸ்டன்தைன் பேரரசனின் ஆட்சிக் காலத்தில் கி. பி. 313 இல் கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசின் சட்டபூர்வமான சமயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

- நியடோசியஸ் பேரரசனின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ சமயம் ரோமப் பேரரசால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே சமயமாகக் காணப்பட்டது.

**வர்த்தகம்**



உரோம நாணயங்கள்

பட உரு 7.2.6

- கிழக்கு, மேற்கு வர்த்தகத்தின் கேந்திர நிலையமாக ரோம் விளங்கியது.

- கீழைத் தேசத்துடனான வர்த்தக உறவுகளில் ரோமர்களின் மத்திய நிலையமாக அலெக்சாந்திரியா விளங்கியது.

- இந்தியா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட முத்து, மாணிக்கம், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை ஐரோப்பிய நாடுகளுக்கு ரோம் விற்பனை செய்தது.

- சீனாவிலிருந்து பட்டுத்துணி, வாசனைப் பொருட்கள், அலங்கரிக்கப்பட்ட மட்பாண்டங்கள் முதலியவற்றையும் ரோம் இறக்குமதி செய்தது.

- ரோமில் நாணயப்புழக்கம் காணப்பட்டது.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இலங்கையில் மகாதித்த (மன்னார்), கொடவாய (அம்பாந்தோட்டை) முதலிய புராதன துறைமுகங்களிலும் சிகிரியாவிலும் அதிகளவான உரோம நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- அவை இலங்கை - ரோம வர்த்தகத் தொடர்புகளுக்கான சாட்சியாகும்.

- இலங்கை மன்னர்கள் ரோமுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்ததாக தேச சஞ்சாரிகளின் அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

- பாதிகாபய மன்னன் ருவன்வெலிசாயவை அலங்கரிப்பதற்காக ரோமிலிருந்து செம்பவளங்களைத் தருவித்ததாக பிளினியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மக்கள் வாழ்க்கை முறை**

- ரோமர்கள் சமூக இணக்கப்பாட்டுடன் கூடிய ஒரு வாழ்க்கை முறையை உயர்வாக மதித்தனர்.

- குடும்பம் ஒரு புனிதமான அலகாகக் கருதப்பட்டதுடன் தந்தை அதன் தலைவராகக் காணப்பட்டார்.

- குடும்ப உறுப்பினர் அனைவரும் தந்தைக்குக் கட்டுப்பட்டவர்களாவர்.
- பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் உயர்ந்த பண்பாகக்கருதப்பட்டது.

- சட்டத்திற்கு அடிபணிதல் காணப்பட்டதுடன் சட்டத்திற்கு அடிபணியும் மனிதன் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்பட்டான்.

- ரோமர்கள் யதார்த்தவாதத்திற்கு நெருக்கமானவர்கள்.

- கிரேக்க நாகரிகம் விதிகளுடன் நெருக்கமான உறவு கொண்டிருந்ததுடன் உரோம நாகரிகம் யதார்த்தத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தது.

## 7.2.5 அரேபியா

- ஆரம்பமும் பரம்பலும்.
- அரேபியா என்பது இன்றைய மத்தியகிழக்குப்பகுதிக்குரிய ஒரு நாடாகும். அது ஒரு பாலைவனப் பிரதேசமாகக் காணப்படுவதுடன் செங்கடல், பாரசீகக்குடா, அரபிக்கடல் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

- கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் சமயத்தின் தோற்றத்துடன் அரபு இலக்கியமும் வளர்ச்சியடைந்தது.

- 8 ஆம் நூற்றாண்டாகும் போது அரேபியர் மிசிர் (எகிப்து), பலஸ்தீனம், பாரசீகம், வடஆபிரிக்கா, ஸ்பானியா, வடஇந்தியாவின் சிந்துப்பிரதேசம் முதலியவற்றிலும் தமது ஆட்சியதிகாரத்தை விஸ்தரித்தனர்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## இஸ்லாம் சமய வளர்ச்சி

- கி. பி. 570 இல் அரேபியாவில் மக்கா நகரில் முகம்மது நபியவர்கள் பிறந்தார்கள்.
- அவரின் தாயார் பெயர் ஆமினா, தந்தையார் பெயர் அப்துல்லா என்பதாகும்.
- அவர் வாலிப வயதில் கதீஜா எனும் விதவையைத் திருமணம் செய்தார்.
- அவர் "ஹிரா" எனும் மலைக் குகையில் தியானத்தில் ஈடுபட்டார்.
- அவரின் 40 - வது வயதில் அல்லாஹ் (இறைவன்) விடமிருந்து அவருக்குத் தூது வந்தது.
- சிலை வணக்கம் அர்த்தமற்றது என்பதே அவரது போதனையாக இருந்தது.
- கி. பி. 622 இல் நபியவர்கள் மக்காவிலிருந்து மதீனா நகருக்கு "ஹிஜ்ரத்" சென்ற பின்னரே இஸ்லாம் சமயம் பரவத் தொடங்கியது.
- முகம்மது நபியவர்கள் மது, சூது, கொலை, களவு, காமம் எனும் பஞ்சமாபாதகங்களைச் செய்யக் கூடாது என்றும் பொய் சொல்லக் கூடாது என்றும் போதனை புரிந்தமையால் குறுகிய காலத்திலே இஸ்லாம் பிரபல்யமடைந்தது.
- இஸ்லாம் 5 கடமைகளை வலியுறுத்துவதுடன் இறுதிக் கடமையாக மக்காவில் உள்ள க∴பாவைத் தரிசிக்கும் ஹஜ் கடமையைக் குறிப்பிடுகின்றது.
- முஸ்லீம்கள் தினமும் ஐந்துவேளை தொழுவதுடன் வெள்ளிக்கிழமை பள்ளிவாசல்களில் கூட்டாக இருந்து ஜும்மாத் தொழுகையையும் நிறைவேற்றுவர்.
- முஸ்லீம்கள் ஆண்டு தோறும் ரமழான் மாதம் நோன்பு நோற்பர்.
- மேலும் அக்கால கட்டத்தில் தானதர்மங்களையும், வணக்க வழிபாடுகளையும் அதிகமாக மேற்கொள்வர்.
- முஸ்லீம்களின் வேத நூல் "அல்குர்ஆன்" ஆகும்.
- முகம்மது நபியவர்களின் மறைவின் பின்னர் அவரது தோழர்களான கலீபாக்களின் ஆட்சிக் காலத்திலேயே இஸ்லாம் உலகம் முழுதும் பரவியது.

**மொழியும் இலக்கியமும்**



புனித குர்ஆன்

பட உரு 7.2.7

- இஸ்லாம் சமயம் பரவியதைத் தொடர்ந்து அரபு மொழியும், அரபு இலக்கியமும் பெரிதும் வளர்ச்சியடைந்தன.

- அல்குர்ஆன் வணக்க வழிபாடுகளுக்கான புனித நூலாகவும் மாணவர்களுக்கான பாட நூலாகவும் திகழ்ந்தது.

- இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட நாடுகளிலிருந்து பல விடயங்களை அராபியர் கற்றுக் கொண்டதுடன் தம்மிடமுள்ள அறிவைப் புதிய நாடுகளுக்கும் கற்றுக் கொடுத்தனர்.
- கிரேக்க நாகரிகம் வீழ்ச்சியடைந்திருந்த காலகட்டத்தில் அங்குள்ள நூல்களை அரபுமொழியில் மொழிபெயர்த்தனர்.

- வெளிநாட்டு அறிஞர்களையும் அரேபியாவுக்கு வரவழைத்தனர்.

- விஞ்ஞானம், கணிதம், மருத்துவம், வரலாறு போன்ற துறைகளைப் போலவே இரசனைமிக்க கவிதை நூல்கள் கதைநூல்கள்படைப்பதிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.
  உதாரணம் :-
  "ஆயிரத்தோர் இரவுகள்" எனும் கதை இன்றும் உலகப் பிரசித்தமானது.

- பாரசீக மொழியில் எழுதப்பட்ட உமர்கய்யாமின் "ருபையாத்" எனும் நூல் முஸ்லீம்கள் மத்தியில் பிரபலமானதொன்றாகும்.

**வர்த்தகம்**

- ஆரம்பகாலம் முதலே அரேபியர் வர்த்தகத்தையே தமது தொழிலாகக் கொண்டிருந்தனர்

- அவர்கள் இந்தியா, சீனா, ஆபிரிக்காமுதலிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர்.

- இலங்கையிலிருந்து கறுவா, மிளகு, முத்து, மாணிக்கம், யானை, யானைத்தந்தம் முதலிய வர்த்தகப் பொருட்களை அரேபியர் பெற்றுச் சென்றுள்ளனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**விஞ்ஞானமும் வர்த்தக நடவடிக்கைகளும்**

- உடுக்கள் தொடர்பான வானியல் விஞ்ஞானம், கணிதம் பற்றிய துறைகளில் சிறந்த அறிவினை அரேபியர் கொண்டிருந்தனர்.

- இந்தியாவிலிருந்தும் அவர்கள் பல்வேறு கலைகளைக் கற்றுக் கொண்டனர்.

- தசமதானம் பற்றிய கணித அறிவு இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது.

- 1, 2, 3, எனும் இலக்கங்களை அரேபியரே ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தினர்.

- இந்து - அராபிய இலக்கங்கள் என்றே இன்றும் அதனைக் குறிப்பிடுகின்றோம்.

- அட்சர கணிதத்தை அல் - ஜிப் - ரா என்று உலகுக்கு அறிமுகப்படுத்தினர்.

- புவியியல் துறையில் சிறப்பான அறிவைக் கொண்டிருந்தனர்.

- இரசாயனவியல் பற்றியும் ஆர்வம் காட்டினர்.

- வைத்தியத் துறையிலும் மேதைகளாகக் காணப்பட்டனர்.

  வைத்தியக் கல்லூரிகள் சிலவற்றையும் ஆரம்பித்தனர்.

- அவிசென்னா என்று ஐரோப்பியர் குறிப்பிடும் இப்னு - அலி - சீனா மாபெரும் வைத்திய மேதையாவார். இவர் பிரபலமான வைத்திய நூல்களையும் எழுதியுள்ளார்.

**கைத்தொழில்கள்**

- கைத்தொழில் பற்றி சிறப்பான அறிவைக் கொண்டிருந்தனர்.

- பல்வேறு விதமான மோஸ்தர்களில் பெறுமதிமிக்க துணிகளை நெய்தனர்.


- துணிகளைச் சாயமிடுதல், கண்ணாடிப் பொருட்களை உற்பத்தி செய்தல் முதலியவற்றையும் அறிந்திருந்தனர்.

- வெண்கலப் பொருட்களையும் தோற்பொருட்களையும் தயாரித்தனர்.

- கடதாசிப் பாவனையை ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தினர்.

- ஐரோப்பியக் கலைஞர்கள் அமைதியாக இருந்த காலகட்டத்தில் கைத்தொழில் நுட்பங்களை அரேபியர் பாதுகாத்தமை குறிப்பிடத்தக்கது.

**கட்டடக் கலை**




சமாரா பள்ளிவாசல்

பட உரு 7.2.8

- அரேபியர் அழகான கட்டடங்களை அமைப்பதில் வல்லுனர்களாய் இருந்தனர்.
- அலங்காரமான மாளிகைகள், பள்ளிவாசல்களை அமைத்தனர்.
- டமஸ்கஸ், கொர்டோவா, சமர்கன்ட் முதலிய நகரங்களில் இது போன்ற அழகான கட்டடங்களைக் காணலாம்.

* இக் கட்டடங்களின் விசேட அம்சம் யாதெனில் குதிரை லாட வடிவிலான வளைவுகளை அமைத்தலும் கட்டடங்களின் உச்சியில் கோளவடிவிலான கோபுரங்களை அமைத்தலுமாகும்.

**மக்கள் வாழ்க்கை முறை**



போக்குவரத்துக்காக ஒட்டகங்களைப் பயன்படுத்தல்

பட உரு 7.2.9

- அரேபியாவின் ஆரம்பக் குடிகள் நாடோடிக் குழுக்களாகவே வாழ்க்கை நடாத்தினர்.
- பின்னர் சிறு கிராமங்கள் தோன்றி அவை படிப்படியாக சிறு நகரங்களாக வளர்ச்சி அடைந்தன.
- நகரங்களைச் சுற்றி எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முகமாக உயரமான மதில்களைக் கட்டினர்.
- நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் கூடாரங்களில் வாழ்ந்தனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அவர்களின் பிரதான உணவு பால், பேரீச்சம் பழம், இறைச்சி என்பனவாகும்.

- அவர்கள் பருத்தி துணியினாலான நீளமான அங்கிகளை அணிந்து இடுப்பில் இறுக்கமான பட்டிகளைக் கட்டினர்.

- தலையையும், முகத்தையுமும் மூடும்படியான சால்வையை தலையில் அணிந்து தலையைச் சுற்றியொரு பட்டியால் அதனை இறுக்கமாகக் கட்டிக்கொள்வர்.

- மிகப்பயனுள்ள மிருகமாக ஒட்டகம் காணப்பட்டது. அது நீண்ட நாட்கள் நீர் அருந்தாமல் பாலைவனத்தில் பயணம் செய்யக் கூடியதாய் இருந்தது.

- ஒட்டகம் மூலம் பொருட்களைக் கொண்டு செல்லவும், பயணம் செய்யவும், மாத்திரமல்ல அவர்களுக்குப் பாலைப் பெற்றுக் கொள்ளவும், இறைச்சியைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது.

## 7.2.3. இந்தியா

**வேதகாலம் முதல் மகதப் பேரரசுவரை**

- கி. மு. 1500 களில் ஆரியர் நாடோடிக் குழுக்களாக வந்து வடமேற்கு இந்தியாவின் இந்து - கங்கைச் சமவெளிகளில் குடியேறினர்.

- ஆதிக்குடிகளின் தலைவன் இராஜன் எனப்பட்டான்.

- நாடோடி ஆரியர்களின் குடியேற்றங்கள் வடமேல் இந்தியாவில் இடம் பெற்ற போது புரு, யது, துர்வாச, அனு முதலிய பிரதான ஆரிய ஆதிக் குடிகள் காணப்பட்டன.

- "பரத" என்பது பிரதான ஆதிக்குடியாகக் காணப்பட்டதுடன் அதன் இராஜனாக "சுதாஸ்" காணப்பட்டான். அவன் தனது புரோகிதனான விஸ்வாமித்திரரை பதவி நீக்கிவிட்டு வசிட்டர் என்பவரைப் புரோகிதராக நியமனம் செய்தான். இதனால் கேபமடைந்த விஸ்வாமித்திரர் ஏனைய குடியினர்களுடன் இணைந்து சுதாசுக்கு எதிராகப் போர்புரிந்தார்.

- இப்போரில் பரத குடியினர் வெற்றி அடைந்ததுடன் ஏனைய குடித்தலைவர்கள் அதிகளவில் கொல்லப்பட்டனர். பிற்காலத்தில் பரத குடியினர் பெயர் முழு இந்தியாவுக்குமான பெயரான பாரதம் எனும் பெயருக்கு அடிப்படையாக அமைந்தது.

**பதினாறு பாரிய குடியேற்றங்கள் :-**

- கி. மு. 6 ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில் பதினாறு பாரிய குடிறேற்றங்கள் எனும் பெயரில் அரசுகளின் தொகுதி ஒன்று காணப்பட்டதாக பௌத்த இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- அங்கம், மகதம், காசி, கோசலை, வஜ்ஜி, மல்ல, வேதி, வத்சய, குரு, பாஞ்சாலம், மத்சய, சூரசேன, அஸ்காமம், அவந்தி, காந்தாரம், காம்போஜம்.

- சமண சமய நூல்களில் இப்பெயர்கள் இவற்றைவிட வேறுபடுகின்றன.

- குறுகிய காலத்தில் 16 குடியேற்றங்களில் 4 இராச்சியங்களாக வளர்ச்சியடைந்தன. கோசலை, அவந்தி, மகதம், வத்சய என்பவையே அவை.

**பேரரசுக் காலம்**


- பிம்பிசார மன்னன் :-
  அங்கத்தை ஆட்சி செய்த பிரம்மதத்த மன்னனைக் கொன்றான்.

- அஜாசத்த மன்னனின் வெற்றி :-
  லிச்சவி அரசவமிசத்தவருடன் நடைபெற்ற போரில் கோசலை, மகத இராச்சியத்துக்கு அடிபணிந்தது.

- இறுதியில் மகதம் பேரரசாக வளர்ச்சியடைந்தது.

**சமய சிந்தனைகளின்**

- இந்து சமயம் :-



விஸ்ணுவும் சிவனும்

பட உரு 7.2.10

வேத காலத்தில் மக்கள் இயற்கைப் பொருள்களுக்கு தெய்வ அந்தஸ்தை வழங்கினர். (அக்கினி, சூரியன், உசா, வாயு, மிருதி, அஸ்வினி, புவி, சோமர், உருத்திரன்.)

- ஒரு அரசு தாபிக்கப்டும் போது யாகங்களைச் செய்தல் பாரிய செயற்பாடுகளாக அமைந்தன.
  உதாரணம் :-
  அஸ்வமேத யாகம், இராஜசூயயாகம், வாஜ்பேயயாகம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- யாகங்கள், பற்றியும் அவற்றை செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் வேத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இருக்கு, யசுர், சாமம், அதர்வனம், ஆகிய வேத நூல்கள். உபநிடதங்கள் - பிராமணங்கள், ஆரணியங்கள்.


- மேற்படி நூல்களின மூலம் இந்து சமயத்தின் பரம்பல் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.

- இந்து சமயம் ஆரியர் வருகையின் போது இந்தியாவில் நிலவியது.

- இந்து சமய வளர்ச்சியில் மும்மூர்த்திகள் (பிரம்மா, விஸ்ணு, உருத்திரன்) முக்கியத்துவம் பெற்றனர்.

- சூத்திரர்களின் உதவியுடன் அஜீவக பரிபிராஜகப்பிரிவு தெய்வீக உண்மையைக் காண்பதற்குப் பல வழிகளைக் கையாண்டது.

- சமண சமயம்




ஜைன மகாவீரர் ஜனனித்த ஆதிகால வைசாலி நகரம்

பட உரு 7.2.11

மகாவீரர் சமண சமயத் தாபகர் ஆவார். இச்சமயத்தின் பண்புகளாவன : மறுபிறப்புக் கொள்கையை நம்புதல், அஹிம்சையை சரியாகக் கடைப்பிடித்தல், உலக சுகபோகங்களைக் கைவிடுதல், யாகங்களையும் ஓமங்களையும் நிராகரித்தல், பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடித்தல், உண்மையைத் தேடி அறிவதற்காக பல்வேறு விதமாக சரீரத்தைச் சித்திரவதை செய்தல்.

- பௌத்த சமயம்



புத்தகயா தூபி

பட உரு 7.2.12

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் பௌத்த சமயம் இந்தியாவில் பரவியது.
- ஆன்மா என ஒன்றில்லை என்ற நம்பிக்கை.
- யாகம் செய்தல், ஓமக்கிரியைகள் என்பவற்றை நிராகரித்தல், பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.
- அஹிம்சை, நடுநிலைப்போக்கு என்பவற்றைக் கடைப்பிடித்தல்.

- இலக்கியம்

- வேத காலத்தில் இருக்கு வேதம் :

  வாய்மொழியாக ஓதப்பட்டு வந்த சுலோகங்கள் பிற்காலத்தில் நூல்களாக எழுதப்பட்டன.
- வேத காலத்துக்குப் பிந்திய யுகம்

  சாமம், யசுர், அதர்வனம், பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரணியங்கள், வீரகாவியங்கள், மகாபாரதம்.

- சமூக அமைப்பு முறை

- வேத கால இந்தியாவில் நான்கு குலங்கள் காணப்பட்டன. (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்)

- பிராமணர்

  அரசர்களுக்கு ஆலோசனை வழங்குதல், யாகம் மற்றும் ஓமச் சடங்குகளை முன்னின்று நடாத்துதல்.
- சத்திரியர்

  அரசாட்சி செய்தல், போர் வீரர்களாக இருத்தல்.
- வைசியர்

  விவசாய, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.
- சூத்திரர்

  சமூகத்தில் கீழ்மட்ட வேலைகளில் ஈடுபடுவர்.

- வேத காலத்துக்குப் பின்னர் அதிகளவான சாதியினரைக் கொண்ட சிக்கலான குல முறை இந்தியாவில் காணப்பட்டது.

- பொருளாதாரம்

- விவசாயமே ஆரியரின் பிரதான தொழிலாகும்.
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் நிலவியது. (பதினாறு பாரிய குடியேற்றங்கள் நிலவிய காலகட்டத்தில் முன்னேற்றகரமான வர்த்தக செயற்பாடுகள் காணப்பட்டன.)
- கைத்தொழில்

  போர்ஆயுதங்கள், மட்பாண்டம், முதலிய உற்பத்திகளுடன் தச்சு வேலை, தங்கம், வெள்ளி, ஆபரணக் கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்திருந்தன.

- கல்வி

  பிராமணர்களை ஆசிரியர்களாகக் கொண்ட குருகுலக் கல்விமுறை காணப்பட்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# அலகு 7.2.1

**தேர்ச்சி மட்டம்** :- உலக நாகரிகங்களின் பரம்பல் நிகழ்ந்த விதத்தினை பகுப்பாய்வு செய்து அவற்றை தற் காலச்சம்பவங்களுடன் ஒப்பிடுவார்.

**செயற்பாடு** :- 7.2.1 ஒலிம்பிக் விளையாட்டு உதயமான கிரேக்கம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :

- இணைப்பு 7.2.1.1 ஒலிம்பிக் இலச்சினை மற்றும் விளையாட்டுக்களைச் சித்திரிக்கும் படம்.
- இணைப்பு 7.2.1.2 செயற்பாட்டுப் பத்திரம்.
- இணைப்பு 7.2.1.3 ஐரோப்பிய புறவுருவப்படம் மற்றும் பாடநூல்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

**படி 7.2.1.1**

- இணைப்பு இலக்கம் 01 இல் தரப்பட்டுள்ள படத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்தி, பின்வரும் வினாக்களுக்கு விடை காண்பதற்கு மாணவரை வழிப்படத்துங்கள்.
- இந்தப் படத்தை ஏற்கனவே பார்த்துள்ளீர்களா?
- இது முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட நாடு எது?
  இக் கேள்விகளுக்கான விடைகளைப் பெற்றுக் கொண்டு பின்வரும் விடயங்களைப் பற்றியும் கவனமெடுத்து, பாட நூலைத் துணையாகக் கொண்டு மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- இலியட், ஒடிசி எனும் மேலைத்தேச காவியங்கள் மூலம் கிரேக்க நாகரிகத்தின் வரலாறு பற்றிய தரவுகளைப் பெறலாம்.
- கிரேக்க நாகரிகம் கி. மு. 1000 ஆம் ஆண்டளவில் தோன்றியது.
- கிரேக்கத்தினுள் பிரவேசித்த நாடோடிக் குழுவினர் சிறு கிராமங்களை அமைத்தனர்.
- கி. மு. 700 ஆம் ஆண்டாகும் போது அது நகர கவனத்திலெடுத்து அரசுகளாக வளர்ச்சி கண்டது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பிரசைகள், அடிமைகள் என கிரேக்க சமூகத்தில் இரு வகுப்பினர் காணப்பட்டனர்.
- 18 வயதுக்கு மேற்பட்ட கிரேக்க ஆண்கள் பிரசைகளாகக் கருதப்பட்டனர்.
- கல்வி ஆண்களுக்கு மட்டுமே உரியதாகக் காணப்பட்டது.
- இயற்கைப் பொருட்களை அவர்கள் வணங்கி வழிபட்டனர்.
- சோக்கிரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் முதலிய தத்துவஞானிகள் பலர் அங்கு காணப்பட்டனர்.

**படி 7.2.1.2**

- வகுப்பு மாணவர்களை குழுக்களாகப் பிரிக்கவும்.
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 7.2.1.2 செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்கவும்.
- செயற்பாடுகளுக்குத் தேவையான வழிகாட்டுதல்களைச் செய்யவும்.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

(10 நிமிடங்கள்)

**படி 7.2.1.3**

- ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியாகத் தமது செயற்பாடுகளை வகுப்பறையில் முன் வைப்புச் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவினதும் குறைகளையும், நிறைகளையும் இனம் கண்டு கொள்க.
- ஒவ்வொரு குழுவும் ஏனைய குழுக்களின் செயற்பாட்டுப் பத்திரங்களிலுள்ள விடயங்களைக் குறித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தவும்.
- இனம் கண்டு கொண்ட குறை, நிறைகளைக் கீழ்வரும் விடயங்களையும் கவனத்திலெடுத்து தொகுப்புரை செய்க.

- கிரேக்கம் மேற்கே அயோனியன் கடலாலும், கிழக்கே ஈஜியன் கடலாலும், தெற்கே மத்தியதரைக் கடலாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பம் ஆகும்.
- சுயாதீனமான நகர அரசுகளின் ஆட்சி நடவடிக்கைகள் அதன் பிரசைகளாலே மேற்கொள்ளப்பட்டன.
- அதென்ஸ், ஸ்பார்ட்டா முதலியன முக்கியமான நகர அரசுகளாக விளங்கின.

- அடிமைகள் நாட்டின் பிரசைகளாக கருதப்படவில்லை.
- பிரசைகள் அனைவரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.
- கப்பல் மூலமாக வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- கிரேக்கர் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன.
- கிரேக்க மாணவர்களுக்கு உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் முழுமையான கல்வி வழங்கப்பட்டது.
- வைத்தியத் துறையின் ஆரம்ப கர்த்தாக்கள் கிரேக்கராவர்.
- ஹெரடோரஸ் எனும் கிரேக்க வரலாற்று அறிஞர் வரலாற்றின் பிதாவாகக் கருதப்படுகின்றனர்.


(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.


- கிரேக்க நாகரிகத்தின் ஆரம்பம் பற்றி விவரிப்பார்.
- கிரேக்க ஆட்சிமுறையை மதிப்பிடுவார்.
- குழுக்களுள் ஒத்துழைப்புடன் கடமையாற்றுவார்.
- சக மாணவர்களின் அனுபவங்களையும் பெற்றுத் தமது அனுபவங்களை விரிவுபடுத்திக் கொள்வார்.
- தமது ஆக்கங்களை வகுப்பறையில் முன் வைப்புச் செய்வார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 7.2.1.1 ஒலிம்பிக் இலச்சினை விளையாட்டுக்கள் என்பவற்றைச் சித்திரிக்கும் படம்.



ஒலிம்பிக் இலச்சினையைக் காட்டும் படம்.



ஒலிம்பிக் தீபத்தைக் காட்டும் படம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**செயற்பாட்டுப் பத்திரம்.**

குழு இலக்கம் : 1

கிரேக்க ஆட்சிமுறை பற்றிய தகவல்களைத் தருக.

1.
2.
3.
4.
5.

குழு இலக்கம் : 2

கிரேக்கத் தத்துவஞானிகள் பற்றிய விபரங்களை தருக.

1.
2.
3.
4.
5.

குழு இலக்கம் : 3

கிரேக்க விஞ்ஞானிகள் பற்றிய தரவுகளைத் தருக.

1.
2.
3.
4.
5.

குழு இலக்கம் : 4

கிரேக்கரின் கலாசார (கலை, சமயம்) நடவடிக்கைகள் பற்றிய தரவுகளைத் தருக.

1.
2.
3.
4.
5.

குழு இலக்கம் : 5

கிரேக்க மக்கள் வாழ்க்கை முறை பற்றிய தரவுகளைத் தருக.

1.
2.
3.
4.
5.

## அலகு 7.2. ரோம நாகரிகம்

**தேர்ச்சி மட்டம்** :- உலக நாகரிகங்களின் பரம்பல் நிகழ்ந்த விதத்தினை பகுப்பாய்வு செய்து அவற்றை தற் காலச்சம்பவங்களுடன் ஒப்பிடுவார்.

**செயற்பாடு. 7.2.2.** :- ஐரோப்பிய நாகரிகத்துக்கு வளமூட்டிய ரோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :-

- இணைப்பு. 7.2.2.1 : பாப்பரசரின் புகைப்படம், வத்திகான் புகைப்படம்.
- இணைப்பு. 7.2.2.2 : செயற்பாட்டுப் பத்திரம்.
- பாட நூல்.

## கற்றல், கற்பித்தல் செயன்முறை

### படி 7.2.2.1

- இணைப்பு 7.2.2.1 இல் தரப்பட்டுள்ள படங்களை மாணவருக்கு வழங்கி கீழ்வரும் வினாக்களுக்கு அமைவாக கலந்துரையாடுக.

- இப்படத்தில் இருப்பவர் யார்?
- இவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலம் எங்கு அமைந்துள்ளது?
- அது எந்தக் கண்டத்தைச் சேர்ந்தது?
- ரோமர்களால் எங்களுக்குக் கிடைத்துள்ள பெறுமதியான விடயங்கள் யாவை?

முதலிய வினாக்களை மாணவர்களிடம் கேட்டு, கீழ்வரும் விடயங்கள் வெளிப்படும் விதமாகக் கலந்துரையாடுக.

- பரம்பரைக் கதைகளின் படி ரொமியுலஸ், ரீமஸ் எனும் சகோதரர்களுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியின் பிரதிபலனாக ரோம் நகரம் உருவானமை.

- பின்னர் ரோம இராச்சியம், கிரேக்கம் உட்பட மத்திய தரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவருதல்.

- ஜுலிய சீசர் ரோமப் பேரரசின் புகழ்வாய்ந்த மன்னனாக விளங்கியமை.

- ஒகஸ்தஸ்சீசரின் ஆட்சிக்காலம் ரோமின் பொற்காலமாகத் திகழ்ந்தமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ஜஸ்டீனியன் எனும் பேரரசனின் பெயரில் சட்டத் தொகுப்பு ஒன்று இயற்றப்பட்டமை.
- பல்வேறு தெய்வங்களை வழிபட்டமை.
- கீழைத்தேய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் கொண்டிருந்தமை.
- ரோமர்கள் சட்டத்தை மதிக்கும் மக்களாக இருந்தமை.

## படி 7.2.2.2

- இணைப்பு 7.2.2.2 செயற்பாட்டுப் பத்திரத்தை கரும்பலகையில் எழுதவும்.
- பாட நூலைப் படித்து, கரும்பலகையில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கு மாணவர்களை வழிப்படுத்தவும்.
- தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மூலம் வேலையை இலகு படுத்துவதில் பங்களிப்புச் செய்யவும்.

(30 நிமிடங்கள்.)

## படி 7.2.2.3

- எழுமாற்றாகத் தெரிவு செய்த சில மாணவர்களின் செயற்பாட்டை வகுப்பில் காட்சிப்படுத்தவும்.
- அவை பற்றி ஏனைய மாணவர்களின் கருத்தைக் கேட்கவும்.
- மீண்டும் சரியான விடைகளை அவரவர் பயிற்சிக் கொப்பிகளில் எழுதும்படி கூறவும்.
- கீழ்வரும் விடயங்கள் வெளிப்படும் விதமாகப் பாடத் தொகுப்புரை ஒன்று செய்க.

- ரோம் நகரம் இத்தாலியின் தைபர் நதியின் கழிமுகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.
- கி. மு. 270 இல் இத்தாலி தீபகற்பம் முழுதும் ரோம ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.
- ஜூலியசீசர் ரைன் நதி வரையிலான பிரதேசங்களையும் இங்கிலாந்தையும் ரோம சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டுவந்தான்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- கி. மு. 500 ஆம் ஆண்டளவில் ரோமக்குடியரசு ஆரம்பிக்கப்பட்டது.
- ஒகஸ்தஸ் சீசர் எனும் பேரரசனின் ஆட்சிக்காலத்திலே இயேசு நாதர் பிறந்தார்.
- ரோமச் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் ரோமன் - டச்சு சட்டம் இயற்றப்பட்டது.
- ஆரம்ப கட்டத்தில் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர்.
- ஆரம்ப காலந்தொட்டே ரோமில் நாணயப்புழக்கம் காணப்பட்டது.
- ரோமர் புனிதமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தனர்.

(40 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- ரோமின் அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம் பற்றிய விடயங்களை விவரிப்பார்.
- ரோம ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை மதிப்பிடுவார்.
- ரோம் பற்றி தாம் தேடிய தரவுகளை ஏனையோருக்கும் காட்டுவார்.
- தொடர்பாடல் ஆற்றல்களை வளர்த்துக் கொள்வார்.
- தாம் தேடியறிந்த தகவல்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வார்.

**இணைப்பு 7.2.2.1**



**பாப்பரசரும் வத்திக்கானும்**

**செயற்பாட்டுப் பத்திரம்**

**இணைப்பு 7.2.2.2**

ரோம் பற்றிய தகவல்களைத்தேடி பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| ரோம ஆட்சியாளர். | ஆட்சி நடவடிக்கைகள். | கலாசாரம். | மக்கள் வாழ்க்கை. |
|---|---|---|---|
| 1. | 1. | 1. | 1. |
| 2. | 2. | 2. | 2. |
| 3. | 3. | 3. | 3. |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# அலகு 7.2.3. அரேபியா

**தேர்ச்சி மட்டம்** :- உலக நாகரிகங்களின் பரம்பல் நிகழ்ந்த விதத்தினை பகுப்பாய்வு செய்து அவற்றை தற் காலச்சம்பவங்களுடன் ஒப்பிடுவார்.

**செயற்பாடு** :- 7.2.4.1 இஸ்லாத்தின் தோற்றம்.

**காலம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :-

- இணைப்பு 7.2.4.1 "க.்.பா" வின் ஒளிப்படம்.
- இணைப்பு 7.2.4.2 மத்திய கிழக்கை சித்திரிக்கும் தேசப்படம்.
- இணைப்பு 7.2.4.3 செயற்பாட்டுப் பத்திரம்.
- இணைப்பு 7.2.4.4 ஆசிரியருக்கான அறிவுறுத்தல்.
- பாட நூல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

**படி 7.2.3.1**

"க.்.பா" வின் படத்தைக் காட்டி கீழ்வரும் வினாக்குரிய விடைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கலந்துரையாடுங்கள்.

1. இப்படத்தில் இருப்பது என்ன?
2. இது அமைந்திருப்பது எங்கே என்று உமக்குத் தெரியுமா?

பின்வரும் விடயங்களை முதன்மைப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- படத்தில் இருப்பது மக்கா நகரில் அமைந்துள்ள "க.்.பா" எனும் ஆலயமாகும்.
- மக்கா நகர் இன்றைய சவூதி அரேபியாவில் அமைந்துள்ளது.
- செங்கடல், பாரசீகக் குடா, அரபிக்கடல் என்பவற்றால் அரேபியத் தீபகற்பம் சூழப்பட்டுள்ளது.
- கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் சமயம் அரேபியாவில் தோன்றியது.
- அது பின்னர் மத்தியகிழக்கு முழுதும் பரவியது.

(10 நிமிடங்கள்.)

**படி 7.2.3.2**

- வகுப்பில் உள்ள மாணவர்களை ஒரு குழுவில் 4 பேர் இடம் பெறும்வகையில் சிறு குழுக்களாகப் பிரித்துக் கொள்ளவும்.
- அக் குழுக்கள் ஒவ்வொன்றையும் பாடநூல் மற்றும் அரேபியா பற்றிய வேறும் தகவல்களைக் கொண்டு இயலுமான வரை வினாக்களைத் தயாரிப்பதில் ஈடுபடுத்தவும்.
- வினாக்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் வழங்கவும்.

(30 நிமிடங்கள்.)

**படி 7.2.3.3**

- வகுப்பிலுள்ள மாணவர்களை இரு அணிகளாகப் பிரிக்கவும்.
- அவ்விரு அணிகளையும் A, B எனப் பெயரிடுக.
- இரு அணிகளுக்கும் தலைவர்களைத் தெரிவுசெய்க.
- 5 நிமிடங்களுக்குள் சிறு குழுக்கள் தயாரித்த வினாக்களுள் சிறந்த, பொருத்தமான 20 வினாக்களைத் தெரிவு செய்து கொள்ளுமாறு அணிகளுக்கு ஆலோசனை வழங்கவும்.
- இணைப்பு 7.2.4.1.4 ஆலோசனைப் பத்திரத்தின் படி வினா - விடைப் போட்டியை ஆரம்பிக்கவும்.
- வினா - விடைப் போட்டி முடிவடைந்த பின்னர் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குமாறு தொகுப்புரை செய்க.

| |
|---|
| • அரேபியா மத்திய கிழக்கு வலயத்தைச் சேர்ந்த ஒரு நாடாகும். |
| • அது ஒரு பாலைவனப் பிரதேசமாகும். |
| • 8 ஆம் நூற்றாண்டளவில் அரேபியர் எகிப்து, பலஸ்தீன், பாரசீகம், வட ஆபிரிக்கா, ஸ்பானியா வரையிலும் தமது இராச்சியத்தை விஸ்தரித்தனர். |
| • கிழக்கே வட இந்தியாவின் சிந்துப் பிரதேசம்வரை அரேபியரின் ஆட்சி வியாபித்தது. |
| • அரேபியாவின் மக்கா நகரில் முகம்மது நபி அவர்கள் பிறந்தார்கள். |
| • முகம்மது நபியவர்கள் இறைவனின் தூதராவார். |
| • நபியவர்கள் கி. பி. 662 இல் மக்காவிலிருந்து மதீனாவுக்கு "ஹிஜ்ரத்" சென்றார்கள்.அதன் பின்னரே இஸ்லாம் சமயம் பரவியது. |


- முகம்மது நபியவர்களின் போதனைகள் வெகு விரைவாக பிரபல்யமடைந்தன.
- இஸ்லாமியர்களுள் வசதிபடைத்தவர்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது மக்காவுக்குச் சென்று "ஹஜ்" கடமையை நிறைவேற்ற வேண்டும்.
- முகம்மது நபியவர்களுக்கு அல்லாஹ்வினால் அருளப்பட்ட இறை வசனங்களே "அல்குர் ஆன்" எனும் வேத நூலாகும்.
- இஸ்லாம் பரவியதுடன் அரபு மொழியும் இலக்கியமும் வளர்ச்சியடைந்தன.
- "ஆயிரத்தோர் இரவுகள்" எனும் அரபு மொழியில் எழுதப்பட்ட கற்பனைக்கதை இன்றும் உலகப் புகழ்பெற்ற கதையாகத் திகழ்கின்றது.
- இந்தியா, ஆபிரிக்கா, சீனா, இலங்கை முதலிய நாடுகளுடன் அரேபியா வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தது.
- அவிசென்னா என்று அழைக்கப்படும் இப்னு அலி சீனா எனும் வைத்தியத்துறை நிபுணர் பல வைத்திய நூல்களையும் எழுதினார்.
- கடதாசிப் பாவனை அரேபியராலேயே ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

(40 நிமிடங்கள்.)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்

- அரேபியாவைப் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- முகம்மது நபியவர்களின் போதனைகளை மதிப்பிடுவார்.
- அரேபியாவைப் பற்றி வினாக்கொத்து ஒன்றைத் தயாரிப்பார்.
- குழுச் செயற்பாடுகளில் உணர்வுபூர்வமாக ஈடுபடுவார்.
- அடுத்தவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்வார்.

**இணைப்பு 7.2.3.1**



க.்.பா பள்ளிவாசல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 7.3 தென்னிந்திய படையெடுப்புகளும், அனுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சியும்

**பாடவேளைகள் - 07**

## அறிமுகம்

புவியியல் ரீதியாக இலங்கையும், இந்தியாவும் சமீபமாக அமைந்திருப்பது வரலாற்று ரீதியாக இரு நாடுகளுக்கிடையிலும் பலவேறு தொடர்புகளைக் கட்டியெழுப்புவதிலே பெரிதும் தாக்கத்தையேற்படுத்திய காரணியாக அமைந்தது.

வட இந்தியாவைப் போலவே தென்னிந்தியாவிலும் அடிக்கடி பலம்வாய்ந்த அரசுகளுடன் இலங்கை பலவேறு விதமாகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பியதாக அநேகமான மூலாதாரங்களிலிருந்து வெளிப்படுகிறது.

தென்னிந்தியாவின் பலம்வாய்ந்த பல்லவ, பாண்டிய, சேர மற்றும் சோழ அரசுகளுடன் மேற்கொண்ட அரசியல், சமய, கலாசார, பொருளாதாரத் தொடர்புகளின் தன்மையையும் அடிக்கடி இந்த அரசுகள் இலங்கைக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்புக்களின் இயல்பையும் இந்த அலகைக் கற்பதால் விளங்கிக் கொள்ளலாம்.

தென்னிந்தியப் படையெடுப்புக்களின் விளைவாக அனுராதபுர இராச்சியம் சோழப் பேரரசுக்கு உட்பட்டமை பற்றியும், சோழராட்சி காரணமாக இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு தென்னிந்தியச் செல்வாக்குகள் பற்றியும் கற்றுக் கொள்வதற்கு இந்த அலகு உதவும்.

**தேர்ச்சிகள்** :- தென்னிந்திய செல்வாக்கு அனுராதபுர இராச்சியம் வீழ்வதற்கும் காரணமான விதத்தை விவரிப்பார்.


**தேர்ச்சி மட்டம்** :-

- இலங்கை மீது பல்வேறு செல்வாக்குகளை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகளை இந்தியாவின் மாதிரிப் படமொன்றில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.
- இலங்கை, தென்னிந்தியாவுடன் மேற்கொண்ட தொடர்புகளின் தன்மையைத் தேடியறிவார்.
- அனுராதபுர இராசதானி வீழ்ச்சியடைவதில் தென்னிந்திய ஆக்கிரமிப்பு செல்வாக்கு செலுத்திய விதத்தை விவரிப்பார்.
- அனுராதபுரத்தின் வீழ்ச்சியையும் அதனைத் தொடர்ந்து இலங்கையில் சோழர் ஆட்சி செய்த விதத்தையும் விளக்குவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.3 தென்னிந்திய ஆக்கிரமிப்புகளும் அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்.

இலங்கைக்குப் பலவித செல்வாக்குகளை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகள்.



### 7.3.1 தென்னிந்திய அரசுகளும் அவற்றின் செல்வாக்கும்.

- இலங்கைக்குப் பலவித செல்வாக்குகளை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகளை அறிமுகஞ் செய்தல்.

    - பல்லவ அரசு.
    - பாண்டிய அரசு.
    - சேர அரசு.
    - சோழ அரசு.

    இவற்றின் அமைவிடத்தைத் தேசப்படத்தின் மூலம் விளக்குதல்.

- தென்னிந்திய அரசுகளுடன் மேற்கொண்ட தொடர்பின் தன்மை.
  - அரசியல் உறவுகள்.

- சிங்கள மன்னர்கள் அரசுரிமைக்காக நடாத்திய போராட்டங்களுக்குத் தென்னிந்திய அரசுகளின் இராணுவ உதவியைப் பெறுதல்.
  எடுத்துக்காட்டு :-
    - இளநாக மன்னன்.
    - முதலாம் முகலன் மன்னன்.
    - மூன்றாம் அக்போ மன்னன்.
    - முதலாம் தாதோபதிஸ்ஸ மன்னன்.
    - இரண்டாம் தாதோபதிஸ்ஸ மன்னன்.
    - மானவர்ம மன்னன். - 2 ஆம் நரசிங்க மன்னன். பல்லவ அரசிடமிருந்து உதவி பெறல்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இந்த மன்னர்கள் தமது அரசதிகாரத்தை உறுதிசெய்து கொள்வதற்காகத் தென்னிந்திய இராணுவத்தின் உதவியைப் பெற்றனர்.

- தென்னிந்திய அரசுகளும் இலங்கையின் மன்னரிடமிருந்து இராணுவ உதவியைப் பெற்றனர்.

எடுத்துக்காட்டு

- வரகுணவர்ம பாண்டிய மன்னன் இலங்கையின் இரண்டாம் சேன (851 - 887) மன்னனிடமிருந்து இராணுவ உதவியை நாடியமை.

- ஐந்தாம் காசியப்ப மன்னன், இரண்டாம் மானவர்மன் இராசசிங்கன் பாண்டிய மன்னனுக்கு அரசுரிமையைப் பெறுவதற்காக இராணுவத்தை அனுப்பியமை.

- நான்காம் தப்புல மன்னனின் காலத்தில் பாண்டிய மன்னனான மானவர்மன் இராசசிங்கன், சோழர் பாண்டிய அரசுரிமைப் பொருட்களைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக அவற்றை இலங்கைக்கு அனுப்பி பாதுகாக்கும் பொருட்டு, நான்காம் தப்புல மன்னனின் பொறுப்பில் வைத்தமை.

- திருமண உறவுகள்.

- நான்காம் மகிந்த மன்னன், கலிங்க இளவரசியைத் திருமணம் செய்தமை.

**சமய, கலாசார தொடர்புகள்.**

- தென்னிந்தியாவின் நாகார்ஜுன், அமராவதி எனப்படும் பௌத்த நிலையங்களுடன் இலங்கைப்பிக்குகள் தொடர்புகள் மேற்கொண்டனர்.

- அமராவதி செதுக்கல்கள், சிற்பப் பாரம்பரியங்கள் என்பவற்றில் செல்வாக்குகள் இலங்கையில் காணப்பட்டன.

- தென்னிந்தியாவின் வஜ்ரபோதி எனப்படும் மகாயான பண்டிதர், அபயகிரியில் சிலகாலம் தங்கியிருந்து, உருகுணைக்கும் சென்று, அதன் பின்னர், ஜாவா, சுமத்திராத் தீவுகளுடாகச் சீனாவுக்குச் சென்றார்.

- வஜ்ரபோதி பிக்குவின் அமோகவஜ்ஜிர எனப்படும் மாணவன் இலங்கை அரசனின் தூதுவனாகச் சீன அரசசபைக்குச் சென்றமை.

**பொருளாதாரத் தொடர்புகள்.**

- விஜய இளவரசன் தான் திருமணம் செய்வதற்காகத் தென்னிந்தியாவின் மதுரையிலிருந்து கொண்டுவந்த விஜயா இளவரசியுடன் வந்த 18 சிற்பக்கலைகளுக்குரிய குடும்பங்களிலிருந்து இந்நாட்டின் வியாபார வகுப்புக்கள் ஆரம்பமாகின.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இலங்கையின் வர்த்தகத் துறைமுகங்களுக்கும் தென்னிந்தியத் துறைமுகங்களுக்குமிடையே வர்த்தகத் தொடர்புகள் நிலவின.

  எடுத்துக்காட்டு :-
  மகாதித்தவிலிருந்து வணிகர்கள் காவேரிப்பட்டினத்துக்குச் சென்று வியாபாரத்தில் ஈடுபட்டமை.

- வங்கநாகதிஸ்ஸ மன்னனின் காலத்தில் சோழமன்னன் கரிகாலன், இலங்கை இளைஞர்கள் 12000 பேரை தென் இந்தியாவின் காவேரிப்பூம் பட்டினத்துக்கு விவசாயச் செயற்பாடுகளுக்காக அழைத்துச் சென்றான்.

## 7.3.2 தென்னிந்திய படையெடுப்புகள்

- **இலங்கை, தென்னிந்தியாவின் படையெடுப்புகளுக்கு ஆளாவதற்கான காரணங்கள்.**

  - இந்தியாவுடனான நெருங்கிய உறவுகள்.

  - தென்னிந்தியாவில் உருவான பலம்வாய்ந்த பேரரசு, தமது அதிகாரத்தை வட இந்தியாவை விடத் தெற்கில் பரவலாக்குவதில் ஈடுபட்டிருந்தமை.

எடுத்துக்காட்டு :-

  - பாண்டிய சாம்ராச்சியம், சோழ சாம்ராச்சியம்.

  - இலங்கை, இந்து சமுத்திரத்தின் மத்திய பகுதியில் அமைந்திருந்தமை.

  - இலங்கையின் மௌரிய, லம்பகர்ண வம்சங்களுக்கிடையில் அரசுரிமைப் போராட்டம் ஏற்பட்ட போது பலங்குறைந்த மன்னர்கள் தென்னிந்திய வேளைக்காரப் படையினரின் துணையைப் பெற்றமை.

  - பாதுகாப்புக் கருதி இலங்கையில் வைத்திருந்த பாண்டிய அரசுரிமைப் பொருட்களைச் சோழர் பெற நாடியமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## * இலங்கைக்கெதிரான தென்னிந்திய படையெடுப்புக்களின் தன்மைகள்

**முதலாம் கட்டம் - அவ்வப்போது படையெடுத்து ஆட்சிபுரிந்தமை**

எடுத்துக் காட்டு :-

- சூரதிஸ்ஸ மன்னனின் ஆட்சிக் காலத்திலே சேன, குத்திக எனப்படும் குதிரை வியாபாரிகள் படையெடுத்து 22 ஆண்டுகள் ஆட்சி செய்தமை.

- அசேல மன்னனின் ஆட்சிக் காலத்தில் எல்லாள மன்னன் படையெடுத்து இந்நாட்டை 44 ஆண்டுகள் ஆண்டமை.

- வலகம்பா மன்னனின் ஆட்சிக்காலத்தில்,
  - ஏழு தமிழ் மன்னர்கள் படையெடுத்தனர். அவர்களுள் இருவர் சோமாதேவியையும், புனித பிட்சாபாத்திரத்தையும் இந்தியாவுக்குக் கொண்டு சென்றனர்.

  - ஏனையவர்களான புலஹஸதி, பாகிய, பனயமாரன், பலயமாரன், தாட்டிக்க எனும் ஐவரும் 14 ஆண்டுகளும் 7 மாதங்களும் அனுராதபுரத்தை ஆட்சி செய்தமை.

- மித்சென் மன்னனின் ஆட்சியின் போது,
  - ஆறு தமிழர் படையெடுத்தனர். பாண்டு, பாரிந்த, புத்தபாரின்த, கிரிதா,தாட்டிய பீட்டய எனப்படுவோர் 27 ஆண்டுகள் ஆட்சி நடாத்தியமை.

**இரண்டாம் கட்டம் - பொருளாதார நன்மைகள் பெற்றமை**

- முதலாம் சேனனின் ஆடசி - (831 - 852)
  - ஸ்ரீ மாற ஸ்ரீவல்லப எனப்படும் பாண்டிய மன்னன் அனுராதபுரத்தை ஆக்கிரமித்துச் சொத்துக்களை சூறையாடியமை.

**மூன்றாம் கட்டம் - அரசியல் மேலாதிக்கம்**

- நான்காம் உதய மன்னனின் ஆட்சியின் போது,
  - முதலாம் பராந்தக(சோழ) மன்னன் பாண்டிய அரசுரிமைப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் படையெடுத்தான்.

  - நான்காம் மகிந்த மன்னன் ஆட்சியின் போது மூன்றாம் கிரு'ணன் எனப்படும் இரா'டிர கூட வம்ச மன்னன் ஆக்கிரமிப்பு.

- ஐந்தாம் மகிந்தனின் ஆட்சியிக் காலத்தில்,
  - முதலாம் ராஜராஜ மன்னன் (கி.பி.993) அரசுடமைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றியமை.

- முதலாம் இராஜேந்திர மன்னனின் படையெடுப்பு.
  - கி.பி 1017 இல் ஆட்சியைக் கைப்பற்றினான். சோழரது ஆதிக்கத்தின் கீழ்க் கொணர்ந்தான்.

## 7.3.3 அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும் சோழமேலாதிக்கமும்.

அநுராதபுர இராசதானி வீழ்ச்சியுறுவதற்கான காரணங்கள் :

- மௌரிய, இலம்பகர்ண இராச வம்சங்கள் இரண்டுக்கும் இடையிலான மோதல்களினால் நாட்டில் கிளர்ச்சிக்கான நிலை காணப்பட்டமை.

- நலிவான ஆட்சியாளரின் காலத்தில் தென்னிந்திய படையெடுப்புக்கள் ஏற்பட்டமை.

**எடுத்துக்காட்டு :-**

சோழர் படையெடுத்த காலத்தில் இந்நாட்டில் ஆட்சி செய்த ஐந்தாம் மகிந்தன் நலிவான ஆட்சியாளனாக இருந்தமை.

- பொருளாதாரம் சீரழிந்து காணப்பட்டமை.

- படையெடுப்புகளின் விளைவாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசருக்கு முடியாமற் போனமை.

- நீர்பாசனக் குளங்கள், அணைகள், கால்வாய்கள் என்பன நாசமாகியமை.

- அரச வருமானம் குன்றியமை.

- அநுரதபுர அரச அதிகாரிகள் மன்னனுக்கு எதிராக கிளர்ந்தெழுந்தமை.

- மன்னன் உருகுணைக்குத் தப்பியோடியதால் அனுராதபுரத்தில் அரச அதிகாரம் சீர்குலைந்து காணப்பட்டமை.

- இராஜேந்திர சோழன் உருகுணையைக் கைப்பற்றியதோடு, ஐந்தாம் மகிந்தமன்னனைக் கைது செய்து, பாண்டிய நாட்டு அரசுரிமைப் பொருட்களையும் பெற்றுக் கொண்டமை.

- சோழர்கள் அநுரதபுரத்தை அரசின் நிர்வாக நிலையமாக இருப்பதை விடுத்து பொலனறுவையை நிர்வாக நிலையமாகத் தெரிவு செய்தமை.

- 1500 ஆண்டுகள் காலம் ஆட்சிக் கேந்திரநிலையமாகவும் தலை நகரகவும் இருந்த அனுராதபுரம் வீழ்ச்சியுற்றமை.

**சோழரின் ஆட்சி.**

- சோழப் பேரரசு 8 நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டதுடன், இலங்கையில் அவர்களின் கீழ் இருந்த பகுதிகளும் அந்த நிர்வாகக் கட்டமைப்புக்களுள் அடங்கியிருந்தது.
- இலங்கையில் சோழரின் நிர்வாகப்பகுதி "மும்முடிச்சோழ மண்டலம்" என்றழைக்கப்பட்டது.
- பொலன்னறுவை சோழரின் தலைநகராகத் தெரிவு செய்தமை.
- அந்நகர் ஜனநாதபுரம் (ஜனநாத மங்கலம்) என்றழைக்கப்பட்டமை.
- மும்முடிச்சோழ மண்டலப் பகுதியில் இராணுவ ரீதியான தன்மையில் ஆட்சி செய்யப்பட்டமை.
- சோழசக்கரவர்த்தியினால் நியமிக்கப்பட்ட இராணுவத் தளபதியால் ஆட்சி நடாத்தப்பட்டமை.
- உயர் பதவிக்குச் சோழர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டமை.
- முறையாக வரிகள் அறவிடப்பட்டுத் தம் நாட்டுக்கு அவற்றை அனுப்பியமை.
- முக்கியமாக காணிவரியை அறவிட்டு அரசவருமானத்தை உறுதி செய்து கொண்டமை.
- அரச நிர்வாகப்பிரதிநிதியின் தலைமையிலான அதிகாரிகள் இறைவரி, கப்பம், பரிசில்கள் என்பவற்றைச் சேகரித்து ஆண்டு தோறும் சோழநாட்டுக்கு அனுப்பியமை.
- இந்நடவடிக்கைகள் முறையாக நடந்தமையால் சோழச்சக்காரவர்த்தியின் தலையீடின்றி இலங்கையின் சோழப்பகுதிகளை அவர்கள் விரும்பியவாறே ஆட்சி செய்தமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.3.1

**தேர்ச்சி மட்டம்** :-

- இலங்கையில் பலவித செல்வாக்குகளை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகளை இந்தியாவின் மாதிரித் தேசப்படமொன்றில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.
- இலங்கை தென்னிந்தியாவுடன் மேற்கொண்ட தொடர்புகளின் தன்மையைத் தேடியறிவார்.

**செயற்பாடு** :-

- தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய உறவுகளை அறிந்து கொள்வோம்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்.

**தரவிருத்தி உள்ளீடு** :-

- இணைப்பு இல. 1.1 - தென்னிந்திய இராச்சியங்கள். (பல்லவ, - பாண்டிய, சேர, சோழ.)
- இணைப்பு இல. 1.2 - செயற்பாட்டுப் பத்திரம் I - குழு I
- இணைப்பு இல. 1.3 - செயற்பாட்டுப் பத்திரம் II - குழு II
- இணைப்பு இல. 1.4 - செயற்பாட்டுப் பத்திரம் III - குழு III
- இணைப்பு இல. 1.5 - செயற்பாட்டுப் பத்திரம் IV - குழு IV
- எழுதுதாள்கள்.
- படம் வரையத்தேவையான நிறப்பென்சில்கள்.
- மூலாதர நூல்கள் - தரம் 7 வரலாற்றுப்பாடநூல்.

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை

**படி 7.3.1.1**

I.

- இணைப்பு 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தென்னிந்திய அரசுகளினதும், இலங்கையினதும் அமைவைக்காட்டும் தேசப்படத்தை வகுப்பிற் காட்சிப்படுத்துங்கள்.
- அதில் காணப்படும் தென்னிந்திய அரசுகள் யாவை என வினவுங்கள்.
- இலங்கைக்கு மிகவும் அன்மையில் உள்ள இத்தென்னிந்திய அரசு குறித்து குறுகிய விளக்கமொன்றைத் தந்து, இலங்கை அந்நாடுகளுடன் கடந்தகாலத்தில் நடத்திய தொடர்புகளைப்பற்றிய கலந்துரையாடலைக் நடத்துங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இங்கு கீழ்க்காணும் தகவல்கள் வெளிப்படுமாறு கலந்துரையாடலைக் கட்டியெழுப்பவும்.

| |
|---|
| • சேர, சோழ, பாண்டிய, பல்லவ இராசதானிகள் தென்னிந்திய அரசுகளாகும். |
| • இந்த இராசதானிகளின் எல்லைகளும் ஆட்சி அதிகாரங்களும் காலத்துக்குக் காலம் மாறியுள்ளன. |
| • இந்த அரசுகள் பல்வேறு விதங்களாக இலங்கையின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளன. |

(10 நிமிடங்கள்.)

**படி 7.3.1.2**

II.

- வகுப்பை ஏற்றவாறு குழுக்களாக்குக.
- செய்ய வேண்டிய பணிகுறித்து பொதுவான காலந்துரையாடல் மூலம் அறிவுரை வழங்குங்கள்.
- இணைப்பு 1.2, 1.3, 1.4, 1.5 செயற்பாட்டுப்பத்திரங்களை ஒவ்வொரு குழுவுக்கும் பகிர்ந்தளியுங்கள்.
- குழுவின் அனைவரும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை உறுதி செய்யுங்கள்.
- குழுவின் அனைத்து உறுப்பினரதும் செயற்பாடுகள் குறித்து மதிப்பீடு ஒன்று மேற்கொள்வதாகக் குறிப்பிடுக.
- தரப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்துக்கு அமைவாக குழுக்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஆசிரியர் எப்போதும் எல்லாக் குழுக்களுக்கும் தேவையான அறிவுறுத்தலை வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்.)

**படி 7.3.1.3**

III.

- ஒவ்வொரு குழுவினதும் ஆக்கங்களை வகுப்பிற் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
- குழுவின் சமர்ப்பணத்தின் பின் தேவையான இடங்களில் குறைநிரப்பு செய்தவாறு பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு மீளாய்வில் ஈடுபடுக.
- முக்கியமான தகவல்களைக் குறித்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கவும்.

- தென்னிந்தியாவில் அடிக்கடி பலம் பெற்ற பல்லவ, பாண்டிய, சேர, சோழ அரசுகள் இலங்கைக்கு அன்மையில் அமைந்திருந்தமையினால் அவற்றின் பல்வேறு தாக்கங்களுக்கு இலங்கை ஆளானது.
- இத் தொடர்புகள் இராஜதந்திர உறவுகள், சமய உறவுகள், கலாச்சார உறவுகள், பொருளாதார உறவுகள் என விபரிக்கலாம்.
- இலங்கையின் மன்னர்கள் அரசு கட்டிலுக்காக நடந்த போராட்டங்களில் தென்னிந்திய அரசுகளின் இராணுவ உதவியைப் பெற்றனர்.
- முதலாம் முகலன், இரண்டாம் அக்போ, முதலாம் தாதோபதிஸ்ஸ, இரண்டாம் தாதோபதிஸ்ஸ, மானவம்ம போன்ற மன்னர்கள் அவ்வாறுதென்னிந்திய அரசுகளின் உதவியைப் பெற்று அரசதிகாரத்தை உறுதி செய்து கொண்டனர்.
- தென்னிந்திய மன்னர்களும் தமது அதிகாரத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை மன்னர்களின் உதவியை பெற்றனர்.
- இரண்டாம் வரகுணபாண்டிய மன்னன், இரண்டாம் சேரமன்னனிடமிருந்தும், இரண்டாம் மாறவர்மன் பாண்டிய மன்னன் ஐந்தாம் காசியப்ப மன்னனிடமிருந்தும், மாறவர்மன் இராஜசிங்கன் பாண்டிய மன்னன் நான்காம் தப்புல மன்னனிடமிருந்தும் தமது அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்காக இவ்வாறாக உதவியினைப் பெற்றனர்.
- இலங்கையின் சிங்கள அரசர்கள் தென்னிந்திய இராணுவ உதவியைப் பெற்றதனால் காலப்போக்கில் இலங்கையில் தமிழ்க் கூலிப்படையினரின் செயல் நாட்டின் இறைமைக்கும் அச்சுறுத்தலாகியது.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- இலங்கைக்கும் தென்னிந்திய அரசுகளுக்கும் இடையே நிலவிய அரசியல், சமய, கலாசார உறவுகளை விபரிப்பார்.
- மூலாதாரங்களிலிருந்து தகவல்களைப் பெற்று வரலாற்றைத் தகவல்களைப் பொழிப்பாக்கிக் கொள்ளலாம் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- தென்னிந்திய அரசுகளினதும் இலங்கையினதும் அமைவை மாதிரித் தேசப்படமொன்றில் அடையாளமிட்டுப் பெயரிடுவார்.
- குழுவினுள் ஒற்றுமையாகத் தொழிற்படுவார்.
- தென்னிந்திய உறவுகளின் மூலம் கடந்த காலத்தில் இலங்கைக்கு முகங்கொடுக்க நேர்ந்த செல்வாக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் நடைமுறை இலங்கையின் கொள்கைகளை ஆமைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துவார்.

**ஒப்படை**

- பாடத்தின் இறுதியில் பின்வரும் அப்பியாசங்களில் மாணவரை ஈடுபடுத்தவும்.


- தென்னிந்திய அரசுகளினதும் இலங்கையினதும் அமைவைக் காட்டும் தேசப்படமொன்றைத் தயாரித்தல்.

- இலங்கை அரசர்கள் தென்னிந்திய இராசதானிகளிலிருந்து இராணுவ உதவியைப் பெற்ற சந்தர்ப்பங்களைக் கொண்ட அட்டவணையைத் தயாரித்தல்.

- தென்னிந்திய அரசர்கள் இலங்கை மன்னர்களிடமிருந்து உதவியைப் பெற்ற சந்தர்ப்பங்களைக் கொண்ட அட்டவணையைத் தயாரித்தல்.

- இலங்கைக்கும் தென்னிந்தியவுக்கும் இடையே நிலவிய சமய, கலாசார, பொருளாதர, உறவுகளை அட்டவணைப்படுத்துக.

**இணைப்பு 1.2**



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**குழு I - செயற்பாட்டுப் பத்திரம் I.**

உங்கள் குழுவுக்கு தென்னிந்தியாவின் பாண்டிய, சேர, சோழ, பல்லவ இராசதானிகளின் அமைவைக்கட்டும் தேசப்படத்தைத் தயாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகின்றது இதற்கென உங்களுக்குத் தரப்பட்டு உள்ள தேசப்படத்தை உபயோகித்துக் கொள்ளவும்.

அத்தேசப்படத்தில் பின்வருவனவற்றை அடையாளமிட்டுப் பெயரிடுக.

1. பாண்டிய அரசின் அமைவிடம்.
2. சோழ அரசின் அமைவிடம்.
3. பல்லவ அரசின் அமைவிடம்.
4. சேர அரசின் அமைவிடம்.
5. கிருூ்ண துங்கபத்திரை நதி.
6. காவேரி ஆறு.
7. காஞ்சிபுரம்.
8. காவிரிப்பூம்பட்டினம்.
9. தஞ்சாவூர்.
10. மதுரை.
11. குமரிமுனை.
12. இலங்கையின் மாதோட்டம் துறைமுகம்.

எல்லா ஆறுகளையும் நிலநிறத்தில் அடையாளமிடுக. தெளிவாக மனங்கவரும் விதத்தில் நிருமாணிக்கவும் தேவையான போது ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் உங்கள் ஆக்கத்தை வகுப்பில் சமர்ப்பிக்காவும்.

**குழு II - செயற்பாட்டுப் பத்திரம் II**

தென்னிந்திய அரசுகளுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவிய அரசியற் தொடர்புகள் பற்றிய விபரங்களைக் கொண்ட அட்டவணையைத் தயாரிப்பது உங்கள் குழுவுக்கு தரப்படும் ஒப்படையாகும்.

**பின்வரும் தலைப்புக்களின் கீழ் அதனைத் தயாரிக்கவும்.**

1. சிங்கள மன்னர்கள் தென்னிந்திய அரசர்களிடமிருந்து உதவிகள் பெற்ற சந்தர்ப்பங்கள்.
2. தென்னிந்திய மன்னர்கள் சிங்கள மன்னர்களிடமிருந்து உதவிகள் பெற்ற சந்தர்ப்பங்கள்.

இந்த ஒவ்வொரு தலைப்பின் கீழும் தகவல்களை அட்டவணைப்படுத்துக.

| உதவி பெற்ற அரசனின் பெயர். | எந்த அரசரிடமிருந்து உதவி பெறப்பட்டது. | உதவி பெறுவதற்கான காரணம். |
|---|---|---|
| ............................<br>...........................<br>........................... | .........................................<br>........................................<br>........................................ | .........................................<br>.........................................<br>......................................... |

- இத்தகவல் அட்டவணையைத் தயாரிப்பதற்கு முன்னர் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல் பத்திரத்தை நன்கு வாசிக்கவும்.
- பாடநூலிருந்தும் தகவல்களைப் பெறவும் தேவையானபோது ஆசிரியரின் உதவியையும் பெறுங்கள்.
- உங்கள் ஆக்கத்தை வகுப்பிற் சமர்பிக்கவும்.

## செயற்பாட்டுப் பத்திரம் IIஇற்கான தகவல் பத்திரம்.

தென்னிந்திய அரசுகளுடன் இலங்கை நடத்திய அரசியல் உறவுகள். தென்னிந்தியாவின் பலவாய்ந்த பல்லவ, பாண்டிய, சேர, சோழ அரசுகள் பல்வேறு காரணங்களினால் இலங்கைக்கு எவ்வளவோர் தாக்கங்கள் ஏற்படுத்தியமை இந்த அரசுகள் இலங்கைக்கு அண்மையில் இருந்தமையிலாகும்.

இந்த சமீபத்தன்மையின் காரணமாக இலங்கை ஆட்சியாளர்கள் போலவே தென்னிந்திய ஆட்சியாளரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பரஸ்பரம் உதவி ஒத்துழைப்புக்களை பெறத் தூண்டப்பட்டமை தெளிவாக விளக்கும் விடயமாகும்.

இந்தத் தொடர்புகளின் தன்மைக்கு அமைய அவற்றை பல பிரிவுகளாகக் காட்டலாம். இதில் முக்கிய இடத்தை அரசியல் உறவுகள் பெறுகின்றன. இதனடிப்படையில் இரு வகையான உறவுகளைக் காட்டலாம்.

1. சிங்கள மன்னர் அரசுரிமைக்காக மேற்கொண்ட உள்நாட்டுப் பூசல்களில் வெற்றியடைவதற்காகத் தென்னிந்திய மன்னர்களின் உதவியைப் பெற்ற சந்தர்ப்பங்கள்.
2. தென்னிந்திய ஆட்சியாளர்கள் அவர்களது அரசுரிமைப் பூசல்களின் வெற்றி பெறுவதற்காக இலங்கை மன்னர்களின் உதவி பெற்ற சந்தர்ப்பங்கள்.

01). சிங்கள மன்னர்கள் தென்னிந்திய அரசுகளின் மன்னர்களிடமிருந்து உதவி வேண்டி நின்ற சந்தர்ப்பங்கள்.

1. அநுராதபுரத்தில் அரசனாகி இளநாக அரனுக்கு எதிராக லம்பகர்ண வம்சத்தினர் விடுத்த எதிர்ப்பின் காரணமாக இந்தியாவுக்குத் தப்பியோடியமை. பின் இந்திய இராணுவப் படையொன்றுடன் வந்து லம்பகர்ண வம்சத்தினரைத் தோற்கடித்து அரசனாகியமை.
2. முதலாம் முகலன் மன்னன், தன் சகோதரனான முதலாம் காசியப்ப மன்னனுக்கு (சீகிரி காசியப்பன்) எதிராக தென்னிந்தியப் படையொன்றைக் கொண்டுவந்து அரசுரிமையை வெற்றி கொண்டமை.
3. மூன்றாம் அக்போமன்னன், ஜெட்டதிஸ்ஸ இளவரசனால் விடுக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக அவனுக்கு எதிராகச் சமர்புரிவதற்காக தென்னிந்தியாவிலிருந்து இராணுவப் படையொன்றைக் கொண்டுவந்து ஜெட்டாதிஸ்ஸவைத் தோற்கடித்து அரசனாகியமை.
4. ஜெட்டாதிஸ்ஸ இளவரசனின் சேனாதிபதியான தாட்டசிவ, இந்தியாவிலிருந்து படையொன்றைக் கொண்டுவந்து மூன்றாம் அக்போவைத் தோற்கடித்து முதலாம் தாட்டோபதிஸ்ஸ என்ற பெயரால் மன்னனானன்.
5. முதலாம் தாட்டோபதிஸ்ஸவுக்குப்பின் மன்னனாகிய தப்புல எனும் அரசனுக்கு எதிராக தென்னிந்திய இராணுவப்படையின் உதவியுடன் முதலாம் தாடோபதிஸ்ஸ மன்னனின் மருமகன் இரண்டாம் தாடோபதிஸ்ஸ என்ற பெயரால் தப்புல அரசனைத் தோற்கடித்து அரசனானான்.
6. மானவர்ம இளவரசன் இரண்டாம் நரசிங்க வர்ம, பல்லவ மன்னனிடமிருந்து உதவியைப் பெற்று அனுராதபுரத்தின் அரசனாகியமை.
7. நான்காம் மகிந்த மன்னன், கலிங்கத்து இளவரசியை இந்தியாவிலிருந்து தருவித்து திருமணம் செய்து கொண்டமை.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

02). தென்னிந்திய ஆட்சியாளர்கள் இலங்கை மன்னனிடமிருந்து உதவியும் ஒத்துழைப்பும் பெற்ற சந்தர்ப்பங்கள்.

1. தென்னிந்தியாவின் பாண்டிய நாட்டு அரசுரிமையைப் பெற வரகுணவர்ம இளவரசன் இலங்கையின் இரண்டாம் சேன அரசனிடமிருந்து உதவி வேண்டியமை. சிங்கள இராணுவத்தின் உதவியுடன் வரகுணவர்மன் பாண்டிய மன்னனாகியமை.
2. இரண்டாம் மாறவர்மன் இராசசிங்கன் எனும் பாண்டிய மன்னன் பராந்தக சோழன் எனும் மன்னனுக்கு எதிராக இலங்கையின் ஐந்தாம் காசியப்ப மன்னனிடமிருந்து உதவி நாடியமை.
3. இரண்டாம் மாறவர்மன் இராசசிங்கன் எனும் பாண்டிய மன்னன் 4 ஆம் தப்புல எனும் சிங்கள மன்னனிடமிருந்து சோழர்களுக்கு எதிராகச்சமர் செய்வதற்கு உதவி வேண்டியமையும். பாண்டிய மன்னன் அரசுரிமைப் பொருட்களை பாதுகாப்புக்காக 4 ஆம் தப்புல மன்னனிடம் கையளித்து மீண்டும் இந்தியாவுக்குச் சென்றமை.

### 7.3.1.4 செயற்பாட்டுப் பத்திரம் III - குழு III

தென்னிந்திய அரசுகளுடன் இலங்கை மேற்கொண்ட சமய, கலாசரா உறவுகள் பற்றிய தகவற் படிவமொன்றைத் தயாரிப்பது உங்கள் குழுவுக்கான ஒப்படையாகும். அதனைக் கீழ்க்காணும் தலைப்புகளின் கீழ் குறிக்கவும்.

| சமய, கலாசரா உறவுகள்மேற் கொள்ளப்பட்ட தென்னிந்திய நிலையங்கள். | சமய, கலாசரா உறவுகள்மேற் கொள்ளப்பட்ட இலங்கையின் நிலையங்கள். | சமய, கலாசரா உறவுகளின்போது குறிப்பிடப்படுவோரின் பெயர்கள். |
|---|---|---|
| --------------------<br>-------------------- | ----------------------<br>---------------------- | ---------------------------------<br>--------------------------------- |

- இந்த அட்டவணையைத் தயாரிக்கும் போது அதற்கெனத் தரப்பட்டுள்ள தகவற்பத்திரத்தை நன்கு வாசித்துப்பார்க்கவும்.
- பாடநூலிலிருந்தும் தேவையான தகவல்களைப் பெறவும்.
- தேவையான போது ஆசிரியரின் உதவியைப் பெறவும்.
- உங்கள் ஆக்கத்தை வகுப்பிற் சமர்பிக்கவும்.

### செயற்பாட்டுப் பத்திரம் III இற்கான தகவற் பத்திரம்.

தென்னிந்திய அரசுகளுடன் நிலவிய சமய, கலாசார உறவுகள்.

- தென்னிந்தியாவின் நாகார்ஜுன கொண்ட, அமராவதி எனும் பௌத்த நிலையங்களுடன் இலங்கையின் பிக்குகள் தொடர்புகள் கொண்டிருந்தமை.
- அமராவதி செதுக்கல்கள், மற்றும் சிற்பப்பாரம்பரியங்களின் செல்வாக்கை இலங்கையின் செதுக்கல் மற்றும் சிற்பக் கலைகளிற் காணலாம்.
- தென்னிந்தியாவின் மகாயான பௌத்த நிலையத்தடன் இலங்கையின் பிக்குமார்கள் தொடர்பு கொண்டிருந்தமையைக் காண முடிகின்றது. சோழநாட்டில் காவிரிப்பட்டினத்தில் ஆச்சிரமம் ஒன்றில் இலங்கையிலிருந்து நாடுகடத்தப்பட்ட மகாயான பிக்குகள் வாழ்ந்தமை மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- தென்னிந்தியாவின் வச்சிரபோதி எனப்படும் மகாயானப் பண்டிதர் இலங்கையின் அபயகிரி விகாரையில் சிலகாலம் வாழ்ந்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### செயற்பாட்டுப் பத்திரம் IV குழு IV

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையே நிலவிய பொருளாதார தொடர்புகள் உள்ளடங்கும் சிறுதகவல் பத்திரமொன்றைத் தயாரிப்பது உங்கள் குழுவுக்குத் தரப்படும் ஒப்படையாகும்.

இத்தகவற் பத்திரத்திலே பின்வரும் விடயங்களை உள்ளடக்கவும்.

- இந்நாட்டின் வர்த்தகப் பிரிவு ஆரம்பமான விதம்.
- வர்த்தகப் பொருட்கள் பண்டமாற்றம் செய்யப்பட்ட தென்னிந்திய நிலையங்கள், இலங்கையின் வர்த்தக நிலையங்கள் என்பவற்றின் பெயர்கள்.
- வேறு பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள்.

இத்தகவற் படிவத்தை தயார் செய்யும் முன்னர் தரப்பட்டுள்ள விளக்கப்படிவத்தைக் கற்கவும்.

- பாடநூலிலிருந்தும் தகவல்களைப் பெறவும்.
- உங்கள் ஆக்கங்களை வகுப்பில் சமர்பிக்கவும்.
- தேவையான போது ஆசிரியரின் உதவியைப் பெறவும்.

### செயற்பாட்டுப் பத்திரம் IVஇற்கான தகவற் பத்திரம்.

தென்னிந்திய அரசுகளுடன் நிலவிய பொருளாதாரத் தொடர்புகள்.

- இளவரசன் விஜயன் தென்னிந்தியாவின் மதுரையிலிருந்து தருவித்த இளவரசியுடன் வந்த 18 நுட்பக் கலைகளுக்குரிய குடும்பங்களிலிருந்து இந்நாட்டின் வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பமாகின.
- இலங்கையில் மாதோட்டம் ஏனைய வர்த்தகத்துறைமுகங்களுக்கும் தென்னிந்தியாவின் துறைமுகங்களுக்கும் இடையே வர்த்தகப் பண்டமாற்று இடம் பெற்றது.
- மாதோட்டத் துறைமுகத்திலிருந்து தென்னிந்திய காவிரிப்பட்டணத்திற்குப் பண்டங்களை எடுத்துக் கொண்டு வர்த்தகத்துக்காக சென்றதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது.
- வங்கநாசிக திஸ்ஸ அரசனின் காலத்தில் சோழ மன்னனொருவன் 12000 இளைஞர்களைத் தென்னிந்தியாவின் காவிரிப்பட்டணத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக அழைத்துச் சென்றதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது.

**செயற்பாடு 7.3.2**

**தேர்ச்சி மட்டம் :-** அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சியில் தென்னிந்திய படையெடுப்புகள் தாக்கம் செலுத்திய விதத்தை விவரிப்பார்.

**செயற்பாடு :-** தென்னிந்திய அரசுகள் இலங்கை மீது படையெடுத்தல்.

**நேரம் :-** 80 நிமிடங்கள்.

**தரவிருத்தி உள்ளீடு:-**
- இணைப்பு : 7.3.2.1 - தென்னிந்திய இராசதானியைக் காட்டும் தேசப்படம்.
- இணைப்பு 7.3.2.2 - செயற்பாட்டுப் பத்திரம்
- எழுதுதாள்கள்.

## கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு.

### படி - 7.3.2.1

- இணைப்பு 7.3.2.1 தேசப்படத்தை வகுப்பிற் காட்சிப்படுத்துங்கள்.
- முன்னைய படத்திற் கலந்துரையாடிய இலங்கை - தென்னிந்திய தொடர்புகளை நினைவுகூர்ந்தவாறு அத்தொடர்களின் இன்னுமொரு இயல்பான தென்னிந்திய படையெடுப்பு பற்றி மாணவருடன் குறுகிய கலந்துரையாடலை மேற்கொள்ளக.

  இக்கலந்துரையாடலின் போது பின்வரும் விடயங்களை வெளிப்படுத்திக் காட்டுங்கள்.

- இந்தியாவின் அண்மையில் இலங்கை அமைந்திருப்பதால் தென்னிந்தியாவின் ஆக்கிரமிப்புகளுக்கு இலங்கை ஆளானது.
- அண்மையிலேயே அமைந்திருந்ததால் இலங்கையின் சில தாக்கங்களுக்கு தென்னிந்தியாவும் உட்பட்டமை.
- இதன் மூலம் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே இடைத் தொடர்புகள் கட்டி எழுப்பப்பட்டமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

படி - 7.3.2.2

- வகுப்பை விரும்பியவாறு குழுக்களாக பிரிக்கவும்.
- செய்ய வேண்டிய வேலை தொடர்பாக பொதுக் கலந்துரையாடலின் மூலம் அறிவுரை வழங்குக.
- இணைப்பு 7.3.2.2 ன் செயற்பாட்டுப் பத்திரத்தினை ஒவ்வொரு குழுவுக்கும் பகிர்ந்து கொடுக்கவும்.
- குழுவின் அனைவரும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- குழுவின் எல்லா உறுப்பினரும் மதிப்பீட்டுக்கு உள்ளாவர் எனக் குறிப்பிடுங்கள்.
- தரப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்துக்கமைய குழுக்களை செயற்பாட்டிலீடுபடுத்துங்கள்.
- எப்போதும் எல்லாக் குழுக்களுக்கும் உதவி வழங்குங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி - 7.3.2.3**

- ஒவ்வொரு குழுவினதும் ஆக்கங்களை வகுப்பில் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுக்கள் சமர்ப்பணம் செய்தபின் தேவையான இடங்களில் குறை நிரப்புச் செய்தவாறு பின்வரும் விடயங்கள் வெளிப்படுமாறு மீளாய்வில் ஈடுபடவும்.

- இலங்கை - தென்னிந்திய உறவுகளில் தீய தாக்கங்களை ஏற்படுத்திய சந்தர்ப்பமாக தென்னிந்திய படையெடுப்பைக் குறிப்பிடலாம்.
- இலங்கைக்கு தென்னிந்தியா படையெடுப்புச் செய்வதில் பல காரணங்கள் செல்வாக்குச் செலுத்தின.
- தென்னிந்தியாவில் பலம்வாய்ந்த இராச்சியங்கள் ஏற்பட்டமை, இலங்கையில் அடிக்கடி நலிவான ஆட்சியாளர்கள் உருவாகியமை, இலங்கை, தென்னிந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருந்தமை, இலங்கையின் நலிவான அரசர்கள் தம் அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்காக தென்னிந்திய அரசரின் உதவியை நாடியமை போன்ற காரணங்கள் ஆக்கிரமிப்புக்கு வழிவகுத்தன.

- இலங்கையை நோக்கி விடுக்கப்பட்ட ஆக்கிரமிப்புக்களை, ஆக்கிரமிப்புக்கள், அரசியல் மேலாதிக்கத்துக்கான ஆக்கிரமிப்பு, பொருளாதார நன்மைகளுக்காக நிகழ்த்தப்பட்ட ஆக்கிரமிப்புக்களென வேறாக்கிக்காட்ட முடியும்.

- ஐந்தாம் மகிந்த மன்னனின் நலிவான ஆட்சியின் காரணமாக தென்னிந்தியாவில் பலம்பெற்றிருந்த சோழப் பேரரசால் விடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பின் காரணமாக இலங்கையின் வடபுலம் சோழப் பேரரசின் ஒரு பகுதியாகியது.

- தென்னிந்திய படையெடுப்பின் காரணமாக இலங்கையின் அநுராதபுர இராசதானி சீரழிவுக்குள்ளாகியது.

- தென்னிந்தியாவின் பலம்வாய்ந்த இராசதானிகள் தமது ஆதிக்கத்தைத் தெற்கில் பரவலாக்கும் நோக்கத்தின் காரணமாக பெரும்பாலும் இலங்கை தென்னிந்திய படையெடுப்புக்கு உட்பட்டது.

- இலங்கையின் அரசுரிமை காரணமாக ஏற்பட்ட பூசல்களினால் ஆட்சி நிலைகுன்றியதால் தென்னிந்திய படையெடுப்பாளருக்கு இந்நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றுவது இலகுவாகியது.

- இலங்கையின் நலிவான ஆட்சியாளர்கள் தென்னிந்திய இராணுவப்படைகளின் உதவியைப் பெற்றதனால் தென்னிந்திய படையெடுப்பாளருக்கு இந்நாட்டிலிருந்த தென்னிந்திய கூலிப்படையினரின் உதவி கிட்டியது.

- சூரதிஸ்ஸ, அசேல, வலகம்பா, மித்தசேனபோன்ற அரசர்கள் ஆண்ட நலிவான அரசியல் நிலைமை காரணமாக தென்னிந்தியா இலங்கை மீது படையெடுத்தது.

- பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்காக முதலாம் சேனன் ஆட்சிக்காலத்தில் பாண்டியர்கள் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்தனர்.

- தென்னிந்தியாவின் பலம்வாய்ந்த சோழசாம்ராச்சியம் நான்காம் உதய மன்னன் ஆட்சிகாலத்தில் இலங்கை மீது படையெடுத்தது.

- ஐந்தாம் மகிந்தன் எனும் மிகப் பலவீனமான சிங்கள மன்னன் ஆட்சிக்காலத்தில் சோழர்கள் இலங்கை மீது படையெடுத்து 1017 இல் அநுராதபுர இராசதானியைத் தமது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தனர்.

- சோழர்கள் அநுராதபுரத்தை கைவிட்டு, பொலனறுவையைத் தலைநகராக்கியதால் அனுராதபுர இராசதானி வீழ்ச்சியடைந்தது..

- சிங்கள ஆட்சியாளரின் நலிவுகள் காரணமாக அனுராதபுர இராச்சியத்தில் நிலவிய புகழ்மிக்க பொருளாதார, கலாசார முன்னேற்றங்களும் சீரழிந்தன.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்.

- இலங்கை மீது தென்னிந்திய படையெடுப்புக்கள் இடம் பெற்றமைக்குரிய காரணங்களை விவரிப்பார்.

- இலங்கை மீது தென்னிந்திய படையெடுப்புகள் இடம்பெற்றதால் அனுராதபுர இராசதானி வீழ்ச்சியுற்றதென்பதை ஏற்றுக்கொள்வார்.

- தென்னிந்திய படையெடுப்புகள் பற்றிய தகவல்களை அட்டவணைப்படுத்துவார்.

- குழுவின் ஒற்றுமையான முயற்சியுடன் மிகவும் வெற்றிகரமான ஆக்கங்களை உருவாக்குவதற்கு முடியுமென்பதை மனதிற் கொள்வார்.

- தென்னிந்திய படையெடுப்புகளின் தீய தாக்கங்களை விமர்சிப்பதற்குத் தூண்டப்படுவார்.

**ஒப்படை :**

பாடத்தின் இறுதியில் பின்வரும் அப்பியாசங்களில் மாணவரை ஈடுபடுத்துக.

01. இலங்கைக்கு விடுக்கப்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களையும் அவற்றை நடாத்திய இந்திய ஆட்சியாளரையும் அக்காலத்தில் இலங்கையிலிருந்த ஆட்சியாளரையும் பற்றிய தகவல்களைக் கொண்ட அட்டவணையைத் தயாரித்தல்.

02. தென்னிந்திய ஆக்கிரமிப்பின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட தீய விளைவுகளைக் கொண்ட அட்டவணை தயாரித்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 7.2.2**

**செயற்பாட்டுப் பத்திரம்.**

இலங்கைக்கு விடுக்கப்பட்ட தென்னிந்திய ஆக்கிரமிப்பு பற்றிய விபரமடங்கிய அட்டவணையைத் தயாரிப்பது உங்களுக்கு தரப்படும் ஒப்படையாகும்.

பின்வரும் தலைப்புக்களின் கீழ் உங்கள் ஆக்கத்தைத் தயாரிக்கவும்.

01. இலங்கை, இந்தியாவின் படையெடுப்புகளுக்கு உட்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்..

02. இலங்கை மீது நடைபெற்ற படையெடுப்புகள் பற்றிய விபரங்களைப் பின்வரும் மாதிரிக்கு அமைய தயாரிக்கவும்.

| இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்த தென்னிந்திய ஆட்சியாளர் | அக்காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த மன்னன் | ஆக்கிரமிப்புக்கான காரணம் | ஆக்கரமிப்பின் விளைவு |
|---|---|---|---|
| ........................................<br>........................................<br>........................................ | ......................<br>......................<br>...................... | ..........................<br>.........................<br>.......................... | .....................<br>.....................<br>..................... |

- செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு முன்னர் தரப்பட்டுள்ள தகவற் பத்திரத்தைக் கற்கவும்.
- பாடநூலிலிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.
- உங்கள் ஆக்கத்தை வகுப்பில் சமர்பிக்கவும்.

**செயற்பாட்டுப் பத்திரம் I இற்கான தகவற் பத்திரம்.**

**இலங்கை மீது நடைபெற்ற தென்னிந்திய படையெடுப்புகள்.**

இலங்கையானது வெகு நெடுங்காலமாகவே இந்தியாவின் தாக்கங்களுக்கு உள்ளாகியது. இத்தாக்கங்களுள் நன்மையானவை போலவே தீய தாக்கங்களும் இருந்தன.

இவற்றுள் தீய தாக்கங்களாக குறிப்பாகக் கூறக்கூடியது. தென்னிந்திய அரசுகளினால் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்களாகும்.

இலங்கையானது தென்னிந்திய ஆக்கிரமிப்புக்குள்ளாவதற்குப் பல காரணங்களிருந்தன.

01. தென்னிந்தியாவுக்கு மிகச் சமீபமாக இலங்கை அமைந்திருந்தமை.
02. தென்னிந்தியாவில் அடிக்கடி தோற்றிய பலம்வாய்ந்த அரசுகள் தமது அதிகாரத்தை மிக இலகுவாக இலங்கையில் செலுத்தக் கூடியதாயிருந்தமை.

03. இலங்கையின் அரச பரம்பரையினரிடையே ஏற்பட்ட பூசல்களில் தமது அதிகாரத்தை உறுதிசெய்வதற்காக சில மன்னர்கள் தென்னிந்திய படையினரின் உதவியைப் பெற்றமை.

04. பாதுகாப்புக்காகப் பாண்டிய அரசுடைமைப் பொருட்களை இலங்கையின் அரசரிடம் கொடுத்துச் சென்றதால், சோழருக்கு அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தமை.

இலங்கை மீது இடம்பெற்ற தென்னிந்திய படையெடுப்புகளின் தன்மை.

**முதலாவது கட்டம்.**

- அவ்வப்போது இலங்கையிலிருந்து நலிவான ஆட்சியிலிருந்து பயன் பெறுவதற்காகச் செய்யப்பட்ட படையெடுப்பகள்.

- சூரதிஸ்ஸவின் ஆட்சிக்காலம்.
  சேன மற்றும் குத்திக குதிரைவியாபாரிகளின் படையெடுப்பு, 22 வருடகாலம் ஆட்சிசெய்தல்.

- அசேலவின் ஆட்சிக்காலம்.
  எல்லாளன் எனப்படும் சோழ தளபதி இந்நாட்டின் மீது படையெடுத்து 44 வருடங்கள் ஆண்டமை.

- வலகம்பாவின் ஆட்சிக்காலம்.
  தமிழர் எழுவரின் படையெடுப்பு அவர்களுள் இருவர் பிட்சாபாத்திரத்தையும் சோமாதேவியையும் எடுத்துக்கொண்டு இந்தியாவுக்குப் போனதுடன் எஞ்சிய ஐவரான புலஹத்த, பாகிய, பணயமாரன், பிலியமாரன், தாடக என்போர் 14 ஆண்டுகளும் 07 மாதங்களும் அநுராதபுரியை நிர்வகித்தமை.

- மித்சென்னின் ஆட்சிக்காலம்.
  தமிழர் அறுவரின் ஆக்கிரமிப்பு, பண்டு, பாரிந்த, குத்தபாரிந்த, திரிதரன், தாட்டிய, பீட்டய என்போர் 27 ஆண்டுகள் அனுராதபுரத்தைப் பரிபாலித்தமை.

**இரண்டாம் கட்டம்** - பொருளாதார நன்மைகளைப் பெறுவதற்காக.

- முதலாம் சேனனின் ஆட்சிக்காலம்.
  ஸ்ரீமார வல்லபன் எனும் பாண்டிய மன்னன், அனுரதபுரத்தை ஆக்கிரமித்து பொருட்கொள்ளையடித்தமை.

**மூன்றாம் கட்டம்** - அரசியல் மேலாதிக்கத்துக்காக.

- நான்காம் உதயனின் ஆட்சிக்காலம்.
  முதலாம் பராந்தக சோழமன்னன், பாண்டிய அரசுடைமைப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கையை ஆட்சி செய்தமை.

- நான்காம் மகிந்தவின் ஆட்சிக்காலம் :
  இராஷ்டிர கூட நாட்டின் ஆட்சியாளரான மூன்றாம் கிருஷ்ணன் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்தமை.
- ஐந்தாம் மகிந்தவின் ஆட்சிக் காலம் :
  முதலாம் ராஜராஜ சோழன் இலங்கையை ஆட்சி செய்தமை.(கி.பி.993)
  முதலாம் ராசேந்திரசோழனின் ஆக்கிரமிப்பு (கி.பி. 1017) அனுராதபுரத்தை தன்வசமாக்கியமை.

- முதலாம் ராசேந்திரன் இலங்கையின் வடபுலத்தைத் தன்வசமாக்கி அதனை சோழ சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டமை. (மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயரால்)

  சோழர்கள் அநுராதபுரத்தைக் கைவிட்டு பொலன்னருவையைத் தலைநகராகத் தெரிவு செய்து அதனை ஜனநாதபுரம் என்ற பெயரால் அழைத்தனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**செயற்பாடு 7.3.3**

**தேர்ச்சி மட்டம்** :- அநுராதபுரத்தின் வீழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து இலங்கையின் சோழர் ஆட்சி செயற்பட்ட விதத்தையும் விளக்குவார்.

**செயற்பாடு** :- அநுராதபுரத்தின் வீழ்ச்சியும் சோழர் நிர்வாக ஒழுங்கமைப்பும்.

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தரவிருத்தி உள்ளீடு**:-
- இணைப்பு 3.1 - தென்னிந்திய படையெடுப்பாளர்களின் விபரங்களைக் காட்டும் அட்டவணை.
- இணைப்பு 3.2 - செயற்பாட்டுப்படிவமும் தகவற் படிவமும்.
- A - 4 தாள்கள்.
- மூலாதார நூல்கள்
- பாடப்புத்தகம்.

## கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு.

படி - 7.3.3.1

- இணைப்பு இல. 1 இல் காணப்படும் அட்டவணையை வகுப்பின் முன் வைக்கவும்.
- அதன் மூலம் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய படையெடுப்பு பற்றிய மாணவரின் முன்னறிவை வெளிப்படுத்தியவாறு கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

அதில் பின்வரும் விடயங்களின்பால் கவனத்தைச் செலுத்துங்கள்.

- அனுராதபுர இராசதானி வீழ்ச்சியுறுவதில் தாக்கஞ்செலுத்திய காரணங்கள் பலவிருந்தன.
- சிங்கள் அரச பரம்பரையினரின் இடையே நிலவிய பூசல்களும் நலிவான ஆட்சியாளர்களும் காரணமாயின.
- தென்னிந்திய ஆக்கிரமிப்பினால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றது.
- அரச வருமானம் குறைந்தது.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அரச அதிகாரிகளும், பிரதேச ஆட்சியாளரும் அரசருக்கு எதிராகக் கிளர்தெழுந்தமை.
- அரசன் உருகுணைக்குத் தப்பியோடியதால் அனுராதபுரத்தில் அராஜகம் நிலவியது.
- சோழநாட்டின் ஆக்கிரமிப்பு இக்காலத்தில் ஏற்பட்டது.
- அரசகேந்திரதானம் பொலநறுவைக்கு கொண்டு போகப்பட்டது.
- இலங்கையின் வடபுலம் சோழசாம்ராச்சியத்தின் மண்டலம் எனப்படும் ஒரு அலகாக ஆக்கப்பட்டது.
- சோழரின் இராணுவமயமான ஆட்சியை நடத்தினர்.

**படி - 7.3.3.2**

- தனிச் செயற்பாடாகச் செய்யப்படவேண்டுமென அறிவிக்கவும்.
- செய்யவேண்டிய செயற்பாடு குறித்த பொதுக் கலந்துரையாடல் மூலம் அறிவுறுத்தல் வழங்கவும்.
- இணைப்பு 3.1 செயற்பாட்டுப் பத்திரத்தை எல்லா மாணவருக்கும் வழங்கவும்.
- எல்லா மாணவரது செயற்பாடுகளும் மதிப்பீட்டுக் உள்ளாக்கப்படும் என்பதை அறிவிக்கவும்.
- மாணவர் செயற்பாடுகளில் ஈடுபடும்போது தேவையான அறிவுறுத்தலை ஆசிரியர் வழங்க வேண்டும்.

(50 நிமிடங்கள்)

**படி - 7.3.3.3**

- மாணவரின் ஆக்கங்களைச் சமர்ப்பிக்க வாய்ப்பு வழங்கவும். சமர்ப்பணங்களின் பின் தேவையான இடங்களில் குறைநிரப்புச் செய்தவாறு பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தும் விதமாக மீளாய்வில் ஈடுபடவும்.

- அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சிக்குப் பல விடயங்கள் காரணமாயின.

- மௌரிய - லம்பகர்ண அரசபரம்பரையினரிடையே ஏற்பட்ட மோதல்கள் காரணமாக நிர்வாகம் குழம்பியமையும் வீழ்ச்சியின் பிரதான காரணமாகும்.
- நலிவான ஆட்சியாளரின் காலத்தில் தென்னிந்திய பலம்வாய்ந்த அரசுகள் இலங்கையை ஆக்கிரமிப்புச் செய்வதற்கான சந்தர்ப்பமாக்கிக் கொண்டனர்.
- இந்த நாட்டிலிருந்த தென்னிந்தியப்படையினரின் செயற்பாடுகளும் இராசதானி வீழ்ச்சியடைவதற்கும் காரணமாயின.
- படையெடுப்புகளால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையும் நாட்டுச்சீரழிவுக்குக் காரணமாகியது.
- வாவிகளும் நீரப்பாசனமும் நாசமடைந்ததால் வீழ்ச்சி ஏற்பட்டது.
- ஐந்தாம் மகிந்தமன்னன் நலிவான ஒரு ஆட்சியாளராக இருந்ததுடன் உறுகுணைக்குத் தப்பியோடியதால் அநுராதபுர அரசு அராஜகமாக மாறியதும் வீழ்ச்சிக்குக் காரணமாகியது.
- இராசேந்திர சோழன் அநுராதபுரத்தை ஆக்கிரமிப்புச் செய்து தன்வசமாக்கியமையும் அரசகேந்திர நிலையத்தை பொலன்னறுவைக்குக் கொண்டு சென்றமையும் அநுரதபுரம் வீழ்ச்சியுறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.
- சோழர்கள் இராணுவமய ஆட்சியைக் கொண்டு சென்றனர்.
- வரி அறவிடல், கப்பமெடுத்தல் மூலம் பெருமளவான செல்வத்தைச் சோழர் தம் நாட்டுக்கு எடுத்துச் சென்றமை.

(15 நிமிடங்கள்.)

## கணிப்பீடும் மதிப்பீடும்.

- அநுராதபுர இராசதானி வீழ்ச்சியுறுவதற்கான காரணங்களை விளக்குவார்.
- அநுராதபுர இராசதானிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய படையெடுப்புகளை அட்டவணைப்படுத்துவார்.
- மூலாதாரங்களிலிருந்து தகவல்களைப்பெற்று முறையாக முன்வைக்கும் பழக்கத்தைப் பெறுவார்.

- கூட்டு முயற்சியின் மூலம் தகவல்களை முன்வைத்தல் மிகவும் இலகுவானது என்பதை ஏற்றுக் கொள்வார்.

- உள்நாட்டு ஆட்சியாளரிகிடையே ஒற்மையின்மை வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களுக்கு இலகுவாக அமைந்தமையைக் கடந்த காலச் சம்பவங்களினுாடாக விளங்கிக் கொண்டு எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்கான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை ஏனையோருக்கு விளக்கிச் சொல்வார்.

**பயிற்சி** :

பாடத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பெரும்பாலும் தகவல்களை பாடநூல் மூலம் சேகரிப்பதில் ஈடுபடுத்தவும்.

- இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தென்னிந்தியப் படையெடுப்புகளும் அவற்றின் தாக்கமும்.

- இலங்கையின் சோழ நிருவாகம் ஒழுங்கமைக்கப்பட்டவிதம்.

**செயற்பாட்டுப் பத்திரம் - I**

அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியையும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சோழர் ஆட்சியைப் பற்றிய தகவல்களைத் தயாரிப்பது உங்களுக்குத் தரப்படும் ஒப்படையாகும். இதற்கென தரப்பட்டுள்ள விபரப்படிவத்தைப் படிக்கவும். பாடநூலிலிருந்து விடயங்களைச் சேகரித்துக் கொள்ளவும்.

உங்களது தகவற் படிவத்துக்குப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் விடயங்களைத் தொகுத்துக் காட்டவும்.

01. அநுராதபுர இராசதானி வீழ்ச்சியுறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்.
02. சோழராட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதம்.

உங்களுக்குப் பிரச்சினையேற்படும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும். உங்களது ஆக்கங்களை வகுப்பிற் சமர்ப்பிக்கவும்.

**இணைப்பு 7.3.3.2**

**செயற்பாட்டுப் பத்திரம் I இற்கான தகவற் பத்திரம்.**

அநுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும் சோழரது மேலாதிக்கமும் 1500 ஆண்டுகள் அளவு நீண்டகால ஆட்சிக்கேந்திர நிலையமாக இருந்த அநுராதபுரம் கி. பி 1017 இல் சோழ ஆக்கிரமிப்புடன் வீழ்ச்சியுற்றது. அநுரதபுர இராசதானி வீழ்ச்சியுறுவதில் தாக்கஞ் செலுத்திய காரணங்கள் பல இருந்தன.

- மௌரிய, லம்பகர்ண எனும் அரச பரம்பரையினரிடையே அரசுரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்பட்ட மோதல்களினால் நாட்டினுள் குழப்பமான நிலை காணப்பட்டது.

- நலிவான ஆட்சியாளரின் காலத்தில் அதன் மூலம் நன்மை பெறுவதற்காக தென்னிந்திய படையெடுப்புகள் இடம்பெற்றமை.

- சோழ ஆக்கிரமிப்புக் காலத்தில் இந்நாட்டை ஆட்சிசெய்த அரசன் 5 ஆம் மகிந்தன் நலிவான அரசனாயிருந்தமை.

- படையெடுப்புகளின் காரணத்தினால் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் அரசுக்கு இல்லாதிருந்தமை.

- வாவிகளும் நீர்ப்பாசனமும் நாசமாகியமை.

- அரச வருமானம் குறைந்தமை.

- அநுராதபுர ஆட்சியதிகாரிகள் அரசனுக்கெதிராக கிளர்ச்சி செய்தமை.

- ஐந்தாம் மகிந்தன், அநுராதபுரத்தை விட்டுத் தப்பியோடியதால் அநுராதபுரத்தில் அராஜகம் தலைதூக்கியமை.

- இராசேந்திர சோழ மன்னன் உருகுணையை ஆக்கிரமித்து ஐந்தாம் மகிந்தனைக் கைது செய்தமை.

- சோழர்கள் அநுராதபுரத்தைக் கைவிட்டு பொலன்னறுவைக்கு நிர்வாக கேத்திர நிலையத்தைக் கொண்டு சென்றமை.

## சோழரின் ஆட்சி செயற்பட்டவிதம்.

- சோழ சாம்ராச்சியம் "மண்டலம்" எனப்படும் எட்டு அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கையில் அவர்கள் கைப்பற்றிய பகுதி அதில் ஒரு மண்டலமாக நடாத்தப்பட்து.

- இலங்கையில் சோழரின் ஆட்சிப் பிரதேசம் "மும்முடிச்சோழ மண்டலம்" என அழைக்கப்பட்டது.

- இராணுவமய ஆட்சிமுறையே நடைபெற்றதாகத் தெரிகிறது.

- சோழச்சக்கரவர்த்தியால் நியமிக்கப்பட்ட சேனாதிபதியால் ஆட்சி நடத்தப்பட்டது.

- அரசின் உயர்பதவிகளுக்குச் சோழர்கள் நியமிக்கப்பட்டனர்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- காணி வரி அறவிடப்பட்டதன் மூலம், அரச வருமானம் உறுதிப்படுத்தப்பட்டது.

- வருமானவரி, கப்பம், பரிசில்கள் ஆண்டுக்கு ஒருமுறை சோழ நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**இணைப்பு 7.3.3.1**

**இலங்கைக்கு எதிரான தென்னிந்திய ஆக்கிரமிப்பு.**

| படையெடுப்பாளர். | இலங்கையில் அப்போது இருந்த ஆட்சியாளர். | படையெடுப்புக்கான காரணம். | படையெடுப்புக்களின் விளைவு. |
|---|---|---|---|
| சேன, குத்திக. | சூரதிஸ்ஸ. | இலங்கையில் காணப்பட்ட நலிவான ஆட்சி. | 22ஆண்டுகள் இலங்கையில் ஆட்சி செய்தமை. |
| எல்லாளன் எனும் சோழச் சேனாதிபதி. | அசேல. | இலங்கையில் காணப்பட்ட நலிவான ஆட்சி. | 44 ஆண்டுகள் இலங்கையில் ஆட்சி செய்தமை. |
| தமிழர் எழுவர் படையெடுத்தமை. | வலகம்பா. | இலங்கையின் உள்நாட்டு ஆட்சியில் குழப்ப நிலைமை. | பிட்சாபாத்திரத்தை இந்தியாவுக்குக் கொண்டு சென்றமை. 14 ஆண்டுகள் அநுரதபுரத்தை ஆட்சிசெய்தமை. |
| தமிழர் அறுவர் படையெடுத்தமை. | மித்சென். | நலிவான ஆட்சி. | 27 ஆண்டுகள் அநுராதபுரத்தை ஆட்சிசெய்தமை. |
| ஸ்ரீமாரவல்லப சோழமன்னன். | முதலாம் சேன. | பொருட் கொள்ளை. | கொள்ளையடித்த பொருட்களை தென்னிந்தியாவுக்--குக் கொண்டு சென்றமை. |
| I பராந்தகச் சோழமன்னன். | நான்காம் உதய. | அரசியல் மேலாதிக்கத்தைப் பெறுதலும் அரசுடைமைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலும். | அரசுடமைப் பொருட்களைக் கொண்டுசெல்லலும் இலங்கையில் இருந்து வருடாந்தம் கப்பம் அறவிடலும். |

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | | | |
|---|---|---|---|
| III ஸ்ரீ கிருஸ்ண ராʻரகூட மன்னன். | நான்காம் மகிந்தன். | அரசியல் மேலாதிக்கததுக்காக. | ---------------- . |
| முதலாம் இராசராச சோழன் | ஐந்தாம் மகிந்தன். | அரசியல் மேலாதிக்கத்--துக்காக. | அநுராதபுர அரசு வீழ்ச்சியுற்றமையும் இலங்கையின் வடபுலம் |
| மற்றும் முதலாம் இராசேந்திர சோழ மன்னர்கள். | | | சோழ சாம்ராச்சியத்துக்கு அடிபணிதல். |

# 7.4 பொலன்னறுவை இராச்சியம்.

**பாடவேளைகள் : 15**

## அறிமுகம்.

அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் சோழரின் ஆதிக்கத்துக்குட்பட்ட இலங்கை அரசு பதினோராம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் மீளவும் வெளிநாட்டு ஆதிக்கத்திலிருந்து மீண்டு பொலன்னறுவையைத் தலைநகராக்கிக் கொண்டு பலமடைவதைக் காணக் கூடியதாயிருந்தது. பொலன்னறுவைக் காலம் இலங்கை வரலாற்றின் முக்கியமான யுகமாகப் பரிணமித்ததற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் முதலாம் விஜயபாகு, மகா பராக்கிரமபாகு, நிஸ்ஸங்கமல்ல எனும் பலம் வாய்ந்த, வீரம் பொருந்திய மன்னர்களாவர். இக்காலத்தில் பெண் தலைவிகளான லீலாவதி, கல்யாணவதி அரசிகளும் மித்தா, சுகலா இளவரசிகளும் முக்கிய இடம் பெறுகின்றனர். சிங்கள இராச்சியத்தை வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளிலிருந்து மீட்டு சமூக, பொருளாதார, கலாச்சார சமய விடயங்களில் உன்னத நிலை அடையச் செய்வதற்குப் பெருந் தொண்டாற்றிய அரசர்கள், அரசிகள், இளவரசிகள் என்போரது தேசாபிமானத்தை ஆராய்ந்து பார்த்து அதற்கு மதிப்பளித்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் மூலம் தற்காலத் தலைமுறையினருக்கு முன்னோடிகளாக வாழ்ந்து காட்டியதை அறியக் கொடுப்பதன் மூலம் அவர்களைப் பற்றிய அபிமானத்தை ஏற்படுத்துவதும் இவ்வலகைக் கற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொலன்னறுவைக் காலத்தின் இறுதிப் பகுதியில் ஆட்சி புரிந்த பலவீனமான ஆட்சியாளர்களின் நிர்வாகச் செயற்பாடுகளால் பொலன்னவை இராச்சியத்தின் அரசியல், பொருளாதார, காலாச்சார, சமயத் துறைகளில் படிப்படியாக வீழ்ச்சி ஏற்பட்டு அதிலிருந்து பயனடைந்த கலிங்க மாகன் எனும் ஆக்கிரமிப்பாளனின் படையால் பொலன்னறுவை இராசதானி மற்றாக அழிந்து போனது.

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் இன்னொரு நோக்கம், பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கண்டறிவதாகும். கலிங்கமாகனின் கொடுங்கோன்மையினால் வளம் மிகு பொலன்னறுவை அழிவுற்று நீரியல் நாகரிகம் அஸ்தமித்துப் போனது. அது பற்றிய விளக்கத்தையும் மாணவர் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி** :-

- பொலன்னறுவை இராச்சியத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மன்னர்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார சேவைகள் பற்றி விவரிப்பார்.
- பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்வார்.

**தேர்ச்சி மட்டம்** :-

- முதலாம் விஜயபாகு, மகா பராக்கிரபாகு எனும் மன்னர்களின் செயற்பாடுகளை விபரிப்பார்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பொலன்னவைக் காலச் சிறப்பான ஆட்சியாளர்களுள் கடைசியானவரான நிஸ்ஸங்கமல்ல மன்னனின் பணிகளை விபரிப்பார்.
- பொலன்னறுவை இராச்சியத்திற்குத் தலைமையை வழங்கிய பெண்களின் அரசியல் செயற்பாடு சம்பந்தமான விடயங்களை அறிவார்.
- இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சிக்கு மாகனின் படையெடுப்பு எவ்வளவு தூரத்திற்குக் காரணமாயிருந்தது என்பதை ஆராய்வார்.

## 7.4 பொலன்னறுவை இராச்சியம்

7.4.1 • பொலன்னறுவைக் காலத்தின் ஆட்சியாளர்களும் அவர்களுடைய செயற்பாடுகளும்

- பொலன்னறுவை தலைநகராக்கப்பட்டமை பற்றிய அறிமுகம்.
  - அநுராதபுர காலத்தில் இருந்தே அது முக்கியத்துவமான ஒரு நிலையமாக இருந்தது.
  - அப்பிரதேசங்களில் குளங்கள் கட்டப்பட்டிருந்ததும் அதன் முக்கியத்துவமாகும்.
  - தென்னிந்தியாவிலிருந்து ஏற்படும் படையெடுப்புக்களை எதிர்கொள்வதற்குப் பொருத்தமான பாதுகாப்பு இடமாக அது இருந்தது.
  - மகாவலி கங்கைக் கரையோரத்தில் அமைந்திருந்தமையால் நீர்பாசன அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கு வசதியான இடமாக இருந்தமை.

- **முதலாம் விஜயபாகு மன்னர் (1055 - 1110) அரசியல் நடவடிக்கைகள்**
  - றுஹுணு இராச்சியத்தின் முலசால எனும் ஊரில் மொகலான (முகலன்) னுக்கும் லோகிதா இளவரசிக்கும் மகனாகப் பிறந்தார்.
  - இளவரசர் கீர்த்தி எனும் பெயரால் அழைக்கப்பட்டார்.
  - புத்த ராஜ (புதல்னா) என்பாரின் பாதுகாப்பில் வளர்ந்தார்.
  - புதல்னாவின் உதவியோடு படைகளைத் தயார்ப்படுத்திய இடம் சிவனொளிபாத மலையின் அடிவாரத்தில் உள்ள ஹுணுவல (சுண்ணசாலை) எனும் கிராமப்பகுதியாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இக்காலத்தில் றுஹுணையில் கதிர்காமத்தை ஆட்சி செய்த லோக அல்லது லோகேஸ்வர என்பவருக்கு எதிராக யுத்தம் செய்வதற்கு புத்தராஜ, தேவமல்ல எனும் தளபதிகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

- லோகேஸ்வரனைத் தோற்கடித்து மஹாநாக ஹுலவைத் தமது யுத்த மத்திய நிலையமாக்கிக் கொண்டு விஜயபாகு என்ற பெயருடன் அரசு கட்டிலேறினான்.

- பின்னர் கதிர்காமத்தில் அதிகாரத்தை ஸ்தாபித்துக் கொண்ட லோகேஸ்வரனின் சகோதரன் கே'தாது, காசியப்பாவைத் தோல்வியடையச் செய்து றுஹுணையின் ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்ளுதல்.

- கி.பி 1055 இல் கீர்த்தி இளவரசன் விஜயபாகு எனும் பெயரால் அரசனாதல்.

- பின்னர் இராசரட்டையை சோழ ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்கான போரை ஆரம்பித்தல்.

- மூன்று யுத்தங்களிலும் தோற்று, நான்காவது முயற்சியில் வெற்றி பெற்றமை.

**முதலாவது போர்** :- சோழர்கள் றுஹுணுவை ஆக்கிரமிக்கும் போது கதிர்காமத்தில் இருந்த விஜயபாகு அரசன் மலைநாட்டிற்குப் பின்வாங்குதல்.


**இரண்டாவது போர்** :- மஹாதித்தையில் (மாதோட்டத்தில்) வந்திறங்கிய சோழர் படையுடன் விஜயபாகுவின் தளபதிகள் இருவரான ரவிதேவ, சல எனும் இருவர் சேர்ந்து கொண்டமையால் பலவீனமடைந்த மன்னன் புலத்திகிரி (இன்றைய பலடுபான) எனுமிடத்தில் மறைந்திருத்தல்.

**மூன்றாவது போர்** :- வீர ராஜேந்திர எனும் சோழ மன்னனின் படையை எதிர் கொள்ள முடியாமல், கேகலையின் வாகிரிகல (வத்தகிரி) என்னுமிடத்தில் பதுங்கியிருத்தல்.

**நான்காவது போர்** :- இராசரட்டையை முப்பக்கத்தாலும் தாக்கி சோழப்படையைப் பலவீனப்படுத்திப் பொலன்னறுவையைக் கைப்பற்றுதல். (கி.பி.1070)

முதலாம் விஜயபாகு மன்னன் சோழருக்கெதிராக படையைக் கொண்டு நடாத்திய பாதைகள்

தேசப்படம் 7.4.1



- **பொருளாதாரச் செயற்பாடுகள்**

  சோழருக்கு எதிரான போர் நடவடிக்கைகளால் இம்மன்னருக்குப் புதிதாக நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசாசம் கிடைக்காமையால், அவற்றை புனரமைப்பதில் ஈடுபட்டார்.

  உதாரணமாக :

  - எலஹர கால்வாயில் சிதைந்துபோன இடங்களைப் புனரமைத்தல்.
  - ஊவாவின் தென் கிழக்கின் எல்லையில் அமைந்த புதுகுண வாவியை புதிதாக வெட்டுவித்தல்.
  - மஹாகந்தராவ, இனாமலுவ, நாச்சதூவ, மஹாகல்கடவல வாவிகளைப் புனரமைத்தல்.

- **சமய, கலாசார நடவடிக்கைகள்**
- பர்மாவின் அநுருத்த அரசின் உதவியுடன் உபசம்பதா சடங்கை நடத்துவித்தல்.
- ருஹுணையின் விஹாரைகளைப் புனரமைத்தல் - திஸ்ஸ மஹாராமை, சந்தகிரி விஹாரை, தெவிநுவர உருவெல விகாரை.
- மஹியங்கனைத் தூபியை மீளக் கட்டுதல்.
- சிவனொளிபாத மலைக்கு வணக்க வழிபாடுகளைச் செலுத்தி, கிளிமலை கிராமத்தை அதன் செலவுகளுக்காக அன்பளித்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பொலன்னறுவையில் மூன்று மாடிகளைக் கொண்ட மாளிகையைக் கட்டி புனித தந்த தாதுவை அங்கு பிரதி'டை செய்தமை.

- பௌத்த குருமாருக்குத் தானம் வழங்குதல் - எலஹர குடியேற்றத்தின் மூலம் கிடைத்த வருமானத்தைக் காணிக்கையாக்குதல்.

- அநுராதபுரத்தின் விஹாரைகளைப் புனரமைத்தல்.
  உதாரணமாக : மஹாவிகாரை, அபகிரி, ஜேதவனராதய, ஸ்ரீ மஹா போதியின் போதி மனை.

- **முதலாம் பராக்கிரமபாகு மன்னன்**
  **அரசியல் நடவடிக்கைகள்**
- தக்கிண தேசத்தில் கேகாலைப் பிரதேசத்தில் தெதிகம அவரின் பிறப்பிடமாகும்.

- தக்கிண தேச அரசனாக இருந்த மாணாபரனுக்கும் ரத்னாவளி அரசிக்கும் மகனாகப் பிறந்தான்.

- தந்தையின் மரணத்தினால் பராக்கிரமபாகு இளவரசன் பாதுகாப்புக் கருதி றுஹுணையிலிருந்து கீர்த்தி ஸ்ரீ மேகன் (கீர்த்திஸ்ரீமேகன்) எனும் சிறிய தந்தையிடம் சென்றான்.

- பராக்கிரமபாகு இளவரசன் கீர்த்தி ஸ்ரீ மேகனின் உதவியுடன் தக்கிண தேச இளவரசுப் பதவியைப் பெறுதல்.

- இளவரசன் ஸ்ரீ வல்லப முழு றுஹுணைக்கும் ஆட்சியாளனாதல்.

- கேகாலை மாவட்டத்தில் பெலிகல் ஹத்தாகொட எனும் இடத்தை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செலுத்திய கீர்த்தி ஸ்ரீ மேகனுடன் வாழ்ந்த பாரக்கிரமபாகு குமரன், அங்கு மொழி, இலக்கியம், சமயம், அரச நிர்வாகம், விளையாட்டு, வாட்போர், விற்போர் என்பவற்றைக் கற்றான்.

- கிர்த்தி ஸ்ரீ மேகனின் மரணத்தின் பின் பராக்கிரமபாகு தக்கிண தேசத்தின் இளவரசனாகப் பொறுப்பேற்றான்.

- தக்கிண தேசத்தை அபிவிருத்தி செய்தமை. தெதுரு ஓயாவை அண்டிய நீர்பாசன வேலைகள் நிறுவியமை.

- இராசரட்டையின் கஜபாகு மன்னனுக்கு எதிராக இடைக்கிடையே படையெடுப்புகளை அடிக்கடி மேற்கொண்டு அவ்விராச்சியத்தைக் கைப்பற்ற முயன்றமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இராசரட்டையின் இரண்டாம் கஜபாகு மன்னனுடன் (1132 - 1153) செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக (சங்கமு விஹாரைக் கல்வெட்டு) பொலன்னறுவையின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டமை.

- 1153 இல் பொலநறுவைக்கு அரசனாதல்.

- றுஹுணையின் ஆட்சியாளனான மானாபரன (பராக்கிரமபாகுவின் சகோதர உறவினன்) குமாரனினதும் அவரது தாயாரான சுகலாதேவியினதும் எதிர்ப்பு ஏற்பட்டது.

- அவ்வெதிர்ப்பை வெற்றி கொண்டு முழுநாட்டையும் ஒன்றுபடுத்தியமை.

- **வெளிநாட்டு உறவுகள்**

- வெளிநாட்டு வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- பர்மாவிலிருந்து இலங்கை வர்த்தகத்திற்கு இடைஞ்சல் ஏற்படுதல்.

- 1164 -1965 காலத்தில் பர்மா மீது படையெடுத்தல். அதற்கான காரணங்களைக் கூறுதல்.

- நகரகிரி கீர்த்தி எனும் தளபதி அதனை வெற்றிகொண்டமையால் அவருக்கு கிராமங்களை வழங்கியதாக கேகாலை ‘தெவனகல’ கல்வெட்டிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

- 1169 இல் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான்.

- லங்காபுர, ஜகத் விஜய எனும் தளபதிகள் இருவரும் இப்படையெடுப்பை மேற் கொண்டமை அதில் வெற்றி தோல்விகள் உறுதியாகக் கூறப்படவில்லை.

- **பொருளாதாரச் செயற்பாடுகள்**

- தக்கிண தேச அரசனாக இருந்த போது மேற்கொண்ட நீர்ப்பாசன நடவடிக்கைகள்.

- தெதுறு ஓயாவில் மூன்று இடங்களில் அணைகளைக் கட்டி நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டான்.

  1. கொட்டபத்த அணை : நதியின் கீழ்பகுதி இன்னும் கண்டறியப்படவில்லை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

2. சூகர திஜ்ஜர அணை : மாகல்ல வாவிக்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக.

3. தோரதத்திக அணை : இன்றைய தெமோதரையில் தலகல்ல வாவிக்கு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக.

- பந்தா வாவியை விஸ்தரித்து ‘பேன சமுத்திரம் ’ எனப் பெயரிடல்.

- களுத்துறையில் பஸ்துன் கோறளை சதுப்பு நிலத்தை அபிவிருத்தியடையச் செய்தல். ( நீரை வடிந்தோடச் செய்து வயல்களில் விளைச்சலை மேற்கொள்ளல்.)

- தக்கிண தேசத்தில் 53 குளங்களைப் புனரமைத்தல்.

- “விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரைத்தானும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்கவிடமாட்டேன்” எனும் சங்கற்பத்துடன் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

- இராசரட்டை மன்னனான பின்னர் மேற்கொண்ட நீர்ப்பாசன நடவடிக்கைகள் :

- பராக்கிரம சமுத்திரத்தை கட்டுதல். (தோப, தும்புட்டு, எரமுது எனும் மூன்று குளங்களையும் ஒன்றிணைப்பதன் மூலம்)

- அம்பன் கங்கையில் அங்கமடில்ல கால்வாயில் இருந்து அதற்கு நீரைப் பெற்றுக் கொடுத்தல்.


- இராசரட்டை குளங்களையும் அணைக்கட்டுகளையும் புனரமைத்தல்.

- றுஹுணையில் குளங்களை அமைத்தல். (வீரவில, ரிதியகம, அத்திமலே வாவிகள்)

- **சமய, கலாசார நடவடிக்கைகள்**
- மிகவும் பலவீனமுற்றிருந்த பௌத்த குருமாரது சங்கத்தை ஒற்றுமைப்படுத்துவதற்காகப் பௌத்த சாசனத்தைத் திருத்தி அமைத்தல்.

- “பொலன்னறுவை கதிகாவத” எனும் பௌத்த குருமாருக்கான ஒழுக்கக் கோவை ஒன்றை உருவாக்குதல்.

- பொலநறுவையில் சமயக் கட்டடங்களைக் கட்டுதல். உதாரணமாக : ஆலாஹன பிரிவெணா, ரூபவதி தாது கோபம், லங்காதிலக சிலை மனை, கல் விஹாரை)



லங்காதிலக ரங்கொத் விகார அரச மாளிகை

பட உரு 7.4.1

- ஆயிரம் அறைகளைக் கொண்ட விஸ்தாரமான அரச மாளிகை ஒன்றை நிர்மாணித்தல்.

**நிஸ்ஸங்க மல்ல மன்னன். (1187 - 1196)**

- இரண்டாம் விஜயபாகுவின் பின்னர் பொலநறுவையில் ஆட்சிக்கு வந்தான்.

- கலிங்க வம்சத்து அரசனானபடியால் அரசுரிமை கலிங்கர்களின் கைகளுக்குச் சென்றமை.

- தீவின் வெவ்வேறு இடங்களில் கல்வெட்டுக்களைப் பொறித்ததன் மூலம் முழு நாட்டையும் தான் ஆண்டதாகக் காட்டிக் கொள்ள முயற்சித்தான். (ருஹுுனவின் மாதுறுப்பு, பொலன்னறுவை - கல்பொத்த, தம்புள்ள கல்வெட்டுக்கள்)

- தேசத்தை ஒன்றுபடுத்தி ஆண்ட மன்னராவார்.


- **பொருளாதார நடவடிக்கைகள்**
- நிஸ்ஸங்க சமுத்திரம் எனும் பெயரில் குளம் ஒன்றை அமைத்ததாகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பராக்கிரமபாகுவுக்கு அண்மையிலுள்ள அது பந்தா குளம் என கருதப்படுகிறது.

- **சமய, கலாசால நடவடிக்கைகள்**
- மூன்று மதப்பிரிவுகளையும் (நிக்காய) ஒற்றுமைப்படுத்தியதாகக் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டப்படுகிறது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- தம்புள்ள விகாரை எழுபத்து மூன்று புத்தர் சிலைகளை தங்கமுலாம் பூச்சிட்டு "தங்க மலைக் குகை" எனப் பெயரிடல்.
- பொலநறுவையில் கட்டடங்கள் கட்டுதல்.
  உதாரணம் :- ரன்கொத் விஹாரை, நிஸ்ஸங்க லதா மண்டபம், ஹெடதாகய, சத்மஹல் பிரஸாதய.



நிஸ்ஸங்க லதா மண்டபம் -
11 ஆம், 12 ஆம் நூர்ண்றாண்டு நிசங்கமல்ல மன்னனால் கட்டப்பட்டது.



ஆயிரம்கால் மண்டபம் -
11 ஆம், 12 ஆம் நூற்றாண்டில் பராக்கிமபாகு மன்னால் கட்டப்பட்டது.

பட உரு 7.4.2

- **லீலாவதி அரசி**
- பாண்டிய வம்ஸத்து ஜகதி பால என்பவரின் மகளாவாள்.
- மகாபாரக்கிரமபாகுவின் மனைவி.
- பொலன்னறுவை இராச்சியத்திற்கு மூன்று முறை அரசியானாள்.
  முதல் முறை - 1197 - 1200
  இரண்டாம் முறை - 1209 - 1210
  மூன்றாம் முறை - 1211 - 1212
- சஸதாவத, முவதேவ்தாவத எனும் நூல்களை ஆக்குவதற்கு உதவி புரிந்தவள்.
- தனது பெயரால் நாணயம் வெளியிட்டாள்.
- கல்வெட்டுக்களை (புளியங்குள கல்வெட்டு) விட்டுச் சென்றுள்ளாள்.

இவரல்லாமல் இன்னும் பெண்கள் சிலர் இக்காலத்தில் அரசியல் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டுள்ளனர்.

- **மித்ரா இளவரசி**
- முதலாம் விஜயபாகு மன்னனின் சகோதரி ஆவார்.
- பாண்டிய இளவரசனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டவள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- முதலாம் விஜயபாகுவின் பின் அவனது மகனான விக்கிரமபாகு குமாரனது அரச உரிமையைப் பறித்து, பௌத்த குருமாரது உதவியுடன் தனது புதல்வனான மானாபரன, கித்சிரி மேவன், ஸ்ரீ வல்லப என்போரை அரசர்களாக்குவதற்கு திட்டமிட்டாள்.

- **சுகலா அரசி**
- றுஹுணுவின் அரசனான ஸ்ரீ வல்லபனின் மனைவி.

- ஸ்ரீ வல்லபனின் மரணத்தின் பின்னர் தனது மகன் இரண்டாம் மானாபரனின் ஆட்சிக்கு உதவி புரிந்தான்.

- தந்த தாது, பிட்ச்சா பாத்திரம் என்பவற்றைத் தனது பொறுப்பில் வைத்துக்கொண்டு தனது மகனுக்கு பொலன்னறுவையின் இளவரசுப் பட்டத்தைப் பெறுவதற்குப் போராடினாள்.

- முதலாம் பராக்கிரமபாகு அரசனால் றுஹுணை இராச்சியம் ஆக்கிரமிக்கப்பட்டு, சுகலா அரசியைக் கைது செய்து, அவர்களிடமிருந்த தந்த தாதுவையும், பிட்ச்சாபாத்திரத்தையும் பெற்றுக் கொண்டு தனது அரசின் உரிமையை நிலைநாட்டிக் கொண்டான்.

- **கலியாணவதி அரசி**
- கலிங்க வம்ஸத்தைச் சேர்ந்தவள்.
- நிஸ்ஸங்க மல்ல மன்னனின் மனைவியாவாள்.
- அயஸ்மந்த எனும் தளபதியால் அவள் அரசியாக்கப்பட்டாள்.
- ஆறு ஆண்டுகளாக நாட்டை ஆண்டாள்.

## 7.4.2 மாகனின் படையெடுப்பு

- **மாகனின் படையெடுப்பு**
- 1215 இல் கலிங்க மாகன் இலங்கையை ஆக்கிரமித்தல்.

- 24,000 சேர நாட்டு வீரர்களுடன் வந்து பராக்கிரம பாண்டியன் என்ற பொலன்னறுவை அரசனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டான்.

- மஹாவம்ஸத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பெருநாசம் விளைவித்த செயலாக அது கருதப்படுகிறது.

- இப்படையெடுப்பின் பின் இலங்கையின் தலைநகரம் ஈரவலயத்தை நோக்கி இடத்திற்கிடம் மாறிக் கொண்டிருந்தது.

- **மாகனின் ஆட்சிப் பண்புகள்**
- திட்டமிடப்பட்ட படையெடுப்பாகும்.

- நாட்டின் அரசியல், பொருளாதார அமைப்புகள் பாரிய மாற்றங்களுக்கு உள்ளானது.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- பௌத்தத்திற்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை.
    - பௌத்த வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டமை.
    - பௌத்த குருமார்கள் வதைக்கப்பட்டமை.
    - பௌத்த நூல்கள் அழிக்கப்பட்டமை.

- உயர்குடிகள் துன்புறுத்தப்பட்டமை.
    - பிரபுக்களின் செல்வங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் வறியவராக்கப்பட்டமை.

- சாதாரண மக்கள் க்'டத்திற்குள்ளக்கப்பட்டமை.
    - உடல்ரீதியாக இம்சைப்படுத்தப்பட்டமை.
    - பிள்ளைகள் கொல்லப்பட்டமை
    - சாதி முறைமை சிதைக்கப்பட்டமை.

- இராணுவ ஆட்சிமுறை இடம்பெறல்.
    - உள்நாட்டிலும் கரையோரத்திலும் கோட்டைகளைக் கட்டி அதிகாரம் புரிந்தமை. உதாரணமாக : பொலன்னறுவை, கொடசர, கவுடுல்ல, பதவியா, கந்தளாய், மன்னார், ஊர்காவற்றுறை.

### 7.4.3 பொலன்னறுவையின் வீழ்ச்சி

- வீழ்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்.
    - பாண்டிய, கலிங்க வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி.
    - ஆற்றல் வாய்ந்த மன்னர்கள் தோன்றாமை.
    - பலம் வாய்ந்த தளபதிகள் இல்லாமை.
    - கலிங்க மாகனின் படையெடுப்பால் ஏற்பட்ட அழிவு.
    - இராசரட்டையின் நீர்ப்பாசனம் அழிவுற்றமை.
    - தொற்று நோய்கள் பரவியமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி மட்டம்** :- முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு எனும் மன்னர்களின் செயற்பாடுகளை விவரிப்பார்.

**செயற்பாடு** :- "முதலாம் விஜயபாகு மன்னன்" பற்றிக் கற்போம்.

**காலம்** :- 80 நிமிடங்கள்.

**தர உள்ளீடுகள்** :-
- இணைப்பு இல. 1 - பாடப்பரப்பு. (பாடநூல்)
- இணைப்பு இல. 2 - செயற்பாட்டுப் பத்திரம்
- இணைப்பு இல. 3 - இலங்கைப் புறவுருவப் படம்.
- எழுதுதாள்.
- பாடநூல்

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை

**படி 7.4.1.**

- பின்னிணைப்பு இல. 1 - பாடப்பரப்பிலுள்ள ஒரு பகுதியைப் பெரிய தாளில் எழுதி மாணவர்களுக்கு அதனை வாசிப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவும்.

கீழ்வரும் வினாக்களை மாணவரிடம் வினவுக.

1. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் மன்னன் யார்?
2. அம்மன்னனுக்கு றுஹுணையின் ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியவர் யார்?

பெற்றுக் கொள்ளப்பட்ட விடையிலிருந்து முதலாம் விஜயபாகு மன்னனை அறிமுகப்படுத்துக.

கீழ்வரும் கருத்துக்கள் வெளிப்படும் வகையில் சிறுஉரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- அநுராதபுர இராச்சியம் 1017 இல் சோழரின் ஆக்கிரமிப்புக்குட்பட்டது.
- தலைநகரத்தை பொலநறுவைக்குக் கொண்டு சென்று சோழர்கள் ஆண்டமை.
- புதல்னாவின் உதவியுடன் முதலாம் விஜயபாகு றுஹுணையின் அரசனாகி பின்னர் நாட்டை அந்நியரிடமிருந்து மீட்டு நாட்டை ஒன்று படுத்தியமை.

(10 நிமிடங்கள்)

**படி 7.4.2**

- வகுப்பில் மாணவர்களை வசதிப்படி குழுக்களாகுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பின்னிணைப்பு - 2 - செயற்பாட்டுப் பத்திரத்தைக் கொடுங்கள்.
- செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு மாணவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 7.4.3**

- குழுச் செயற்பாட்டை வகுப்பில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழுவினர் முன் வைக்கும் தகவல்கள் தொடர்பாக ஏனைய குழுவினருக்குக் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முன்வைக்கப்பட்ட விடயங்களுடன் கீழ்வரும் கருத்துக்கள் துலங்குமாறு மீளாய்வை நடாத்தவும்.

| |
|---|
| • கீர்த்தி இளவரசன் புதல்னாவின் உதவியுடன் றுஹுணையின் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொண்டமை. |
| • முறையான யுத்த செயற்றிட்டத்துடன் சண்டையிட்டு, சோழர்களிடமிருந்து நாட்டை மீட்டுக் கொண்டமை. |
| • நாட்டை ஐக்கியப்படுத்தல் அவனால் ஆற்றப்பட்ட முக்கியத்துவமான அரசியல் நடவடிக்கையாக அமைந்தமை. |
| • புத்த சாஸனத்தின் வளர்ச்சிக்காக அவன் அரும் பணிகள் ஆற்றியமை. |
| • சிதைவுற்ற நீர்ப்பாசனத் திட்டங்களைத் புனரமைத்ததன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு வழி வகுத்தமை. |

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முதலாம் விஜயபாகு மன்னர் ஆற்றிய சேவைக்கு மதிப்பளிப்பதுடன் அது தொடர்பான தகவல்களையும் முன்வைப்பார்.

- முதலாம் விஜயபாகுவின் படைகள் இராசரட்டைவரை பயணஞ் செய்த பாதைகளை இலங்கைப் படமொன்றில் குறிப்பார்.

- முதலாம் விஜயபாகு மன்னனின் அரசியல், பொருளாதார, கலாசார நடவடிக்கைகளை விவரிப்பார்.

- குழு உணர்வுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

- குழுச் செயற்பாட்டினூடாக வகுப்பு மாணவர்களுக்கு அறிவூட்டுவார்.

**இணைப்பு :- 7.4.1.1**

"நான் றுகுணை தேசத்தின் மூலசால கிராமத்தின் இளவரசன். முகலனினதும் லோகிதா குமாரியினதும் மகனாவேன். றுகுணுயின் நீதித்துறை சார்ந்த தலைவரான "புதல்னா" வின் பாதுகாப்பில் சிறுகாலந்தொட்டே வளர்ந்து ஆளாகி அவரின் துணையுடன் றுகுணையின் படைகளைத் திரட்டி யுத்தத்தை நடாத்தி சோழர்களிடமிருந்து இராசரட்டையை மீட்டு பொலன்னறுவையைத் தலைநகராக்கி அரசனானேன் "

**பின்னிணைப்பு :- 2 செயற்பாடடுப் பத்திரம் :- 1**

பின்வரும் தலைப்புகளில் முதலாம் விஜயபாகு மன்னின் அரசியற் பணிகள் பற்றி சிறிய அறிக்கையை தயாரிப்பதும் அதனை வகுப்பில் முன்வைப்பதும் உங்களுக்கான ஒப்படையாகும்.


- முதலாம் விஜயபாகுவின் பிள்ளைப் பருவம்.
- றுஹுணையின் அரசனாதல்.
- இலங்கையை ஒன்றுபடுத்தல்.

**செயற்பாட்டுப் பத்திரம் :- 2**

- முதலாம் விஜயபாகு மன்னின் சமய சேவைகளை விவரித்து சிறிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க.

- முதலாம் விஜயபாகுவின் படைகள் இராசரட்டையை வெற்றிகொள்வதற்குச் சென்ற பாதையை இணைப்பு 7.4.1.3 இலங்கை வரைபடமொன்றில் குறித்துக் காட்டுங்கள்.

- முதலாம் விஜயபாகு அரசனின் விவசாயச் சேவைகளைப் பற்றி சிறிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்க.



**இலங்கை தேசப்படம்**

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி மட்டம்** :- முதலாம் விஜயபாகுவும் முதலாம் பராக்கிரமபாகுவும் ஆற்றிய சேவைகளை விபரிப்பார்.

**செயற்பாடு** :- "மகா பராக்கிரமபாகு மன்னரின் சேவைகளை மதிப்போம்".

**நேரம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :-
- பின்னிணைப்பு இல : 1. பராக்கிரமபாகு மன்னரின் உருவம் எனக் கருதப்படும் படம்.
- பின்னிணைப்பு இல : 2. செயற்பாட்டுப் பத்திரம்.
- பாடநூல்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

### படி :- 7.4.2.1

மகாபராக்கிரமபாகுவின் உருவத்தை கொண்ட படத்தை வகுப்பறையில் காண்பித்து அது தொடர்பாக பின்வரும் வினாக்களை மாணவர்களிடம் வினவுங்கள்.

- இப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ள மன்னர் யார்?
- அவர் ஆட்சி செய்த இராச்சியத்தின் பெயர் என்ன?

இதற்கான பதில்களைப் பெற்று, மன்னரை அறிமுகப்படுத்தி கீழ்வரும் விடயங்களை துலங்கும் வண்ணம் சிறியதொரு கலந்துரையாடல் நடத்துங்கள்.

- மானாபரண அரசனும் ரத்னாவலி அரசியும் மகாபராக்கிரமபாகுவின் பெற்றோர்களாவர்.
- சிறிய தந்தையான கீர்த்தி ஸ்ரீ மேகவின் மறைவின் பின் பராக்கிரமபாகு தக்கிண தேச அரசனானான்.
- பிறகு இரண்டாம் கஜபாகு மன்னனுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தமொன்றின்படி அவரின் மறைவின் பின் இராசரட்டையின் ஆட்சியைப் பெற்றுக் கொண்டமை.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**படி - 7.4.2.2**

- வகுப்பு மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்குங்கள்
- ஒவ்வொரு குழுவுக்கும் இணைப்பு 7.4.2.2 செயற்பாட்டுப் பத்திரம் வீதம் பகிர்ந்தளிக்கவும்.
- செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு உதவி செய்யுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி - 7.4.2.3**

- தயாரிக்கப்பட்ட அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் முன்வைக்கும் தகவல்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்க மற்றைய குழுக்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தெரியப்படுத்தும் முக்கியமான தகவல்களை குறித்துக் கொள்ளச் செய்யுங்கள்.
- கீழ்வரும் கருத்துக்கள் துலங்கும்படி மீளாய்வை நடத்துங்கள்.

- கீர்த்தி ஸ்ரீ மேகவின் மறைவின் பின்னர், பராக்கிரமபாகு தக்கிண தேச மன்னரானமை.
- தக்கிண தேச அரசனான பின்னர் தெதுறு ஓயா பிரதேசத்தை அண்டியதாக அபிவிருத்தி செய்தமை.
- பந்தா வாவியை விசாலப்படுத்தி பெரியதான நீர் நிலையாக ஆக்கியமை.
- களுத்துறைப் பிரதேச பஸ்துன் கோறளை சதுப்பு நிலத்தை மீட்டு, அபிவிருத்தி செய்தமை.
- பண்டுவஸ் நுவரையைத் தலைநகராக்கியமை.
- இரண்டாம் கஜபாகுவின் மறைவின் பின் இராசரட்டை அரசைக் கையேற்றமை.
- சுகலா தேவியைத் தோற்கடித்து றுஹுணையைக் கைப்பற்றி நாட்டை ஒற்றுமைப்படுத்தியமை.

- “விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரைத் தானும்மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்.” என உறுதிபூண்டு விவசாயத்தை விருத்தி செய்தமை.

- புத்த சாசனத்தில் திருத்தங்கள் ஏற்படுத்த செயற்பட்டமை.

- பொலன்னறுவை கதிகாவத்த என்ற பெயரினால் பிக்குகளுக்கான ஒழுக்கக்கோவை ஒன்றைக் தயாரித்தல்.

- பொலநறுவையில் சமயக் கட்டடங்களைக் கட்டியெழுப்பியமை.

- ராமஞ்ஞ தேசத்திற்கும் (பர்மா) பாண்டிய நாட்டிற்கும் படைகளை அனுப்பியமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- நாட்டை அபிவிருத்தியடைச் செய்ய முதலாம் பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மதிப்பளித்து தகவல்களை ஒன்று திரட்டுவார்.


- முதலாம் பராக்கிரமபாகு மன்னன் புனரமைத்த, உருவாக்கிய குளங்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பார்.

- இவரது அரசியல், பொருளாதார, சமய சேவைகளை விவரிப்பார்.

- கூட்டு உணர்வுடன் செயற்படுவர்.

- தலைமைத்துவப் பண்புகளை வெளிக்காட்டுவார்.

**இணைப்பு : 7.4.2.1**



பராக்கிரமபாகு மன்னன்

**இணைப்பு : 7.4.2.2**

**செயற்பாட்டுப் பத்திரம் - I**

- முதலாம் பராக்கிரமபாகு மன்னனைப் பற்றி கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் விடயங்களை சேகரிக்கவும்.
- இரண்டாம் கஜபாகு மன்னனுக்கு எதிராகப் போர்புரிந்தவிதம்.
- ஒப்பந்தத்தின்படி இராசரட்டை ஆட்சியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- சுகலா அரசியைத் தோற்கடித்தல்.
- நாட்டை ஒன்றுபடுத்தல்.

இவ்விடயங்களை அறியப்படுத்துங்கள்.

- நீங்கள் தயாரித்த அறிக்கையை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் : 2**

- "விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரைத் தானும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்கவிடமாட்டேன் " எனும் திடசங்கற்பத்துடன், நீர்பாசனத்தைத் துறைக்கு இராசரட்டை மன்னரானதற்கு முன்னும் பின்னும் அவர் ஆற்றிய சேவைகளை விபரித்து அறிக்கை ஒன்றைத் தயாரியுங்கள்.
- அதனை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் : 3**

- மகா பராக்கிரமபாகு மன்னரின் சமயப் பணிகள் தொடர்பான சிறு அறிக்கை ஒன்றை சமர்ப்பியுங்கள்.
- அதனை வகுப்பில் சமர்ப்பியுங்கள்.

**செயற்பாட்டுப் பத்திரம் : 4**

- மகா பராக்கிரமபாகு மன்னரின் வெளிநாட்டுத் தொடர்புகள் சம்பந்தமாக சிறு அறிக்கை ஒன்றைத் தயாரியுங்கள்.
- அதனை வகுப்பில் சமர்பியுங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## செயற்பாடு 7.4.3

**தேர்ச்சி மட்டம்** :- பொலன்னறுவை இராச்சியத்திற்குத் தலைமை தாங்கிய பெண்களின் அரசியல் நடவடிக்கை தொடர்பான விடயங்களை விசாரிப்பார்.

**செயற்பாடு** :- "பொலன்னறுக்காலப் பெண்களின் தலைமைத்துவம்" பற்றிக் கற்போம்.

**காலம்** :- 80 நிமிடங்கள்

**தர உள்ளீடுகள்** :- **பின்னிணைப்பு** -
- செயற்பாட்டுப் பத்திரம்.
- எழுது தாள்கள்.
- பாடப் புத்தகம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடு

### படி - 7.4.3.1

- அண்மைக் காலத்தில் இலங்கை அரசியல் புலத்தில் தலைமைப்பதவி வகித்த பெண்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

- அவ்வாறான பெண்களின் பெயர்களைப் பட்டியல்படுத்துக.

அவ்வினாக்களுக்கான விடைகளைப் பெற்ற பின்னர் பொலன்னறுவை இராச்சிய காலத்தில் இலங்கை அரசியலில் பங்குபற்றிய பெண்கள் தொடர்பான கீழ்வரும் கருத்துக்கள் துலங்கும் வண்ணம் கலந்தரையாடல் ஒன்றை மேற்கொள்க.

- முதலாம் விஜயபாகு மன்னனின் பின்னர் பொலன்னறுவை இராச்சிய இளவரசுப் பதவியைத் தனது மகனுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு மித்ரா இளவரசி நடவடிக்கையை மேற்கொண்டமை.

- முதலாம் பராக்கிரமபாகு மன்னன் இராசரட்டையின் ஆட்சியியைப் பெற்றுக் கொள்ளும் போது சுகலா அரசி றுஹுணை இராச்சியத்தை ஆண்டு கொண்டிருந்தமை.

- லீலாவதி, கல்யாணவதி அரசிகளும் பொலன்னறுவையை ஆண்டமை.

(10 நிமிடங்கள்)

**படி 7.4.3.2**

- வகுப்பைப் பொருத்தப்பாடான முறையில் நான்கு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு செயற்பாட்டு அறிக்கையை வழங்குங்கள்.
- விடயங்களை அறிக்கைப்படுத்தப் போதுமான நேரத்தை ஒதுக்கிக் கொடுங்கள்.

(30 நிமிடங்கள்)

**படி 7.4.3.3**

- ஒவ்வொரு குழுவிற்கும் தனது அறிக்கையைச் சமர்பிக்கப் போதிய கால அவகாசம் வழங்குங்கள்.
- ஒரு குழுவினர் சமர்ப்பிக்கும் அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்க ஏனைய குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முன்வைக்கப்பட்ட கருத்துக்களுடன் கீழ்வரும் விடயங்களை துலங்கும் வண்ணம் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- முதலாம் விஜயபாகுவின் பின்னர் அவரது சகோதரனான ஜயபாகு பொலநறுவைக்கு அரசனானமை.
- இளவரசன் பதவி மகா விஜயபாகுவின் மகன் விக்கிரமபாகுவுக்கு உரிமையாக வேண்டியதாக இருந்தாலும் மித்ரா இளவரசி அதனை தனது மகன் மானாபரணனுக்குப் பெற்றுக் கொடுக்க முனைந்தமை.
- விக்கிரமபாகு இதன் பின்னர் இராசரட்டையின் ஆட்சியைப் பெற்றுக் கொண்டமை.
- இளவரசி மித்ரா தமது பிள்ளைகளுடன் ருஹுணைக்கு வந்து அப்பிரதேசத்தின் நிர்வாகத்தை தனது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுத்தமை.
- சுகலா இளவரசி ஸ்ரீ வல்லபனுடைய மனைவி ஆவார்.
- முதலாம் பராக்கிரமபாகு இராசரட்டையை ஆண்டபோது அரசி சுகலா ருஹுணு தேசத்தை ஆண்டமை.
- ருஹுணு பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கும் அவர்களிடமிருந்த புனித தாதுவைப் பெற்றுக் கொள்வதற்காகவும் முதலாம் பராக்கிரமபாகு சுகலா தேவியுடன் யுத்தம் புரிந்தமை.

- லீலாவதி தேவி பராக்கிரமபாகுவின் மனைவியாவாள்.
- பராக்கிரமபாகுவின் மரணத்தின் பின்னர் அவள் பொலன்னறுவையை ஆட்சி செய்தமை.
- கல்யாணவதி அரசி நிஸ்ஸங்கமல்லனின் மனைவியாவாள்.
- இவள் பொலன்னறுவையை ஆட்சி செய்தமை.

(40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு மதிப்பீட்டு நியதிகள்.

- பொலன்னறுவை இராசதானிக் காலத்தில் அரசியலில் சம்பந்தப்பட்ட பெண்களைப் பற்றிய விவரங்களை முன் வைப்பார்.
- பொலன்னறுவைக் காலத்தில் சமுதாயத்தில் பெண்களுக்கு உயர் அந்தஸ்து நிலவியது என்பதற்கான ஆதாரங்களை முன்வைப்பார்.
- விடயங்களை முறையாக வகுப்பில் முன்வைப்பார்.
- முயற்சியுடன் தகவல்களைச் சேகரிப்பார்.
- குழுவுக்கு வழங்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் பங்களிப்பார்.

**இணைப்பு : 7.4.3.1**

**செயற்பாட்டுப் பத்திரம் 1**

மித்த இளவரசியைப் பற்றி பின்வரும் தலைப்புக்களில் தகவல்களை சேகரியுங்கள்

- முதலாம் விஜயபாகு மன்னனுடனுள்ள உறவு.
- அரசியல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட விதம்.
- மானாபரனனுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்க மேற்கொண்ட முயற்சிகள்.
- ருஹுணு பிரதேசத்திற்கு வந்து அதன் ஆட்சி அதிகாரத்தை பிள்ளைகளிடையே பகிர்ந்து கொடுத்த விதம்.
- வகுப்பில் சமர்பிப்பதற்குப் பொருத்தமான முறையில் அறிக்கைப்படுத்தல்.

## செயற்பாட்டுப் பத்திரம் 2

சுகலாதேவி சம்பந்தப்பட்ட தகவல்களைக் கீழ்வரும் தலைப்புகளில் சேகரியுங்கள்.

- அரச குடும்பத்துடன் உள்ள தொடர்பு.
- றுஹுணையின் ஆட்சியைப் பெற்றுக் கொண்ட விதம்.
- பராக்கிரமபாகு மன்னன் சுகலாதேவியுடன் சண்டையிடக் காரணம்.

நீங்கள் தயாரித்த விடயங்களை வகுப்பில் சமர்ப்பிப்பதற்கு ஏற்றவாறு அறிக்கையைத் தயார் செய்யுங்கள்.

## செயற்பாட்டுப் பத்திரம் 3

லீலாவதி அரசி பற்றி பின்வருந் தலைப்புகளிலே தகவல்களைச் சேகரியுங்கள்.

- பொலநறுவை அரச குடும்பத்துடனான உறவு.
- பதவிக்கு வருவதற்குப் பின்னணியாக அமைந்த காரணிகள்.
- அவருடைய ஆட்சியில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள்.

நீங்கள் தயாரித்த விடயங்களை வகுப்பில் சமர்ப்பிக்கும் வண்ணம் அறிக்கைப்படுத்துங்கள்.

## செயற்பாட்டுப் பத்திரம் 4

கல்யாணவதி அரசிபற்றி கீழ்வரும் தலைப்புகளில் விடயங்களை சேகரியுங்கள்.

- அரச குடும்பத்துடனான உறவு.
- அதிகாரத்துக்கு வருவதற்கான பின்னணி.
- அவரது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள்.

சேகரிக்கப்பட்ட விடயங்களை வகுப்பறையில் சமர்பிப்பதற்குப் பொருத்தப்பாடன அறிக்கை ஒன்றைத் தயாரித்தல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# மத்தியகால ஐரோப்பா.

**அலகு : 7.5.** **பாடவேளைகள்: 06**

## அறிமுகம்

ஐரோப்பிய வரலாற்றில் மத்திய காலம் என்பது 5 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரையான காலமாகும். 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைப் புராதன யுகம் என்றும் 15 ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலத்தை நவீன யுகம் என்றும் குறிப்பிடுவர்.

ரோமப் பேரரசில் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ சமயம், அப்பேரரசின் இறுதிக் காலகட்டத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தது. ரோமப் பேரரசரின் சமயமாக கிறிஸ்தவம் அந்தஸ்துப் பெற்ற பின்னர், பாப்பரசரைத் தலைமையாக் கொண்டு கிறிஸ்தவ சமயம் கட்டியெழுப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஐரோப்பா எங்கும் கிறிஸ்தவ சமயம் வேகமாகப் பரவியது. இவற்றைப் பற்றிக் கற்றுக் கொள்வது, நவீன யுகத்தில் கிறிஸ்தவ சமயத்தினதும் கிறிஸ்தவ நிறுவனத்தினதும் இயல்பை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

மத்திய கால ஐரோப்பாவின் வெவ்வேறு பிரதேசங்களில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார விடயங்கள் அனைத்தையும் பொதுவாக மானிய முறை எனக் குறிப்பிடப்படுகின்றது. நவீன கால விடயங்களிலிருந்து அவை முற்றிலும் மாறுப்பட்டவையாகும். ஆகையால் நவீன விடயங்களைப் பற்றிக் கற்பதை பொருள் பொதிந்ததாக்குவதற்கு மத்திய கால ஐரோப்பிய மானிய முறைமைபற்றி அறிந்து கொள்வது பயன்மிக்கதாகும்.

மத்திய கால ஐரோப்பாவில் இடம் பெற்ற முக்கியத்துவமான வரலாற்று விடயங்களுள் சிலுவை யுத்தங்கள் முக்கியத்துவமானவையாகும். கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கும் இஸ்லாமிய சமயத்தவர்களுக்கும் இடையே 11 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை இடம் பெற்ற சமயப் போர்களின் தொடர்ச்சியை சிலுவை யுத்தங்கள் எனக் குறிப்பிடுவர். அதன் உச்சக் கட்டம் 1453 ஆம் ஆண்டில் நிகழ்ந்த யுத்தமாகும். அதன் விளைவாக இதுவரை கிறிஸ்தவர்களின் முக்கிய நிலையமாக இருந்து வந்த கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்தைத் துருக்கியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கீழைத்தேய - மேலைத் தேய நாடுகளின் வர்த்தக மத்திய நிலையமாக இருந்த அந்நகரத்தைக் கிறிஸ்தவர்கள் இழந்தமை நீண்ட கால விளைவுகள் பலவற்றிற்குக் காரணமாயமைந்தது.

வர்த்தக நடவடிக்கைகள் விருத்தியடைதல், நாடுகாண் பயணங்களில் ஈடுபடுதல், ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படல் போன்ற முக்கியமான நிகழ்வுகள் பலவற்றிற்கு அடிப்படையாக அமைந்த சிலுவை யுத்தத்தைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வது, நவீன வரலாற்றைக் கற்பதற்கு ஆரம்பிக்கையில் மிகவும் பிரயோசனமானதாக அமையும்.

**தேர்ச்சி** :- மத்திய கால ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், சமூக, பொருளாதார வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துவார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**தேர்ச்சி மட்டம் :-**

- கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பமும் பரம்பலும் பற்றிய விடயங்களை விளக்குவார்.

- மானிய முறைக் காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பை விவரிப்பார்.

- சிலுவை யுத்தங்கள் ஏற்படுவதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் விளக்குவார்.

**பாட உள்ளடக்கம்.**

# 7.5 மத்திய கால ஐரோப்பா

## 7.5.1 கிறிஸ்தவ சமயத்தின் பரம்பல்.

### கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம்.

கிறிஸ்தவ சமய ஸ்தாபகரான இயேசுநாதர் ஜெரூஸலத்திற்கு அருகில் உள்ள பெத்தலஹேம் எனும் கிராமத்தில் பிறந்தார். யூத இனத்தவரான ஜோஸப் அவரது தந்தையாவார். கன்னி மரியாள் அவரது தாயாவார். மனித வர்க்கத்தைத் துன்பத்திலிருந்து காப்பதற்கு மீட்பாளர் ஒருவரின் வருகையை மக்கள் எதிர்பாத்திருந்த கால கட்டம் அதுவாகும். படிப்படியாக நடமாடும் மதப்போதகராக மாறிய இயேசுநாதர் உலகத்தைப் படைத்த எல்லாம் வல்ல இறைவனைப் பற்றி அறிவூட்டுவதற்கு ஆராம்பித்தார்.

- நியாயம், அன்பு, கருணை என்பன நிறைந்த கடவுளின் இராச்சியம் பற்றிப் போதித்த அவரைச் சுற்றி ஆதரவாளர்கள் குவிந்தனர்.

- அவர் பின்பற்றிய எளிமையான வாழ்க்கையால் கவரப்பட்டு ஏழைமக்கள் அவரைச் சார்ந்தனர்.

- நற்செயல்களால் பரிசுத்தமான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் எனப் போதித்தார்.

- சகோதரத்துவம், அன்பு, கருணை, ஆதரவு, தார்மீக வாழ்க்கை, நன்னடத்தை, பொதுநலம், மனிதாபிமானம் என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது இயேசுநாதரின் பிரதான போதனையாகும்.

- படிப்படியாக அவரது ஆதரவாளர்கள் அவரை ஆண்டவனால் அனுப்பட்ட மீட்பாளராக நாமம் சூட்டப்பட்டவர் எனும் பொருள்படும் "கிறிஸ்டோஸ்" எனும் வார்த்தையால் அழைத்தமை.

- கிறிஸ்துநாதரின் சமயத்திற்கு யூதர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமை.

- அவர் உரோமப் பேரரசுக்கு விரோதமாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கு முயற்சிப்பதாக கருதி, அப் பேரரசர் அவர் மீது நடவடிக்கை எடுத்தலும் பின்னர் சிறைப்படுத்தலும்.

- இராசதுரோகக் குற்றஞ் சாட்டி குற்றவாளியாகத் தீர்ப்பளித்து, இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டமை.

- அப்போஸ்தவர்கள் எனப்படும் பன்னிரு சீடர்கள் அச்சமயத்தைப் போதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- 313 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "மிலான் கட்டளைகள்" மூலம் கொன்ஸ்தாந்தைன் பேரரசரின் காலத்தில் கிறிஸ்தவம் ரோமப் பேரரசின் உத்தியோகபூர்வ சமயமாதல்.

- பாப்பரசர் பதவியும் கத்தோலிக்கத் திருச்சபையும் உருவாதல்.

- சமய போதனை புரிந்த அப்போஸ்தவர்களுள் பேதுறு அவர்களுக்கு முதலிடம் கிடைத்தலும் அவர் முதலாவது பாப்பரசராதலும்.

- பாப்பரசரின் தலைமையில் கத்தோலிக்கத் திருச்சபையை அமைத்துக் கொள்ளுதல்.

- பாப்பரசர் கத்தோலிக்க சமயத்தின் உயிர்ப்பான தலைவராதலாலும் கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரம் விருத்தியடைதலும்.

- ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்ததின் பின்னர் தோன்றிய ஐரோப்பிய இராச்சியங்களுள் கத்தோலிக்கச் திருச்சபையின் செயற்பாடுகளால் அச்சமயம் வேகமாக பரவுதல்.

## 7.5.2 மானிய முறையின் அறிமுகம்

5 ஆம் நூற்றாண்டிலிருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசாரத் துறைகளில் ஒத்த பண்புகள் நிறைந்து காணப்பட்டன. மானிய முறையே மத்திய கால ஐரோப்பாவில் எல்லா காலங்களிலும் காணப்பட்டது. மானிய முறை என்பது நிலத்தை அனுபவித்தலுக்காக சேவையை வழங்குதலை அடிப்படையாகக் கொண்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அமைப்பு முறை என்று விளக்கமளிக்கலாம்.

- **மானிய முறையின் ஆரம்பம்**

- 5 ஆம் நூற்றாண்டளவில் ஐரோப்பா மிலேச்சர்களின் தாக்குதலுக்கு உள்ளானது. இதனை எதிர்கொள்ளும் நிலையில் அன்றைய ரோமப் பேரரசு காணப்படவில்லை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இதற்கிடையில் சேனைத் தலைவர்களாக இருந்த பிரபுக்களின் அதிகாரம் மேலோங்கியமையால் மானிய முறை தோற்றம் பெற்றது.

- **மானிய முறையின் அடிப்படைப் பண்புகள்**
- **அரசியல் பண்புகள்**

- அரசன் சட்டப்படி நாட்டின் தலைவனாவான். என்றாலும் அவன் பலம் வாய்ந்த ஆட்சியாளனாக இருக்கவில்லை.

- நிர்வாகம் பரவலாக்கபட்டிருந்தமை.

- பிரபுக்களான பிரதேச ஆட்சியாளர்கள் அரசரைவிட சக்தி வாய்ந்தவர்களாய் இருந்தமை.

- வெவ்வேறு பிரதேசங்களில் தனித்துவமான சட்டங்கள் நிலவியமை.

- பிரபுக்களின் தலைமையின் கீழ் படைகள் ஓரமைப்பாகச் செயற்பட்டமை.

- **பொருளாதாரப் பண்புகள் :**

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சுயதேவைப்பூர்த்திப் பொருளாதார முறை.
    - கிராமியப் பொருளாதார முறை.
    - நிந்தகம் முறை.
    - நாட்டிலுள்ள சகல நிலங்களும் அரசனுக்குரியதாகும்.
    - அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விதமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலத்தை அனுபிவிக்கும் அதனுடன் இணைந்த சேவை முறை ஒன்று நிலவுதல்.

- பண்டமாற்று முறை பெருமளவுக்குக் காணப்பட்டமை.

- நகரங்கள் அரிதாக இருந்தமை.

- வர்த்தகமும் பணப் பரிமாற்றமும் சிற்றளவில் இடம் பெற்றமை.

நிலம் பிரிக்கப்பட்டிருந்தவிதம்

↓

அனைத்து நிலங்களும் அரசனுக்கே சொந்தம்.

↓

* பிரபுக்கள்
* பிரதேச ஆட்சியாளர்கள்.
* தளபதிகள்.

↓

பொது மக்கள்.

- **சமூகப் பண்புகள்**
- சமூக அந்தஸ்து பிறப்பை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
- அரசர், பிரபு, மத குரு, பொது மக்கள் எனப் பிரிந்து காணப்பட்டமை.
- பிரபுக்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த அதே வேளையில் பொது மக்கள் க"ட சீவியம் நடாத்தியமை.
- தனிநபர்கள் முக்கியத்துவம் பெறாமை.
- வெவ்வேறு கலைகளில் ஈடுபட்டோர் வகுப்புகளாக ஒன்று பட்டு இயங்கியமை.
- கிராமியப் பண்பு.
- ஒற்றுமையுடையவர்களாக இருந்தமை.

- **கலாசாரப் பண்புகள்**
- ஐக்கிய கிறிஸ்தவ சபை ஒன்று இயங்கியமை.
- பாப்பரசர் உள்ளிட்ட கத்தோலிக்கத் திருச் சபை பலமுற்றுக் காணப்பட்டமை.
- கல்வி நடவடிக்கைகள் மதகுருமார்களை முக்கியத்துவமாகக் கொண்ட கிறிஸ்தவ சபைகளால் மேற்கொள்ளப்பட்டமை.
- உலகியலில் நாட்டங் கொள்ளாமை.
- சமயக் கோட்பாட்டின்படி ஒழுக்கம், விழுமியம் என்பவற்றை மதித்தல்.

- **மானிய முறையின் வீழ்ச்சி**
- 12, 13 ஆம் நூண்றாண்டுகளில் பல்கலைக்கழகங்கள் தோற்றம் -பெற்றமை.
- சிலுவை யுத்தங்கள்.
- நிந்தகம் முறையின் வீழ்ச்சி
- வியாபார விருத்தியும் பணப்பரிமாற்றம் அதிகரித்தமையும்.
- நகரங்கள் தோன்றுதல்.
- தேசிய அரசுகளின் தோற்றம்.
- 13, 15 ஆம் நூற்றாண்டகளுக்கிடையில் ஐரோப்பாவில் மறுமலர்ச்சி -ஏற்பட்டமை.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 7.5.3. சிலுவை யுத்தம்.

### அறிமுகம்

ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் 11 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து 15 ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை, அவர்களுடைய பிரதான புனித பூமியான ஜெரூஸலத்தை முஸ்லிம்களின் ஆட்சியிலிருந்து மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட யுத்தமே சிலுவை யுத்தமாகும். இச்சிலுவை யுத்தங்கள் 1096 ஆம் ஆண்டில் தொடங்கி இரு பகுதியினரும் வெற்றி தோல்வி அடைந்த வண்ணம் இடம் பெற்று, கிறிஸ்தவ ஐரோப்பியரின் முக்கியமான தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள் 1453 இல் முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்டதுடன் முற்றுப் பெற்றது.

- **சிலுவை யுத்தங்களின் செல்வாக்கு**

- மானிய முறை வீழ்ச்சியடைந்தமை.

- கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகம் விருத்தியுற்றமை.

- சிலுவை யுத்தங்களில் ஈடுபட வந்த ஐரோப்பியர்களுக்கு கீழை நாட்டவர்களுடன் ஏற்பட்ட தொடர்புகளால் புதிய கருத்துக்கள் ஐரோப்பாவுக்குள் பிரவேசித்தமை. உதாரணமாக : சீனாவின் கடதாசி, வெடிமருந்து, திசையறிகருவி, இந்தியாவின் விஞ்ஞான அறிவு, அராபியரின் கணித முறை.

- கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதால் ஐரோப்பியர்களுக்கு கீழைத்தேயத்துக்கு வருவதற்குகான பாதை மூடப்பட்டதால் ஐரோப்பியர்களுக்கு அத்தியாவசியமான ஆசியப் பொருட்களைப் பெற்றுக் கொள்வது தடைப்பட்டுப் போனது.

- கீழைத் தேயத்திற்கு வருவதற்கான கடல்வழிகளைக் காண்பதில் ஈடுபட்டனர்.

- மறுமலர்ச்சிக்கு வழி பிறத்தல்.

- கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானதால் அங்கிருந்த புராதன கிரேக்க, ரோம நூல்களை எடுத்துக் கொண்டு அறிவாளிகள் ஐரோப்பாவுக்குத் தப்பி ஓடியதனால் அவற்றைப் படிக்கும் வாய்ப்பு ஐரோப்பியர்களுக்குக் கிட்டியது. அது ஐரோப்பாவில் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த அடிப்படைக் காரணியாய் அமைந்தது.

- ஐரோப்பிய கலாச்சாரமும் கிறிஸ்தவ சமயமும் உலகம் முழுவதும் பரவியமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## அலகு : 7.5

**தேர்ச்சி மட்டம்** :- கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பமும் பரம்பலும் தொடர்பான தகவல்களை விளக்குவார்.

**செயற்பாடு** :- கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம்.

**நேரம்** :- 40 நிமிடங்கள்.

**உள்ளீடுகள்** :-

- இணைப்பு 7.5.1.1 இயேசு நாதரின் படம்.
- இணைப்பு 7.5.1.2 செயற்பாட்டுப் பத்திரம்
- இணைப்பு 7.5.1.3 பாடப் புத்தகம்.

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை

**படி 7.5.1.** இயேசு நாதரின் படத்தைக் காண்பித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களை மாணவரிடம் வினவுங்கள்.

1. அப்படத்தில் இருப்பது யார்?
2. அவர் எமக்கு முக்கியத்துவமானவரானமைக்கு காரணம் என்ன?

- அவற்றிற்குப் பதிலைப் பெற்ற பின்னர் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் துலங்கும்படி மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுங்கள்.

- படத்தில் காண்பிக்கப்பட்டவர் கிறிஸ்தவ சமயத்தின் தலைவராவார்.
- ஜோஸப்பும் கன்னி மரியாளும் இயேசுநாதரின் தாய் - தந்தையர் ஆவார்.
- கி.மு. 4 ஆம் ஆண்டில் அவர் ஜெருசலத்தின் அருகே உள்ள பெத்தலஹேம் என்னும் கிராமத்தில் பிறந்தார்.
- அவர் ஒழுக்கம், மனிதாபிமானம் சம்பந்தமான கருத்துக்களைப் பிரசாரம் செய்தார்.
- யூதர்கள் அவர் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரைச் சிலுவையில் அறைந்தனர்.

(10 நிமிடங்கள்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## படி 7.5.1.2

இணைப்பு 3 இல் உள்ள வினாக்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

- அனைத்து மாணவர்களுக்கும் அவ்வினாக்களைத் தமது பயிற்சிப் புத்தகத்தில் எழுதும்படி கூறவும்.
- பின்னர் புத்தகத்தைப் படித்து அவ்வினாக்களுக்கு விடை எழுதச் செய்யுங்கள்.
- செயலை இலகுபடுத்துவதற்காக மாணவர்களுக்குத் தேவையான அறிவுரைகளை வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படி 7.5.1.3

எழுமாற்றாக அல்லது வகுப்பில் கூடிய தொகையினரின் விடைகளைக் கணிப்பீடு செய்யுங்கள்.

- அவர்களுடைய பலத்தையும் பலவீனத்தையும் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சிறந்த விடயங்களுக்கு மதிப்பளியுங்கள்.
- பாடத்தை மீளாய்வு செய்யுங்கள்.
- பாட மீளாய்வின் போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துங்கள்.

- உரோமில் ஒகஸ்ட்சீஸரின் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்து நாதர் பிறந்தார்.
- கொன்ஸ்டான்டைன் உரோபுரியின் முதலாவது கிறிஸ்தவப் பேரரசராவார்.
- உரோமப் பேரரசர்கள் சிலர் கிறிஸ்தவ சமயத்தை அழித்தொழிக்க எத்தனித்தாலும் அது தோல்வியுற்றது.
- கிறிஸ்தவ சமயத்தவர்கள் உயிரைக்கொடுத்துத் தமது சமயத்தைக் காத்துக் கொள்வதற்கு முயற்சித்தார்கள்.
- நான்காம் நூற்றாண்டில் அதாவது 380 ஆம் ஆண்டில் பேரரசர் தியடோசியஸ் ரோமப் பேரரசின் ஒரே அங்கீகரிக்கப்பட்ட சமயமாக கிறிஸ்தவத்தை பிரகடனஞ் செய்தார்.

- உலக சனத் தொகையில் 1/3 பங்கினர் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள்.
- பாப்பரசர் கடவுளின் வாழும் பிரதிநிதியாகக் கருதப்படுகின்றார்.
- பேதுறு முதலாவது போப்பாண்டவராவர்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்

- ஐரோப்பாவின் முக்கிய சமயமான கிறிஸ்தவத்தின் ஆரம்பத்தை விபரிப்பார்.
- கிறிஸ்தவ சமயத்தின் தலைவர் இயேசுநாதர் என்பதை ஏற்றுக்கொள்வார்.

- உலகப்படத்தின் துணையுடன் கத்தோலிக்க சமயத்தின் உயிர்ப்பான தலைவர் பாப்பரசர் வாழும் இடத்தையும் கிறிஸ்தவம் பரவியுள்ள நாடுகளையும் குறித்துப் பெயரிடுவார்.
- ஒற்றுமையாக குழுச் செயற்பாட்டில் ஈடுபடுவர்.
- தேவைப்படும் இடத்தில் முன்வந்து விடயங்களை முன்வைப்பார்.

பின்னிணைப்பு : 2 : செயற்பாட்டுப் பத்திரம் - உலகப்படம்
பின்னிணைப்பு : 3 : செயற்பாட்டுப் பத்திரம் :

### இணைப்பு 7.5.1.2
### செயற்பாட்டுப் பத்திரம்

கீழ்வரும் வினாக்குளுக்குப் பாடப்புத்தகத்தின் துணையுடன் விடையளிக்க.

01. இயேசுநாதரின் தாயும் தந்தையும் யாவர்?

02. இயேசுநாதர் அவதரித்தபோது ரோமின் பேரரசராக இருந்தவர் யார்?

03. இயேசுநாதரின் போதனைகளில் அடங்கியிருந்த ஐந்த விடயங்களைக் குறிப்பிடுங்கள்.

04. அவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது?

05. முதலாவது பாப்பரசர் யார்?

06. கிறிஸ்தவ சமயத்தை ரோமப் பேரரசின் சமயமாகப் பிரகடனப்படுத்தியவர் யார் ?

07. இயேசுநாதரின் கருத்துக்களைத் தாங்கிய புனித நூல் எது?

08. உலக சனத் தொகையில் ---------- பங்கினர் கிறிஸ்தவ சமயத்தினராவர்.


அடைப்புக்குள் தரப்பட்டுள்ள விடைகளில் சரியானதற்குக் கோடிடுக.

09. ஜேசுநாதர் பிறந்தது (மக்காவில், பெத்தலஹேமில், இந்தியாவில், பாலஸ்தீனத்தில்)

10. உரோமாபுரியின் முதல் கிறிஸ்தவப் பேரரசன் (கொன்ஸ்டான்டைன், ஒகஸ்டஸ்சீஸர், ஜுலியஸ்சீஸர், குளோடியஸ்சீஸர்.)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பட உரு 7.5.1.1



இயேசு நாதர்

**செயற்பாடு 7.5.2**

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | :- | மானிய முறைக் காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புப் பற்றி கற்பார். |
| **செயற்பாடு** | :- | "பிரபுக்களின் ஆதிக்கம்" பற்றி அறிந்து கொள்வோம். |
| **நேரம்** | :- | 40 நிமிடங்கள். |
| **தர உள்ளீடுகள்** | :- | • இணைப்பு 7.5.2.1. ஐரோப்பிய வரைபடம்.<br>• இணைப்பு 7.5.2.2. செயற்பாட்டுப் படிவம்.<br>• பாடநூல். |

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை.

### படி : 7.5.2.1

பாடநூலில் மானிய முறை என்ற பாடப்பரப்பை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்ளுக்கு விடையளிப்பதுடன் மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துங்கள்.

- மானிய முறை என்பது யாது?

பின்வருவனவற்றை முதன்மைப்படுத்திக் கலந்துரையாடலை நடத்துங்கள்.

- ஐரோப்பா எதிர்நோக்கிய மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பால் புராதன யுகம் அழிந்தொழிந்து மானிய முறை தோற்றம் பெற்றது.
- மானிய முறையில் நாட்டின் சகல நிலங்களும் அரசனுக்கே சொந்தமானதாகும்.
- அது சேவை வழங்குவதன் மூலம் நிலத்தை அனுபவிக்கும் முறையாகும்.
- அரசனைவிட பிரபுக்கள் சக்தி வாய்ந்தவர்கள்.
- சுயதேவைப் பூர்த்திப் பொருளாதார முறையொன்று நிலவியது.
- வகுப்படிப்படையிலான சமூகமொன்று காணப்பட்டது.
- ஒற்றுமை நிலவியது.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- அறிவுத் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி மானிய முறையின் வீழ்ச்சிக்குக் காரணமானது.

(நேரம் : 10 நிமிடங்கள்)

**படி 7.5.2.2**

- வகுப்பை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒருவரை நியமியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் பின்னிணைப்பு இல. 01 இல் குறிப்பிட்டுள்ள உலகப் புறவுருவங்களை வழங்குங்கள்.
- பின்னிணைப்பு இல. 02 குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்பாட்டுப் படிவத்தை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குக.
- சமூகச் செயற்பாட்டுக்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்கவும்.
- குழுவைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(நேரம் : 30 நிமிடங்கள்)

**படி 7.5.2**

- செயற்பாட்டை முன் வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- குழுவினர் முடிவுகளை முன்வைக்கும் போது அவர்களது இயலுமை, இயலாமையை அவதானித்துக் கணிப்பீட்டை மேற்கொள்ளவும்.
- ஏனைய குழுவினரின் செயற்பாட்டை அவதானித்துக் குறிப்பெடுக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள விடயங்களை முன்னெடுத்து மீளாய்வைச் செய்யுங்கள்.

- கி.பி. 5 - 15 நூற்றாண்டுகளுக்கிடையே ஐரோப்பாவில் மானிய முறை நிலவியது.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறையொன்று காணப்பட்டது.
- பிரபுக்களின் வளர்ச்சியால் பொதுமக்களின் ஆதரவு அவர்களுக்குக் கிட்டியது.

- பிறப்பை அடிப்படையாகக் கொண்டு சமூக அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது.

- பணப்பாவனை சிறியளவில் காணப்பட்டதோடு பொருள் பண்டமாற்று முறைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டது.

- சிலுவை யுத்தம் மானிய முறையின் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்தது.

(நேரம் : 10 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- மானிய முறைக் காலத்தில் நிலவிய சமூக, அரசியல், பொருளாதார நிலைகளையும் விவரிப்பார்.


- மானிய முறையின் போது காணப்பட்ட தன்னிறைவுத் தன்மைக்கும், ஒற்றுமைக்கும் மதிப்பளிப்பார்.

- மானிய முறை நிலவிய ஐரோப்பிய நாடுகளை படத்தில் குறித்துக் காட்டுவார்.

- குழுவாகச் செயற்படுவதற்கான வழக்கத்தையும், பயிற்சியையும் பெறுவார்.

- கலந்துரையாடலில் பங்களிப்பை செய்வார்.

இணைப்பு 7.5.2.1



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 7.5.2.2**

**செயற்பாட்டுப் பத்திரம்.**

**முதலாம் குழு.**

1. ஐரோப்பாவில் மானிய முறை செயற்பட்ட நாடுகளை (உலகப் படத்திலே) குறித்துக் காட்டுவார்.
   1. ..........................................
   2. ..........................................
   3. ..........................................
   4. .........................................
   5. ..........................................

**இரண்டாம் குழு.**

1. மானிய முறையில் காணப்பட்ட அரசியல் பண்புகளைப் பாட நூலிலிருந்து தெரிந்தெழுதுங்கள்.
   1. ..........................................
   2. ..........................................
   3. ..........................................
   4. .........................................
   5. ..........................................

**மூன்றாம் குழு.**

1. மானிய முறையில் காணப்பட்ட பொருளாதாரப் பண்புகளைப் பாடநூலிலிருந்து தெரிந்தெழுதுங்கள்.
   1. ..........................................
   2. ..........................................
   3. ..........................................
   4. .........................................
   5. ..........................................

**நான்காம் குழு.**

1. மானிய முறையில் காணப்பட்ட சமூகப் பண்புகளைப் பாட நூலின் உதவியுடன் குறிப்பிடுங்கள்.
   1. ..........................................
   2. ..........................................
   3. ..........................................
   4. .........................................
   5. ..........................................

**ஐந்தாம் குழு.**

1. மானிய முறை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்களைப் பாடநூலின் உதவியுடன் குறிப்பிடுங்கள்.
   1. .........................................................
   2. .........................................................
   3. .........................................................
   4. .........................................................
   5. .........................................................

## செயற்பாடு 7.5.3

**தேர்ச்சி மட்டம்** :- சிலுவைப் போருக்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் விவரிப்பார்.

**செயற்பாடு** :- ஐரோப்பாவைப் புதிய உலகொன்றிற்கு இட்டுச் சென்ற சிலுவை யுத்தம் பற்றிக் கற்போம்.

**நேரம்** :- 40 நிமிடங்கள்.

**தரஉள்ளீடுகள்** :-
- இணைப்பு இல. 7.5.3.1 சிலுவை யுத்தத்தைக் காண்பிக்கும் படம் (10 ஆம் தர வரலாற்று ஆசிரியர் கைந்நூலைப் பார்க்கவும்.)
- இணைப்பு இல. 7.5.3.2 கீழை - மேலைத்தேய வியாபாரப் பாதையைக் காண்பிக்கும் படம்.
- இணைப்பு இல. 7.5.3.3 செயற்பாட்டுப் பத்திரம். (பாத்திரமேற்று நடித்தல்.)
- இணைப்பு இல. 7.5.3.4. செயற்பாட்டுப் பத்திரம்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கற்றல் - கற்பித்தல் செயன்முறை.

### படி 7.5.3.1

இணைப்பு இல. 1 - சிலுவை யுத்தத்தைக் காண்பிக்கும் படத்தைக் காட்டி கீழ்வரும் வினாக்களின் ஊடே பாடத்தை முன்னெடுக்கவும்.

1. படத்தில் காட்டப்பட்டுள்ளது யாது?
2. சிலுவை யுத்தம் என்பது யாது?
3. சிலுவை யுத்தம் யார் யாருக்கிடையில் ஏற்பட்டது?
4. இந்த யுத்தம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?

பின்வரும் விடயங்களை முதன்மைப்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துக.

- கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் சிலுவை யுத்தங்கள் ஏற்பட்டன.
- கிறிஸ்தவர்கள் சிலுவையணிந்து யுத்தத்தில் பங்குபற்றியதால் சிலுவையுத்தம் என்றழைக்கப்பட்டது.
- 11 - 15 ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் சிலுவை யுத்தங்கள் இடம்பெற்றன.
- இக்காலத்தில் சிலுவை யுத்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

- சமயப் புனித தலம் ஒன்று தொடர்பாக இது நடைபெற்றது.
- பாப்பரசர் கிறிஸ்தவர்களுக்குத் தலைமை தாங்கினார்.
- அதன் உச்ச நிலையில் 1453 இல் கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமானது.
- சிலுவை யுத்தத்தால் ஐரோப்பியர்களுக்கு வர்த்தகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான கிழக்கத்தியப் பிரதேசங்களுக்கு வருவதற்கான பாதைகள் தடைப்பட்டுப் போனமை.

(நேரம் : 10 நிமிடங்கள்)

## படி 7.5.3.2

- நடிப்பதற்கு ஆற்றல் வாய்ந்த மாணவர் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- இணைப்பு இல. 7.5.3.3 இல் வகிபாகம் ஏற்று நடிப்பதற்கான செயற்பாட்டுப் பத்திரத்தை ஒன்றை வழங்குங்கள்.
- அதனை முன்வைக்கும் முறையைப் பற்றிய அறிவுறுத்தலை வழங்குங்கள்.
- ஏனைய மாணவர்களின் கவனத்தை அதன்பால் ஈர்க்கச் செய்யுங்கள்.
- அதன் பின் பின்னிணைப்பில் உள்ள செயற்பாட்டுப் படிவத்தில் உள்ள வினாக்களுக்கு விடை எழுதச் செய்யுங்கள்.

(நேரம் : 30 நிமிடங்கள்)

## படி : 7.5.3.3

- மாணவர்களின் விடைகள் சிலவற்றைக் கணிப்பீட்டிற்கு உட்படுத்துங்கள்.
- கூடிய புள்ளி பெற்ற மாணவர்களின் விடைகளைக் கலந்துரையாடவதின் ஊடாக கீழ்வரும் விடயங்களைக் கொண்டு மீளாய்வைச் செய்யவும்.

- ஐரோப்பாவில் முஸ்லிம்களின் ஆதிக்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதே சிலுவைப் போர்களின் நோக்கமாகயிருந்தது.
- கிழக்கு - மேற்கு வர்த்தகத்தில் கொன்ஸ்தாந்திநோபிள் மத்திய நிலையமாக இருந்தது.
(இணைப்பு 7.5.3.2 படத்தின் மூலம்)

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- சிலுவைப் போரால் கிழக்குலகிற்குச் செல்வதற்குப் புதிய கடல் வழிகள் கண்டறியும் தேவை ஏற்பட்டது.
- மானிய முறையின் வீழ்ச்சிக்கு சிலுவைப் போர் வழிகோலியது.
- கொன்ஸ்தாந்திநோபிளில் இருந்த புராதன நூல்களை ஐரோப்பாவுக்குக் கொண்டு சென்றமையால் கிரேக்க, ரோம நாகரிகம் அங்கெல்லாம் பரவியது.
- விஞ்ஞான கலைத்துறைகளில் விருத்தி ஏற்பட்டது.

(நேரம் : 40 நிமிடங்கள்)

## கணிப்பீட்டு, மதிப்பீட்டு நியதிகள்.

- சிலுவை யுத்தம் என்றால் என்ன என்று விளக்குவார்.
- நாடுகாண் பயணங்களின் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- உலகப் படமொன்றில் புராதன வர்த்தக நிலையங்களைக் குறிக்கும், பெயரிடும் திறன்களை வளர்த்துக் கொள்வார்.
- நடிப்பாற்றலைப் பெறுவார்.
- வரலாற்று மூலங்களிலிருந்து தகவல்களைத் திரட்டும் ஆற்றலைப் பெறுவார்.

**இணைப்பு இல. 7.5.3.3**

**பாத்திரமேற்று நடிப்பதற்குரிய கதைப்பகுதி.**

நான் ஐரோப்பாக் கண்டத்தைச் சேர்ந்த பிரான்ஸில் பிறந்த பிராங்கோ. நான் 1420 ஆம் ஆண்டில் பிறந்தேன். தெரிகின்றதா எனது நிலை? எனது கையும் காலும் முடமாகி இருக்கும் நிலை. நீங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்க வேண்டாம். நான் இவ்வாறானதற்குக் காரணம் போர் வீரனாக இருந்தமையே உங்களுக்குத் தெரியுமா? 1453 ஆம் ஆண்டில் ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கும் துருக்கிய முஸ்லிம்களுக்கும் இடையில் பாரிய யுத்தமொன்று ஏற்பட்டது, அது நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வந்தது. அதனை சிலுவைப் போர் என்பர். நான் மிகவும் பக்தி வாய்ந்த கிறிஸ்தவன். எமது நாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஜேர்மன், இங்கிலாந்து நாட்டு வீரர்களும் இதில் பங்குபற்றினார்கள். நாங்கள் நினைத்தது போல அதில் வெற்றிபெற முடியவில்லை. நாங்கள் நினைத்திருந்ததைவிட துருக்கியர்கள் மிகவும் பலசாலிகள். ஆகையால் நாம் தோல்வியுற்றது மட்டுமல்ல, எமது புனித பூமியான ஜெரூஸலத்தை முன்பு இழந்திருந்தது போதாதென்று, பேரரசின் தலைநகரத்தையும் கீழை நாடுகளுக்கு வியாபாரத்திற்காகச் செல்லும் நுழைவாயிலையும் இழக்க நேர்ந்தது.


இதனால் எமது வியாபாரம் பேரிழப்புக்குட்பட்டது. என்றாலும் நாம் சும்மா இருக்கவில்லை. புதிய கடல் வழிகளைத் தேடிக் க்'டப்பட்டோம். இதன் பலனாக எமக்கு ஆபிரிக்க, ஆசிய, அமெரிக்க, அவுஸ்ரேலியக் கண்டங்களுக்குச் செல்வதற்கான கடல் வழிகளைக் கண்டறிய முடிந்தது. இதனால் எமது சமயத்தை அனைத்துக் கண்டங்களிலும் பரப்புவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இணைப்பு 7.5.3.1



சிலுவை யுத்தம்

இணைப்பு 7.5.3.2



கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதைகளைக் காட்டும் படம்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு - 7.5.3.4**

**செயற்பாட்டுப் பத்திரம்.**

- சிலுவை யுத்தம் என்று எதனைக் குறிப்பிடுகின்றோம்?
- சிலுவை யுத்தங்களில் பங்கேற்ற ஐரோப்பிய நாடுகள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
- சிலுவை யுத்தத்தின் உச்சக் கட்ட சம்பவமாகக் குறிப்பிடப்படுவது எதனை? அது எத்தனையாம் ஆண்டில் இடம்பெற்றது?
- சிலுவை யுத்தத்தினால் ஏற்பட்ட விளைவுகளைத் தரவும்.

## 7.6. பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின் இலங்கை.

**பாடவேளைகள் - 18**

### அறிமுகம்

நீர்வள நாகரிகத்தின் இரண்டாவது தலைநகரான பொலன்னறுவை காலிங்க மாகனின் ஆக்கிரமிப்பினால் வீழ்ச்சியடைந்ததுடன் 13 ஆம் நூற்றாண்டில் சிங்கள இராசதானிகள் தென்மேற்கு நோக்கி இடம்பெயரத் தொடங்கியன.

தம்பதெனிய, யாப்பகூவா, குருணாகலை, கம்பளை, மற்றும் கோட்டை வரைக்குமாக சிங்கள இராசதானி தென்மேற்கிற்கு இடம் பெயர்ந்த அதேவேளை இந்த இராசதானியானது ஒரு தலைநகரில் தானும் அதிக காலம் நீடிக்கவில்லை. இவ்வாறு இராசதானிகள் தென்மேற்கிற்கு பெயர்ந்து செல்லும்போது இராசரட்டை நீர்வள நாகரிகத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாய வாழ்வியல் முறைமைக்குப் பதிலாக வாணிபப் பொருளாதார முறை மேலெழும்பிய விதம் தொடர்பாக ஆய்ந்தறிவதே இந்த அலகின் நோக்கமாகும்.

சிங்கள இராசதானிகள் தென்மேற்கிற்குப் பெயரும்போது வடக்கில் சுதந்திர அரசாக யாழ்ப்பாண இராச்சியம் எழுச்சி பெற்றமை தொடர்பாகவும் அத்தோடு இந்த இராசதானிகளின் காலப்பகுதியில் காணப்பட்ட வாழ்க்கைமுறை பொருளாதார அடிப்படைகள், சமயமும் இலக்கியங்களும் ஆகியவற்றை பற்றியும் எளிமையான விளக்கத்தைப் பெறுவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** :- மத்திய கால இலங்கையின் முக்கியமான வரலாற்று நிகழ்வுகளை விபரிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :-

- இலங்கையின் இராசதானிகள் இடம் பெயர்ந்தமைக்கு காரணமாக அமைந்த அம்சங்களை விவரிப்பார்.
- பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரை இருந்த முக்கியமான ஆட்சியாளர்களின் அரச பணிகளைப் பகுப்பாய்வு செய்வார்.
- பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் இலங்கையில் காணப்பட்ட வாழ்க்கைமுறை, சமயம் மற்றும் இலக்கிய நடவடிக்கைகள் என்பவை தொடர்பான தகவல்களை விவரிப்பார்.
- யாழ்ப்பாண இராச்சியத்தின் பிரதான ஆட்சியாளர்கள் தொடர்பான தகவல் தொகுப்பொன்றைத் தயாரிப்பார்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

பாட உள்ளடக்கம் 7.6.

## பொலன்னறுவை இராச்சியத்தின் வீழ்ச்சியின்பின் இலங்கை.


படி - 7.6.1

- இராசரட்டையின் நீர் வள நாகரிகம் அழிவுற்றதோடு மக்கள் மலைநாட்டிற்கும் தென்மேற்குப் பிரதேசத்திற்கும் புலம்பெயர்தல்.

- இராசரட்டையின் சிறிய குளங்களுக்கண்மையில் சிறுதொகையினரான மக்கள் கூட்டத்தினர் தங்கிவிட அவர்கள் வன்னியர்கள் எனும் பெயரால் அழைக்கப்பட்டமை.

- மாகனின் கொடுமையான ஆட்சியினால் ருகுண மற்றும் தென்மேற்கில் குடியேறிய இராசரட்டை பிரதானிகள் காடுகள் மற்றும் மலைகள் ஆகியவற்றில் பாதுகாவலுள்ள இடங்களில் தம் ஆட்சி மையங்களை நிறுவினர்.

எடுத்துக்காட்டு :- யாப்பகூவ - சுப சேனாபதி.
கோவிந்த ஹெல - புவனேகபாகு ஆதிபாத.
தம்பதெனிய - விஜயபாகு
மினிபே - சங்க சேனாபதி




Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# இராசதானிகள் புலம்பெயர்தல்

## தம்பதெனிய இராசதானி (கி. பி. 1232 - 1270)

- பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்ததன் பின் உருவான முதலாவது இராசதானி தம்பதெனிய ஆகும்.
- 111 ஆம் விஜயபாகு (கி. பி. 1232 - 1236) தம்பதெனிய அரச வம்சத்தின் முதலாவது அரசன் ஆகியமை.
- கொத்மலையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த புனிததந்தம் கேகாலை மாவட்டத்திலுள்ள பெலிகல மலையுச்சியில் தலதாமாளிகையொன்றை நிறுவி அங்கு பிரதி"டை செய்யப்பட்டது. அதன்மூலமாக அரச பாரம்பரியம் உறுதி செய்யப்பட்டமை.
- கி. பி. 1236 இல் 111 ஆம் விஜயபாகு மன்னனின் மரணத்தின் பின் அவனின் மகனான 11 ஆம் பராக்கிரமபாகு தம்பதெனியவின் அரசனாதல்.
- கி. பி. 1255 இல் 11 ஆம் பராக்கிரமபாகு மன்னனால் பாண்டியர்களின் படை உதவியுடன் நாற்பதாண்டுகள் இந்நாட்டை ஆட்சி செய்த காலிங்க மாகன் விரட்டப்பட்டமை.
- சந்திரபானு எனும் சாவக மன்னனால் மேற்கொள்ளப்பட்ட இரண்டு படையெடுப்புகளுக்கு 11 ஆம் பராக்கிரம மன்னன் முகங்கொடுக்க நேர்ந்தமை.
- பாண்டியரின் உதவிபெற்று 1261 இல் சாவகர் படையெடுப்பை அரசன் தோல்வியடையச் செய்தமை.
- கி. பி. 1236 இலிருந்து 1270 வரை ஆட்சிசெய்த 11 ஆம் பராக்கிரமபாகு மன்னன் தம்பதெனிய இராசதானியின் மிகவுயர்வான ஆட்சியாளனாக மதிக்கப்படல்.
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைக் காப்பாற்றியமை.
- தலைசிறந்த கல்விமான் ஆதலும் கலிகால இலக்கிய பண்டிதர் எனும் பட்டப்பெயரைக் கொண்டமையும் அவனின் பெருமைகட்குக் காரணங்களாகியமை.
- 11 ஆம் பராக்கிரமபாகு அரசனுக்குப் பின் அவனின் மகன். 4 ஆம் விஜயபாகு (போசத் விஜயபாகு) எனும் பெயரில் தம்பதெனியவின் அரசனாதல்.
- 4 ஆம் விஜயபாகு மன்னனை கொலைசெய்த மித்த சேனாதிபதி அரசாட்சியைப் பறித்துக் கொண்டதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் சீர்குலைவுகளால் தம்பதெனிய இராசதானி முடிவடைந்தது.

## யாப்பகூவ இராசதானி (கி. பி. 1272 - 1300)

- யாப்பகூவவை இராசதானியாக ஆக்கியவன் 1 ஆம் புவனேகபாகு அரசன் ஆவான்.
- தகுரக சேனாதிபதி, மித்த சேனாதிபதிவைக் கொன்று 4 ஆம் விஜயபாகு மன்னனின் சகோதரனான புவனேகபாகு இளவரசனுக்கு அரசாட்சியைக் கையளித்தமை.
- தம்பதெனியாவை விட யாப்பகூவ பாதுகாப்பானதாக அமைந்தமை.
- அதன்காரணமாக புவனேகபாகு அரசன் யாப்பகூவவைத்தனது இராசதானியாகக் கொண்டமை.
- அக்காலத்தில் தென்னிந்தியாவில் பலம்பொருந்திய பாண்டிய பேரரசின் மன்னனாகவிருந்த ஆரிய சக்கரவர்த்தி இலங்கைக்குப் படையெடுத்து வந்து புனிததந்த தாதுக்களையும், பிட்சா பாத்திர தாதுக்களையும் பாண்டிய தேசத்திற்குக் கடத்திச் சென்றமை.
- 1 ஆம் புவனேகபாகு அரசனின் மரணத்தின் பின்னர் 4 ஆம் விஜயபாகுவின் மகனான பராக்கிரமபாகு பாண்டிய நாட்டிற்குச் சென்று புனித தந்த தாதுவையும் பிட்சாபாத்திர தாதுவையும் மீண்டும் பெற்றுவந்து கி. பி. 1287 இல் 111 ஆம் பராக்கிரமபாகு எனும் பெயரில் பொலன்னறுவை இராச்சியத்தின் அரசனாதல்.

## குருணாகலை இராஜதானி - (கி. பி. 1300 - 1347)

- 111 ஆம் பராக்கிரமபாகுவை வென்ற 11 ஆம் புவனேகபாகு (1 ஆம் புவனேகபாகுவின் புதல்வன்) கி. பி. 1300 இல் குருணாகலையை தனது இராசதானியாக அமைத்துக் கொண்டான்.
- அவன் குருணாகலை இராசதானியின் முதலாவது மன்னனாதல்.
- 11 ஆம் புவனேபாகு அரசனின் மகன் 4 ஆம் பராக்கிரமபாகு (கி. பி. 1302 - 1325) எனும் பெயரில் குருணாகலை அரசனாதல்.
- 4 ஆம் பண்டித பராக்கிரமபாகு எனும் பெயரில் அறிமுகமாகிய இவன் மிகவும் தலைசிறந்த ஆட்சியாளனாதல்.
- சிறிவர்தன பிருதிராஜ் அமைச்சரால் தற்போதைய கண்டி நகரம் சிறிவர்தனபுர எனும் பெயர் பெறுதல்.
- 4 ஆம் பராக்கிரமபாகு அரசனுக்கு பிறகு சுமார் 15 ஆண்டு காலம் தொடர்பான அரசியல் தகவல்கள் இல்லாது போனமை.

## கம்பளை இராசதானி - (கி. பி. 1341 - 1415)

- குருணாகலை இராசதானி கைவிடப்பட்டு கம்பளை இராசதானி உருவானமைக்கான காரணங்கள் தெளிவில்லை.
- இக்காலப் பகுதியில் அரச அதிகாரத்துடன் தொடர்புடைய பிரசித்தி பெற்ற பிரபு குடும்பங்கள் இரண்டு காணப்பட்டன.அவையாவன சேனாதிலங்கார குடும்பம், அழகக்கோனார் குடும்பம் என்பவையாகும்.
- கி. பி. 1341 இல் 4 ஆம் புவனேகபாகு கம்பளையை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிதல்.
- சேனாதிலங்கார 4 ஆம் புவனேகபாகு மன்னனின் முதலமைச்சராகப் பணிபுரிதல்.
- 4 ஆம் புவனேகபாகுவின் சகோதரன் 5 ஆம் பராக்கிரமபாகு எனும் பெயரில் 1344 இலிருந்து கேகாலை மாவட்டத்தில் தொடர்ந்து அரசாட்சிபுரிதல்.
- 1344 இல் இப்னு பதூதா இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளல்
- கி. பி. 1338 அளவில் விக்கிரமபாகு எனும் பெயருடைய இளவரசன் நிசங்க அழகக்கோனாரின் உதவியுடன் கலகமொன்றை ஏற்படுத்தி 111 ஆம் விக்கிரமபாகு எனும் பெயரில் கம்பளை அரசனானான்.
- கி. பி. 1374 இல் 5ஆம் புவனேகபாகு கம்பளை அரசனாதல்.
- நிசங்க அழககோனார் அவனின் முதலமைச்சராகப் பணியாற்றுதல்.
- இக்காலப் பகுதியில் யாழ்ப்பாண அரசன், ஆரிய சக்கரவர்த்தி மன்னாரிலிருந்து பாணந்துறை வரையான கரையோர பகுதிகளின் வரி அறவீட்டை தமது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்தமை.
- கோட்டை அரணைக்கட்டிய நிசங்க அழகக்கோனார் அங்கிருந்து தாக்குதல் புரிந்து ஆரிய சக்கரவர்த்தியை மேற்குக் கரையோரங்களிலிருந்து விரட்டியடித்தமை.
- நிசங்க அழககோனாரின் செயற்பாடுகளால் ஆத்திரமடைந்த ஆரிய சக்கரவர்த்தி நாட்டின் மத்திய பகுதியூடாக கம்பளைவரை தாக்குதல் தொடுத்தமை.
- நிசங்க அழகக்கோணரை ஆரிய சக்கரவர்த்தி தோல்வியடையச் செய்தல்
- 5 ஆம் புவனேகபாகு கம்பளையை ஆட்சிசெய்த போதும் கம்பளையின் கட்டுப்பாட்டை ஏற்காத வீர அழகேஸ்வரன் றைகமைவை ஆட்சிசெய்தல்.
- கி. பி. 1409 இல் சீன இனத்தவரான செங்ஹோவை உரிய முறையில் வரவேற்காமையினால் வீர அழகேஸ்வரன் சிறைக்கைதியாக கி. பி. 1411 இல் சீனாவுக்குக் கொண்டு செல்லப்படல்.

## கோட்டை இராசதானி (கி. பி. 1415 - 1521)

- கி. பி. 1415 - 1467 வரையான 53 வருடங்கள் ஆட்சிபுரிந்த VI ஆம் பராக்கிரமபாகு கோட்டை காலத்தின் ஆரம்ப ஆட்சியாளனாதல்.

- ஜயமகலேன செல்வந்தப்பிரபுவும் சுனேத்ராதேவியும் இவரின் பெற்றோராவார்.

- VI ஆம் பராக்கிரமபாகு அரசனாகியபோது சுயாதீன பிரதேசமாக இருந்த யாழ்ப்பாண பிரதேசத்தை சப்புமல்குமாரவை அனுப்பிக் கைப்பற்றியமை.

- கி. பி. 1462 இல் ஜோதிய செல்வந்தப்பிரபுவால் மலைநாட்டில் மேற்கொள்ளப்பட்ட கலகத்தை அடக்கியமை.

- இறுதியில் இலங்கையை ஒன்றிணைத்த ஆட்சியாளனாதல்.

- VI ஆம் புவனேகபாகு எனும்பெயரில் 1469 இல் ஆட்சியேறிய சபுமல் குமாரயா கி. பி. 1478 வரை கோட்டையை ஆட்சிபுரிந்தமை.

## 7.6.4. யாழ்ப்பாண இராச்சியம்.

- யாழ்ப்பாண இராச்சியம் 13 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானதாக நம்பப்படுகின்றது.

- ஆரிய சக்கரவர்த்திகளின் அரச பரம்பரையினர் அதனை ஆட்சிபுரிதல்.

- 1415 இல் கோட்டையில் அரசனாகிய VI ஆம் பராக்கிரமபாகு அரசன் சப்புமல்குமாரவை அனுப்பி யாழ்ப்பாணத்தை கோட்டை இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டமை.

- VI ஆம் புவனேகபாகு எனும் பெயரில் ஆட்சிபுரிந்த சபுமல் குமாரயாவின் ஆட்சிக்காலம் நிறைவுற்றதன் பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் தனித்த இராச்சியமானமை.

- ஆரிய சக்கரவர்த்தி வம்சத்திற்குரிய ஆட்சியாளர்கள் அங்கு முக்கியமான ஆட்சியாளர்களாதல்.

- மேலே குறிப்பிட்டவாறு (கம்பளை இராசதானி பற்றி பகுதியில்) கம்பளை 11 ஆம் விக்கிரமபாகு அரசன் காலத்தில் யாழ்ப்பாண அரசன் ஆரிய சக்கரவர்த்தி கம்பளைக்கு படையெடுப்பபை மேற்கொண்டமை.

- 1619 இல் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டமை.

## 7.6.2. பொலன்னறுவை வீழ்ச்சிக்குப் பிற்பட்டகாலத்தில் வாழ்க்கைமுறை.

- இராசரட்டை நீர்வள நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதார முறைகள் வீழ்ச்சியுற்றுக் காணப்படல்.
- இராசதானி ஈரவலயத்திற்கு இடம்பெயர்ந்தமையால் பயிர்ச் செய்கைக்காக மழை நீரைப் பயன்படுத்தியமை.
- நெற் பயிர்ச்செய்கை பிரதானமானதுடன் நீர்ப் பற்றாக்குறையுள்ள பிரதேசங்களில் சேனைப் பயிற்ச்செய்கை மேற்கொள்ளப்படல்.
- ஈரலிப்பான பிரதேசங்களில் தென்னை உற்பத்தியை நன்கு மேற்கொள்ளக் கூடியதாக அமைந்தமையால் தனியொரு பயிர்ச் செய்கையாக தெங்குப் பயிர்ச்செய்கை பரவியமை.
- ஈரவலய பிரதேசங்களில் காணப்பட்ட காட்டுப்பயிரான கறுவா வர்த்தகப் பயிர்ச்செய்கையாக பிரசித்தி பெற்றமை.
- பாக்கு, மிளகு, சாதிக்காய், ஏலம் போன்ற ஈரவலய பயிர்கள் ஏற்றுமதிப் பயிர்களானமை.
- முத்து, மாணிக்கம், யானைத் தந்தம் போன்ற வணிகப் பொருட்களும் ஏற்றுமதியில் சேர்க்கப்பட்டமை.
- விவசாயப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு வாணிபம் பரவியமை.
- 13 ஆம் நூற்றாண்டாகும் போது இலங்கையில் சத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர் எனும் குல முறை உருவாகியமை.
- விவசாயம், வைத்தியத் தொழில் போன்றவை ஒரு குலத்திற்கு மாத்திரம் உரித்துடையதாக இல்லாமல் போனமை.
- சமூக ஒழுக்கம் முக்கியத்துவம் பெற்றமை.
- பௌத்தசமயத்தினால் மேம்பாடைந்த சமூகத்தில் பெண்களுக்குரிய இடம் இக்காலத்திலும் காணப்பட்டமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 7.6.3 சமய வளர்ச்சியும் இலக்கியங்களும்.

- தம்பதெனியாக் காலத்தில் 111 ஆம் விஜயபாகு மன்னால் பெலிகல எனுமிடத்தில் தலதா மாளிகை ஒன்றை நிறுவி புனித தந்தம் பிரதி'டை செய்யப்பட்டமை.

- தம்பதெனியா விஜயசுந்தர ராமய, மற்றும் வத்தளை விஜயபாகு எனும் பெயரில் விகாரை ஒன்றை நிறுவியமை. களனி விகாரை மற்றும் அத்தனகல விகாரை என்பவற்றைப் புதுப்பித்தமை.

- 11 ஆம் பராக்கிரமபாகு அரசன் தம்பதேனியா விஜயசுந்தர ராமயவில் தலதா புனித தந்த தரிசனத்தையும் பூஜை உற்சவங்களையும் நடத்தியமை.

- தம்பதெனியாவில் சங்க சம்மேளனத்தை நடத்திய பிக்குகளின் ஒழுக்கம், கட்டுப்பாடுகள் தொடர்பான தமபதெனிய ஒழுக்கக் கோவை உருவாக்கப்பட்டமை.

* 11 ஆம் பராக்கிரமபாகுவின் அனுசரணையுடன் விசித்திர மார்க்க சன்னய, கவ்சிலிமின, சத்தர்ம ரத்னாவளிய, பேசஜ்ஜ மஞ்சுசா, சமந்த குட்ட வர்ணனாவ போன்ற நூல்கள் எழுதப்பட்டமை.

- யாப்பகூவா இராசதானி காலத்தில் தென்னிந்தியாவின் கட்டிட நிர்மாணக் கலையில் செல்வாக்கு ஏற்படல்.

- குருணாகலை யுகத்தில் IV ஆம் பராக்கிரமபாகு மன்னன் வீதாகம ஸ்ரீ கணானந்த பிரிவேனாவை உருவாக்கியமை.

- கண்டி அஸ்கிரிய பீடம் ஆரம்பிக்கப்படல்.

- IV ஆம் பராக்கிரமபாகு அரசன் காலத்தில் பன்சிய பனஸ் ஜாதக நூல் (ஐநூற்றி ஐம்பது ஜாதகக் கதைகள்) தலதா சிரித்த, எளுபோதி வங்சய, அநாகத வங்சய, தாது மஞ்சுசா போன்ற நூல்கள் எழுதப் பெற்றமை.

- கம்பளை காலத்தில் பிரபுக்களின் குடும்பங்கள் சமயப் பணிகளில் முன்னணியில் இருந்தமை.

- கடலாதெனிய, லங்காதிலகா, எம்பக்க தேவாலயம் போன்ற கட்டடங்கள் அமைக்கப் பெறல்.

- தூது இலக்கியங்களின் ஆரம்பம் நிகழ்தல்.

- மயூர சந்தேசய, திசர சந்தேசய, விமுக்தி சங்கிராய, எளூ அத்தனகலு வங்சய, சத்தர்மாலங்காரய, நிக்காய சங்கிராய என்பவை கம்பளை காலப்பகுதியில் எழுதப் பெற்ற பிரசித்தமான நூல்களாக அமைதல்.

- கோட்டை VI ஆம் பராக்கிரமபாகு அரசன் தனது தாயின் ஞாபகார்த்தமாக பெப்பிலியானே சுனேத்ரா தேவி பிரிவெனாவை அமைத்தமை.

- வீதாகம கணாநந்த பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா, தொடகமுவே விஜயபாகு பிரிவெனா, தெவிநுவர இருகல் குலதிலக பிரிவெனா ஆகிய கல்வி மத்திய நிலையங்களின் வளர்ச்சிக்கு ஆதரவு கிட்டியமை.

- தொடகமுவ ஸ்ரீ ராகுல பிக்கு, வீதாகம மைத்திரி பிக்கு, கேரகல வனரத்ன பிக்கு உட்பட VI ஆம் பராக்கிரமபாகு அரசன் ஆகியோர் கோட்டை யுகத்தின் சிறந்த கல்விமான்களாக விளங்கியமை.

- பறவி சந்தேசய, செலலிகினி சந்தேசய, கோகில சந்தேசய, குத்திலய, காவ்ய சேகரய, லோவெட சங்கராவ, பெரகும்பாசிரித்து ஆகியவை கோட்டை யுகத்தில் எழுதப் பெற்ற பிரசித்தமான நூல்களாதல்.

- VI ஆம் பராக்கிரமபாகு அரசன் கோட்டை தலதா மாளிகையை உருவாக்கியமை சபுமல் குமார யாழ்ப்பாண தீபகற்பத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலையும் உருவாக்கியமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**செயற்பாடு 7.6.1**

**தேர்ச்சி மட்டம்** :- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரையான முக்கியமான ஆட்சியாளர்களின் ஆட்சி நிருவாகத்தை ஆய்வு செய்வர்.

**செயற்பாடு** :- "புராதன தலைநகரூடாக இலங்கையின் தென் மேற்குத்திசையாகச் செல்வோம்"

**நேரம்** :- 5 பாடவேளைகள்

**தரஉள்ளீடுகள்** :-

- இணைப்பு 7.6.1.1 - தம்பதெனிய, யாப்பகூவா, குருநாகலை, கம்பளை, கோட்டை ஆகிய காலப்பகுதியைக் காட்டும் படங்கள் சில
- இணைப்பு 7.6.1.2 - சிங்கள இராசதானிகள் தென்மேற்கிற்குக்கு இடம் பெயர்வதைக் காட்டும் தேசப்படம்.
- இணைப்பு 7.6.1.3 - மாணவர் தகவற் பத்திரம்
- இணைப்பு 7.6.1.4 - மாணவர் செயற்பாட்டுப்பத்திரம்
- பாடநூல்
- பிரிஸ்டல்போட்
- பெல்ட்பேனா (தடித்த பேனை)

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி 7.6.1**

- இணைப்பு 7.6.1.1.இல் காணப்படும் படங்களை மாணவர்களுக்கு காட்டுங்கள்.
- இப்படத்தில் காட்டப்படுபவை யாவை?
- இப்படம் எக்காலத்திற்குரியது?
  போன்ற வினாக்களை வினவி பாடப்பிரவேசத்தை மேற்கொள்ளவும்.
- இணைப்பு 7.6.1.2 ஐ மாணவர்களுக்கு முன் வைத்து பாடநூல் கொடுக்கப்பட்டுள்ள விடயங்கள் மேலெழும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்கள் அடங்குவதாக கலந்துரையாடலை மேற்கொள்ளவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- காலிங்க மாகனின் ஆக்கிரமிப்பினால் பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சி அடைந்ததன் பின்னர் சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தமை.
- ஆட்சியாளர்கள் மலைப்பிரதேசங்களை தமது இராசதானிகளாக தெரிவு செய்தமை.
- இங்கு ஆட்சிக்குரிய கேந்திர நிலைகள் குறுகிய காலமே காணப்பட்டமை.
- இராசதானிகள் குறுகிய காலங்களுக்கே நீடித்தனவென்றாலும் அவற்றில் வாழ்ந்த அரசர்களால் இலங்கை இராசதானி பாதுகாக்கப்படுவதற்கு பாரிய நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளமை.

(15 நிமிடங்கள்)

**படி - 7.6.2**

- பொருத்தமான விதத்தில் மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- செயற்பாடு தொடர்பாக அவர்களுக்கு விளக்குங்கள்.
- இணைப்பு 7.6.1.3 மாணவர் தகவற் பத்திரங்களை குழுவுக்கு ஒன்று வீதம் பகிர்ந்தளிக்கவும்.
- இணைப்பு 7.6.1.4 மாணவர் செயற்பாட்டுப் பத்திரத்தை குழுவுக்கு ஒன்று வீதம் பகிர்ந்தளிக்கவும்.
- குழுவுக்கு இடப்பட்டுள்ள செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தவும்.
- தேவையானவிடயங்களில் ஆலோசனைகள் வழங்குங்கள்.

**படி - 7.6.3**

- தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகலை, கம்பளை, கோட்டை ஆகிய ஒவ்வொரு இராசதானியையும் பற்றி முன்வைப்புகளைச் செய்வதற்காக தலா ஒவ்வொரு பாடவேளையைப் பயன்படுத்தவும்.
- ஒவ்வொரு குழுவும் தத்தம் செயற்பாடுகளை முன்வைப்பதற்கு வாய்ப்பை வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் இச் செயற்பாடுகள் பற்றி கருத்துக்கள் கூற சந்தர்ப்பம் வழங்குங்கள்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- குழுச் செயற்பாடுகளின் அடிப்படையில் மாணவரின் இடர்ப்பாடுகளையும் திறமைகளையும் இனங்கண்டு கொள்ளவும்.

- இராசதானிகள் யாவற்றையும் பற்றிய விடயங்கள் முன்வைக்கப்பட்டு முடிந்ததும் கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் மேலெழும் வகையில் முழுவகுப்பிற்குமான தொகுப்புரையை மேற்கொள்ளவும்.

- மாணவர் முன்வைத்த ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி அவற்றிலுள்ள தகவல்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள வழிப்படுத்துக.

- பின்வரும் விடயங்களை வலியுறுத்துவதாக கலந்துரையாடலை மேற்கொள்க.

- சிங்கள இராசதானி இராசரட்டையிலிருந்து ஈரவலயம் வரையிலும் இடம்பெயர்ந்தமை.

- சிங்கள இராசதானி தென்மேற்குத் திசைக்கு இடம் பெயர்ந்தமை பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்தியமை.

- தம்பதெனிய, யாப்பகூவ, குருணாகலை, கம்பளை, கோட்டை, என்ற பெயர்களில் காணப்பட்ட இந்த இராசதானிகளின் ஆட்சிக்காலங்கள் குறுகியதாக அமைந்தமை.

- இவ் இராசதானிகளின் காலங்கள் குறுகியதாக அமைந்தாலும் இலங்கையின் வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் பல இக் காலப்பகுதியிலேயே இடம் பெற்றுள்ளமை.

- இடர்மிகுந்த காலங்களில், பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்து அரசர்கள் சிங்கள இராசதானிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயன்றுள்ளமை.

- அரசர்களின் மிகுந்த அர்ப்பணிப்பால் சமூக, பொருளாதார, கலாசார முன்னேற்றங்கள் இக்காலங்களில் ஏற்பட்டுள்ளமை.

- யாழ்ப்பாணம் தனி அரசாக விருத்தி பெறுகின்றமை.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சிங்கள இராசதானி தென்மேற்கிற்கு இடம்பெயர்ந்தமை பற்றி விவரிப்பார்.
- இலங்கையின் தலைநகராக இருந்த நகரங்களை தேசப்படமொன்றில் குறித்துப் பெயரிடுவார்.
- கோட்டை காலத்தில் எழுதப்பெற்ற இலக்கியங்கள், நூல்களின் பட்டியலொன்றைத் தயாரிப்பார்.
- குழுச் செயற்பாடுகளில் ஈடுபட்டு தகவல் திரட்டலில் ஈடுபடுவார்.
- தேடித்திரட்டிய தகவல்களை முன்வைப்பார்.


**பின்தொடர் வேலைகள்:**

- சிங்கள் இராசதானி தென்மேற்கிற்கு இடம் பெயர்ந்த போது அரசாட்சி புரிந்த மன்னர்களில் ஒருவரைத் தெரிவு செய்து அவர் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்குக.

இணைப்பு 7.6.1.1








Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 7.6.1.2




Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

இணைப்பு 1.3

**மாணவர் தகவல் பத்திரம்:**

II ஆம் பராக்கிரமபாகு - தூது இலக்கிய ஆரம்பம் - சந்திரபானு ஆக்கிரமிப்பு - சபுமல் குமரயாவை அனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை கோட்டை இராசதானியுடன் இணைத்துக் கொண்டமை - ஆரிய சக்கரவர்த்தியை விரட்டியடித்தல், நிஸ்ஸங்க அழகக்கோனார சேனாதிபதி - தம்பதெனிய - புனித தந்தம் பாண்டிய நாட்டிற்குக் கொண்டு செல்லப்படல் - காலிங்க மாகன் விரட்டியடிக்கப்படல் - தூது இலக்கியத்தின் பொற்காலம் - III ஆம் விஜயபாகு - ஜோதிய பிரபுவை வெற்றிகொண்டு மலைநாட்டு இராசதானியை கோட்டையுடன் இணைத்துக் கொள்ளல் - கோட்டை இராச்சியத்தின் கோட்டை நிர்மாணம் - 1ஆம் புவனேகபாகு - சிறிவர்தன பிருதிராஜ் சேனாதிபதி செங்கடகல நகரை நிறுவியமை - அஸ்கிரிய பீடம் உருவாகியமை - IV ஆம் பராக்கிரமபாகு - செங்ஹோ சேனாதிபதி இலங்கையை ஆக்கிரமித்தல் - போதமாப்பா என்பவன் கலகமொன்றை ஏற்படுத்துதல் - 11ஆம் புவனேகபாகு - சேனாதிபதிகள் அரச நிர்வாகத்தில் முதன்மை பெறல் - சேனாதிலங்கார

சேனாதிபதி - பெலிகல தலதா மாளிகையை நிறுவி புனித தந்தை பிரதி'டை செய்தல் - குருணாகலை - VI ஆம் பராக்கிரமபாகு - காலிகால இலக்கிய சகலகலா பண்டிதர் எனும் நாமத்தைப் பெறல். - IV ஆம் புவனேகபாகு ஆரிய சக்கரவர்த்திகள் இலங்கையின் மேற்குக்கரையோரப் பகுதிகளில் வரி அறவிடல் - IIIஆம் விக்கிரமபாகு - தம்பதெனி கணிகாவத்தையை உருவாக்குதல் - Vஆம் புவனேகபாகு - இலங்கையை இறுதியாக ஒன்றுபடுத்திய ஆட்சியாளனாதல் - ஆரிய சக்கரவர்த்திகளின் வம்சாவளியினரால் ஆட்சி செய்யப்படல் - பண்டித பராக்கிரமபாகு எனும் பெயரால் அறியப்படல் - 13ம் நூற்றாண்டில் ஆரம்பமான இராச்சியமாதல் - நல்லூரைத் தலைநகராகப் பயன்படுத்தல் 3ஆம் விக்கிரமபாகு காலத்தில் கம்பளை இராசதானி ஆக்கிரமிக்கப்படல் - தம்பதெனியவில் தலதா தரிசனம் இடம் பெறுதல் - பாண்டிய நாட்டிலிருந்து உதவி பெற்றுக் கொள்ளப்படல் - 1344 இல் இப்னு பதுதா இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளல் - வீர அழகே'வரனை கைதியாக சீனாவிற்குக் கொண்டு செல்லல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு - 7.6.1.4**

**மாணவர் ஒப்படைப் பத்திரம்**

**ஒப்படை 1**

- வழங்கப்பட்டுள்ள மாணவர் தகவல் பத்திரத்தையும் பாடநூலையும் நன்கு வாசியுங்கள்.
- வழங்கப்பட்டுள்ள தகவற் பத்திரம் இலங்கையின் இராசதானிகள் மற்றும் அவற்றின் மன்னர்கள் தொடர்பான பல்வேறு தகவல்களை உள்ளடக்கியுள்ளது.
- அவற்றில் பொருத்தமான தகவல்களை மாத்திரம் தெரிவு செய்து தம்பதெனிய இராசதானி பற்றி பின்வரும் அம்சங்கள் அடங்கிய தகவற் பத்திரமொன்றைத் தயாரிக்கவும்.
- இராசதானி
- ஆரம்ப அரசன்
- மிகச்சிறந்த அரசன்
- அரசியல் முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகள்.

**ஒப்படை 2**

- வழங்கப்பட்டுள்ள மாணவர் தகவல் பத்திரத்தையும் பாட நூலையும் நன்கு வாசியுங்கள்.
- வழங்கப்பட்டுள்ள தகவற் பத்திரத்தில் இலங்கையின் இராசதானிகள் மற்றும் மண்னர்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- அவற்றில் பொருத்தமான தகவல்களை மாத்திரம் தெரிவு செய்து யாப்பகூவ மற்றும் குருநாகலை இராசதானிகள் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் அடங்கிய தகவற் பத்திரமொன்றை தயாரிக்குக.

- இராசதானி
- ஆரம்ப அரசன்
- மிகச்சிறந்த அரசன்
- அரசியல் முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகள்.

**ஒப்படை 3**

- வழங்கப்பட்டுள்ள மாணவர் தகவல் பத்திரத்தையும் பாடநூலையும் நன்கு வாசியுங்கள்

- வழங்கப்பட்டுள்ள தகவற் பத்திரத்தில் இலங்கையின் இராசதானிகள் மற்றும் அவற்றின் மன்னர்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- அவற்றில் பொருத்தமான தகவல்களைத் தெரிவு செய்து கம்பளை இராசதானி தொடர்பாக பின்வரும் அம்சங்கள் அடங்கிய தகவல் பத்திரமொன்றைத் தயாரிக்குக.

- இராசதானி
- ஆரம்ப அரசன்
- மிகச்சிறந்த அரசன்
- அரசியல் முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகள்.

**ஒப்படை 4**

- வழங்கப்பட்டுள்ள மாணவர் தகவல் பத்திரத்தையும் பாடநூலையும் நன்கு வாசியுங்கள்

- வழங்கப்பட்டுள்ள தகவற் பத்திரத்தில் இலங்கையின் இராசதானிகள் மற்றும் அவற்றின் மன்னர்கள் தொடர்பான பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- அவற்றில் பொருத்தமான தகவல்களைத் தெரிவு செய்து கம்பளை இராசதானி தொடர்பாக பின்வரும் அம்சங்கள் அடங்கிய தகவல் பத்திரமொன்றைத் தயாரிக்குக.

- இராசதானி
- ஆரம்ப அரசன்
- மிகச்சிறந்த அரசன்
- அரசியல் முக்கியத்துவமுடைய நிகழ்ச்சிகள்.

## செயற்பாடு : 7.6.2

தேர்ச்சி மட்டம் :- 13ம் நூற்றாண்டிலிருந்து 15ஆம் நூற்றாண்டு வரை இலங்கையில் காணப்பட்ட வாழ்க்கைமுறை, சமய இலக்கிய செயற்பாடுகள் என்பவை பற்றிய தகவல்களை விளக்குவார்.

செயற்பாடுகள் :- "தம்பதெனிய யுகத்தத்தில் ஆரம்பித்து கோட்டையுகம் வரை விருத்தியடைந்த பொருளாதார, சமய, இலக்கிய வரலாற்றை ஆராய்ந்து பார்ப்போம்".

நேரம் :- பாடவேளை - 07

தர உள்ளீடுகள் :-

- இணைப்பு எண் 7.6.2.1 குத்தில காவியத்திலிருந்தும் லோவெட சங்கரா இலக்கியத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட செய்யுள்கள் இரண்டு.
- இணைப்பு எண் 7.6.2.2 மாணவர் செயற்பாட்டு பத்திரம்.
- பாடநூல்

## கற்றல் - கற்பித்தற் செயன்முறை

- இணைப்பு 7.6.2.1 இல் காட்டப்பட்டுள்ள அடிகளை மாணவரைக் கொண்டு வகுப்பு முன்னிலையில் பாடச் செய்யவும். (இதற்காக முன் கூட்டியே மாணவரை ஆயத்தம் செய்து கொள்க)
- இச் செய்யுள் எந்நூலிலிருந்து தெரிவு செய்யப்பட்டது?
- இந்நூல் படைக்கப்பட்ட காலம் எது?
- இவ் வினாக்களை வினவி பாட நுழைவை மேற்கொள்ளவும்.
- பின்வரும் விடயங்கள் மேலெழும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும்.

- பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியுற்றதன் பின் பாதுகாப்பான அமைவிடங்களில் அமைந்த தம்பதெனிய, யாப்பகூவா, குருணாகலை,கம்பளை, கோட்டை ஆகியவற்றுக்கு சிங்கள இராசதானிகள் இடம் பெயர்ந்தமை.

- இந்த இராசதானிகள் குறுகிய காலத்திற்கே ஆட்சிசெய்தன.
- இராசதானிகளின் காலம் குறுகியதெனினும் அரசர்கள் சமய, இலக்கிய பணிகளில் ஈடுபட்டமை.
- சிங்கள இராசதானி இராசரட்டையிலிருந்து தென்மேற்கிற்கு இடம் பெயரும் போது பொருளாதார முறைமைகளும் இடம்பெயரும் போது பொருளாதார முறைமைகளும் மாற்றமடைந்தமை.
- அரசியல் உறுதிப்பாடு சமய, இலக்கிய வளர்ச்சிக்கு உதவியாக அமைந்தமை.

(15 நிமிடங்கள்)

**படி - 7.6.2.2**

- மாணவரைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குங்கள்.
- செயற்பாடு பற்றி மாணவருக்கு விளக்கமளிக்கவும்.
- உரிய புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுங்கள்.
- இணைப்பு 7.6.2.2 குழு ஒப்படைப் பத்திரத்தை ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொன்று வீதம் பகிர்ந்தளிக்க.
- குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பணிகளில் மாணவரை ஈடுபடச் செய்க.
- தேவையான இடங்களில் மாணவருக்கு ஆலோசனைகளை வழங்குக.

(25 நிமிடங்கள்)

**படி - 7.6.2.3**

- ஒரு இராசதானியின் காலம் பற்றிக் கற்பதற்கு ஒரு பாடவேளையை மாத்திரம் பயன்படுத்துவது போதுமானது.
- ஒவ்வொரு குழுவும் தத்தம் தகவல்களை முன்வைப்பதற்கு வாய்ப்பு வழங்குங்கள்.
- முன்வைக்கப்பட்ட தகவல்கள் பற்றி ஏனைய குழுவினரும் கருத்துக்கள் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குழுச் செயற்பாடுகளின் மூலமாக மாணவரின் இடர்ப்பாடுகளையும் திறமைகளையும் இனங்கண்டு கொள்ளவும்.

- சகல இராசதானிகள் பற்றிய தகவல்களும் முன்வைக்கப்பட்டதன் பின்னர் பின்வரும் விடயங்கள் மேலெழக்கூடியதான மீளாய்வை மேற்கொள்ளவும்.

- சிங்கள இராசதானிகள் இராசரட்டையிலிருந்து தென்மேற்கு இடம் பெயர்ந்தமை.
- பல்வேறு காரணங்களால் இராசதானிகள் இடம் பெயர்ந்ததுடன் பாதுகாப்பான இடங்களில் இராசதானிகளை நிறுவியமை.
- இரசானி தென்மேற்கு இடம்பெயரும் போது பொருளாதார நடவடிக்கைகளில் வணிகம் முக்கியமான இடத்தைப் பெற்றமை.
- சமய வளர்ச்சியுடன் இலக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டமை.
- II ஆம் விஜயபாகு, III ஆம் விஜயபாகு, IV ஆம் விஜயபாகு, சேனாதிலங்கார தளபதி, அழகக்கோனார் தளபதி, IV ஆம் பராக்கிரமபாகு ஆகியோர் இங்கு சிறப்பான விதத்தில் சமய, இலக்கிய பணிகளை மேற்கொண்டமை
- இக் காலப்பகுதியில் எழுதப்பட்ட நூல்களில் இலங்கையில் தனித்துவங்கள் சிறப்பிடம் பெற்றுள்ளமை

(40 நிமிடங்கள்)

## கணிப்பீடும் மதிப்பீடும்

- சிங்கள இரசதானிகள் தென்மேற்குநோக்கி இடம்பெயர்ந்ததையும் பொருளாதார செயற்பாடுகள் மாற்றமுற்ற விதத்தையும் விளக்குவார்.
- சிங்கள இராசதானிகள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த விதத்தை இலங்கையின் தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- இராசதானிகள் இடப்பெயர்வு, அவற்றின் பொருளாதார, சமய தகவல்களைப் பற்றிய கோவையைத் தயாரிப்பார்.
- தேவையானவிடங்களில் முன்வந்து செயற்படுவார்.
- குழுவாக ஒன்றிணைந்து பணியாற்றப்பழகுவார்.

**பின்தொடர் வேலைகள்**

- சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்து விதத்தைப் பற்றி பாடசாலை சுவர் பத்திரிகைக்கு கட்டுரையொன்றை எழுதுங்கள்.
- சிங்கள இராசதானி தென்மேற்கு நோக்கிப் புலம்பெயர்ந்தமை தொடர்பான படத்தொகுப்பொன்றைத் தயாரிக்கவும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**இணைப்பு 1.2**
**மாணவர் செயற்பாட்டுப் பத்திரம்**

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துவதே உங்களுக்கு இடப்படும் பணியாகும்.**
**தம்பதெனிய காலப்பகுதியிலிருந்து கோட்டை காலப்பகுதிவரையான பொருளாதார, சமய, இலக்கிய தகவல்கள்**

| விடயம் | தம்பதெனிய இராசதானி | யாப்பகூவ இராசதானி | குருணாகலை இராசதானி | யாழ்ப்பாண இராசதானி | கம்பளை இராசதானி | கோட்டை இராசதானி |
|---|---|---|---|---|---|---|
| பொருளாதார நடவடிக்கைகள் | •<br>•<br>•<br>• | | | | | |
| சமயப் பணிகள் | •<br>•<br>•<br>• | | | | | |
| நிறுவப்பட்ட சமயக் கட்டிடங்கள் | •<br>•<br>•<br>• | | | | | |
| எழுதப்பெற்ற நூல்கள் | •<br>•<br>•<br>• | | | | | |

# மூன்றாம் பகுதி
# கணிப்பீடும் மதிப்பீடும்.

# 3.0 கணிப்பீடும் மதிப்பீடும்

## அறிமுகம்

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் ஊடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை மாணவர்கள் அடைந்து கொள்வதை உறுதிப்படுத்துவதற்காகவும், மாணவர்கள் அடைந்து கொண்ட பாண்டித்திய மட்டங்களை இனங்காணவும் வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய இடைத் தொடர்புடன் கூடிய இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களாக கணிப்பீடும், மதிப்பீடும் காணப்படுகின்றன. கணிப்பீடு சரியான முறையில் நிறைவேற்றப்படின் வகுப்பறையில் கற்கும் அனைத்து மாணவர்களுக்கும் உரிய தேர்ச்சியின் அண்ணளவு பாண்டித்திய மட்டத்தையேனும் அமைந்து கொள்வது சிரமமாக இருக்காது. மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் எதுவென்பதை அளவிடுவதே மதிப்பீட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிப்பீட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் தாம் மாணவர்களுக்கு இரு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அத்தகைய வழிகாட்டல் பொதுவாக பின்னூட்டல் (Feed Back) முன்னூட்டல் (Feed Forward) என்பவையாகும். மாணவர்களின் இடர்ப்பாடுகளையும், பலவீனங்களையும் கண்டறிந்துகொள்ளும் போது அவர்களின் கற்றற் பிரச்சினைகளை நிவர்த்தியாக்குவதற்கு பின்னூட்டல்களையும் மாணவர்களின் ஆற்றல்கைளயும் வலிமைகளையும் இனங்காணும் போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டல்களையும் வழங்க வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கின் வெற்றிக்காக பாடநெறியின் தேர்ச்சிகளில் எந்தத் தேர்ச்சியை எந்த மட்டத்திற்கு அடையப் பெற்றுள்ளது என்பதை மாணவர்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டங்கள் மாணவரின் வெற்றிகரமான மட்டங்களின் ஊடே மாணவர் அண்மித்த தேர்ச்சி மட்டத்தை இனங்காணுதல் இதன் மூலம் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதுடன் மாணவரும் ஆசிரியரும் உட்பட வேறு சம்பந்தப்பட்ட பகுதியினருக்கு மாணவரின் முன்னேற்றத்தை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைதல் வேண்டும.

உங்கள் முன் வைக்கப்படும் இப்பாடநெறி மாணவர் மைய (Student centered ) தேர்ச்சி அடிப்படையிலான செயற்பாட்டு முகமாக (Activity Oriented) அணுகுதலைக் கொண்டிருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக செயலின் மூலம் கற்றல் ஆசிரியரின் (Trans formation Role) உள்ளர்த்தமுமாகும்.

ஆரம்பத்தில் விருத்தி செய்யப்பட்ட செயற்பாட்டுத் தொடரின் ஊடே செயற்படுத்தப்படும் இப்பாடநெறியில் கற்றல் - கற்பித்தலை கணிப்பீடு - மதிப்பீட்டுடன் ஒன்றிணைக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. அவ்வந்த செயற்பாடுகளின் இரண்டாம் படிமுறையில் மாணவர் குழுக்கள் ஆய்வில் ஈடுபடும் போது அவர்களைக் கணிப்பீடு செய்யவும் செயற்பாடுகளில் மூன்றாம் படிமுறையின் போது மாணவர் சுய கண்டறிதலை சமர்ப்பிக்கவும் விவரணம் செய்யவும் முனையும் போது அவர்கள் மதிப்பீடு செய்யப்படவும் ஆசிரியருக்கு இயலுமாகும். மாணவர்கள் ஆய்வில் ஈடுபடும் போது மாணவரிடையே நடமாடியவாறு அவர்கள் ஆற்றும் பணிகளை அவதானித்தவாறு மாணவர் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை வகுப்பறையில் தீர்த்துக் கொள்வதற்காக பார்க்கப்படும் பணிகளாகும்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

கணிப்பீட்டையும், மதிப்பீட்டையும் இலகுவாக நிறைவேற்றும் வகையில் ஐந்து நியதிகள் முன்மொழியப்படுகின்றன. இவற்றுள் முதல் மூன்று நியதிகளும் அவ்வத் தேர்ச்சிகளைக் கட்டியெழுப்புவதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு, மனப்பாங்கு, திறமை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும். இறுதி இரண்டு நியதிகள் வாழ்க்கையில் பயன்படும் பண்புகள் இரண்டை விருத்தி செய்வதற்காக உதவுகின்றன. இந்நியதிகளுடன் தொடர்பான நடத்தை மாற்றங்கள் ஐந்தையும் மாணவர்களின் செயற்பாட்டின்போது இனங்கண்டு கொள்ள ஆசிரியர்கள் முயற்சிப்பதுடன், கணிப்பீட்டின் கீழ் அத்தகைய நடத்தைகள் உருவாவதை உறுதிப்படுத்தவும் மதிப்பீட்டின் கீழ் உருவாக்கப்பட்ட நடவடிக்கைகளை அளவிடவும் ஆசிரியர் முன்வர வேண்டும்.

மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதால் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை விரிவாக்கலாம். அதற்கென செயற்பாட்டுத் தொடர்ச்சி (ACTIVITY CONTINUM) ஊடாக மதிப்பீட்டு வாய்டப்புக்கள் பலவற்றை ஏற்படுத்த ஆசிரியருக்குச் சந்தர்ப்பங்கள் உள்ளன. மதிப்பீட்டுப் புள்ளிகளை இனங்காண்பதற்கு இலகுவான வகையில் செயற்பாட்டுத் தொகுப்புக்கள் (ACTIVITY CLUSTER) பலவற்றுக்கு வேறாக்குவதன் மூலம் மதிப்பீட்டு வேலைத்திட்டத்தை அர்த்தமுடையதாக ஆக்கலாம். எல்லாச் செயற்பாட்டுத் தொகுப்பின் ஆரம்பத்திலும் அவ்வந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் மதிப்பீட்டுக் கருவிகள் யாவை என மாணவருக்கு அறிவித்தல் அவசியமாகும்.

எண்ணக்கரு படங்கள்
சுவர்ப்பத்திரிகை
வினாவிடை நூல்கள்
வினாவிடை நிகழ்ச்சி
மாணவர் செயலாற்றற் கோவை
மாணவர் கண்காட்சிகள்
விவாதங்கள்
உரையாடல் மன்றங்கள்
கருத்தரங்குகள்
உரையாடல் மன்றங்கள்
கருத்தரங்குகள்
திடீர் உரைகள்
நடிபங்குகள்
இலக்கிய மீளாய்வுச் சமர்ப்பணம்
களப்புத்தகம் (இயற்கை நாளேடு / நல்ல வேலை நூல்)
செய்முறைச் சோதனைகள்

பாடநெறியின் மூன்றாம் பகுதியில் உத்தேச மதிப்பீட்டு புள்ளியாகவும் அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவிகளும் இனங்காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறாக செயற்பாட்டின் மூலமும் அவற்றிடையேயும் மதிப்பீட்டையும் இருவிதமாக செய்வதனால் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கை மேலும் விரிவாக்கக்கூடியதுடன் உற்சாகமாக கற்றலில் ஈடுபடவும் மாணவர்களுக்கு இயலுமாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக வகுப்பிலேயே எழுத்துப் பரீட்சை, செயற்றிட்டம் போன்றவையும் வருட இறுதியில் நடாத்தப்படும் பாடசாலை மட்ட அல்லது வலயமட்ட எழுத்துப் பரீட்சைகள் என்பவற்றிலும் மாணவரை ஈடுபடுத்தலாம்.

அதுபோலவே தவணை இறுதியில் கணிப்பீட்டிற்காகத் தரப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறை நீடிப்புக் கருவியையும் பயன்படுத்தலாம்.

# கற்றல் கற்பித்தற் செயன்முறைகளின் நீடிப்புக்கான கருவி

**தரம் - 7**

**0.1 கணிப்பீட்டு காலம்**

தவணை - 01
கருவி - 01

**0.2 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டம்:**

- வளமுள்ள மண், ஈரலிப்பான நிலம், நீர்வசதி ஆகிய பயிர்ச்செய்கைக்கு வாய்ப்பான காரணிகளை நோக்கமாகக் கொண்டே ஆரம்பகால குடியேற்றங்கள் நதிக்கரைகளில் அமைந்தன என்பதை விவரிப்பார்.
- நதிக்கரை நாகரிகங்களின் பரம்பலை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.
- பழைமையான நதிக்கரை நாகரிகங்களின் சிறப்பியல்புகளை அட்டவணைப்படுத்துவார்.
- நதிக்கரை நாகரிகங்களிடமிருந்து அவற்றுக்குப் பிந்திய கால நாகரிகங்களுக்கு கிடைத்த பயன்பாடுகளின் தகவற் தொகுப்பொன்றைத் தயாரிப்பார்.
- கிரேக்க, ரோம நாகரிகங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகளை விவரித்து அதன்மூலம் இலங்கை சமுதாயத்தின் சீரமைப்புக்கு ஏற்பட்ட செல்வாக்குகளை விளக்குவார்.
- அரேபிய பரம்பல் வரைக்குமான சிறப்பியல்புகளை அட்டவணைப்படுத்துவர்.
- ஒவ்வொரு நாகரிகத்தின் மூலமுமாகவும் பிற்கால உலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகளை விவரித்து அவற்றைப் பாதுகாக்க முனைவார்.

**3.0 உள்ளடக்கப்படும் விடய உள்ளடக்கம் - 7.1, 7.2**

**4.0 கருவியின் தன்மை** - காட்சிப் பலகைக்குப் பொருத்தமான பத்திரமொன்றினைத் தயாரித்தல்.

**5.0 கருவியின் நோக்கம்**

- நதிக்கரை நாகரிகங்களின் ஆரம்பம், பரவல் ஆகியவற்றின் இயல்புகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிச் செய்தல்
- கிரேக்க, ரோம, இந்திய, அரேபிய நாகரிகங்களின் சிறப்பியல்புகள் பற்றி கற்றறியச் செய்தல்.

**6.0 கருவியைப் பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டல்கள்**

ஆசிரியருக்கான வழிகாட்டல்கள்:

- செயற்பாடு பற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் மாணவர்களுக்கு விளக்குக.
- பொருத்தமான விதத்தில் மாணவரைக் குழுக்களாக்குக.
- ஒவ்வொரு குழுவுக்குமுரிய தலைப்புகளைப் பகிர்ந்தளிக்குக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

குழு I - மெசப்பொத்தேமியா, எகிப்திய நாகரிகங்கள்

- அமைவிடமும் பரம்பலும்.
- நிர்வாக முறை
- பொருளாதார நடவடிக்கைகள்
- சமய வழிபாடுகளம் நம்பிக்கைகளும்.
- பண்பாடு

குழு II - சிந்துவெளி, குவாங்கோ நாகரிகங்கள்

- அமைவிடமும் பரம்பலும்.
- நிர்வாகமுறை
- பொருளாதார நடவடிக்கைகள்
- சமய வழிபாடுகளும் நம்பிக்கைகளும்
- பண்பாடு

குழு III - கிரேக்க, ரோம நாகரிகங்கள்

- நிர்வாகமுறை
- பொருளாதார நடவடிக்கைகள்
- சமயச் சிந்தனைகள்
- கலைகளும் மனித நாகரிகங்களும்

குழு IV - இந்திய, அரேபிய நாகரிகங்கள்

- நிர்வாகமுறை
- பொருளாதார நடவடிக்கைகள்
- சமயச் சிந்தனைகள்
- கலைகளும் மனித நாகரிகங்களும்

- ஒவ்வொரு குழுவிற்கும் வழங்கப்பட்டுள்ள தலைப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்கள் பற்றி மாணவருக்கு அறிவூட்டுக.

- தமது குழுவிற்குக் கிடைக்கப்பெற்றுள்ள தலைப்பு தொடர்பாக காட்சிப் பலகையில் காட்சிப்படுத்துவதற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான ஏடொன்றை உருவாக்குவதற்கு வழிகாட்டுக.

- மதிப்பீட்டு நியதிகளின் அடிப்படையில் குழுச் செயற்பாடுகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்துக.

**மாணவருக்கான வழிகாட்டல்கள்**

- ஆசிரியரின் வழிகாட்டலுக்கு ஏற்ப தமது குழுவிற்கு வழங்கப்பட்ட தலைப்புடன் தொடர்புடைய மேலாதாரங்களின் உதவியுடன் தகவல்களைத் திரட்டுக.

- காட்சிப்பலகையில் காட்சிப்படுத்தத்தக்க அளவுடைய தாளொன்றில் காட்சி ஏட்டை ஆக்குக.

- பொருத்தமான விதத்தில் தேசப்படங்களையும், படங்களையும் பயன்படுத்தி காட்சி ஊட்டை ஆக்கபூர்வமானதாக நிறைவுப்படுத்துக.

- தமது குழுவின் படைப்பை வகுப்பில் முன்வைக்குக.

- வகுப்புக் காட்சிப் பலகையில் உங்களின் ஆக்கத்தைக் காட்சிப்படுத்துங்கள்.

**கணிப்பீட்டு நியதிகள்**

- முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிழையின்மை
- போதுமான தகவல்கள்
- தகவல்கள் ஆக்கபூர்வமாக முன்வைக்கப்படல்.
- குழுச் செயற்பாடுகளில் செயலூக்கமான பங்கேற்பு
- தூய்மையும் முழுமைப்பாடும்.

## கற்றற் கற்பித்தற் செயன்முறைகளை நீடிப்பதற்கான கருவி

**தரம் - 7**

1.0 கணிப்பீட்டுக் காலம் - 02ஆம் தவணை
கருவி - 02

**2.0 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- இலங்கையில் பல்வேறு வகையில் தாக்கஞ் செலுத்திய தென்னிந்திய அரசுகளை இந்திய தேசப்படத்தில் குறித்துப் பெயரிடுவார்.
- இலங்கை தென்னிந்திய அரசுடன் மேற்கொண்டிருந்த தொடர்புகளின் இயல்புகளைத் தேடியறிவார்.
- அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சிக்கு தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களின் தாக்கங்களை விபரிப்பார்.
- இலங்கையில் சோழர்கள் ஆட்சிபுரிந்த விதத்தை விளக்குவார்.
- பொலன்னறுவைக்காலத்தின் இறுதிப் பகுதியில் ஆட்சிபுரிந்த சிறந்த அரசனான நிசங்க மல்லனின் பணிகளைப் போற்றிப் பேசுவார்.
- இராசரட்டை நாகரிகத்தின் சீரழிவுக்கு மாகனின் ஆக்கிரமிப்பு எந்தளவிற்கு தாக்கம் புரிந்தது என்பதை விபரிப்பார்
- முதலாம் விஜயாகு, மகா பராக்கிரமபாகு ஆகிய அரசர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பணிகளைப் போற்றிப் பகுப்பாய்வு செய்வார்.

**3.0 உள்ளடக்கப்படும் விடயப்பகுதிகள்**

7.3.1, 7.3.2, 7.3.3, 7.4.1, 7.4.2, 7.4.3

**4.0 கருவியின் தன்மை**

தகவல் தொகுப்பொன்றை உருவாக்குதல்.

5.0 கருவியின் நோக்கங்கள்

- அனுராதபுர காலத்தில் இலங்கையில் செல்வாக்கு செலுத்திய தென்னிந்திய அரசுகளை தேசப்படத்தில் கண்டறியச் செய்தல்.
- இலங்கைக்கும், தென்னிந்திய அரசுக்கும் இடையே நிலவிய தொடர்புகளின் இயல்புகளை அறிய செய்தல்.
- அனுராதபுர இராசதானி வீழ்ச்சியடைவதற்கு தென்னிந்திய படையெடுப்புத் தாக்கம் செலுத்திய விதத்தினை தேடியறியச் செய்தல்.
- முதலாம் விஜயபாகு, மகா பராக்கிரமபாகு, நிசங்க மல்லன் ஆகிய அரசர்களின் அரசியல், பொருளாதார, கலாசார பணிகளை மதிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- இராசரட்டை நாகரிகத்தின் சீரழிவில் மாகனின் ஆக்கிரமிப்பு ஏற்படுத்திய தாக்கங்களை விளங்கிக் கொள்வதற்கு மாணவரை ஈடுபடுத்துதல்.

**கருவியைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆசிரியருக்கான வழிகாட்டல்கள்.**

- மாணவரைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குக.

- தகவல்களைத் திரட்டிக் கொள்ளக்கூடிய உசாத்துணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்துக.

- ஒவ்வொரு குழுவுக்குமான தலைப்புகளை வழங்குக. அவ்வத் தலைப்புகளில் தகவல்கள் சேகரித்து ஆக்கபூர்வமான அறிக்கைகளைத் தயாரிக்க அறிவுறுத்துக.

குழு I
- இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய படைபெடுப்புகளும் அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சியும்.

- அனுராதபுர காலப்பகுதியில் இலங்கையின் மீது படையெடுப்புகளை மேற்கொண்ட தென்னிந்திய அரசுகளை தேசப்படத்தின் உதவியுடன் காட்டுதல்.

- தென்னிந்திய அரசுகளுடன் ஏற்பட்ட தொடர்புகளின் இயல்புகள்.

- தென்னிந்திய படையெடுப்புகள் நிகழ்ந்தமைக்கான காரணங்கள்.

- படையெடுப்பு நிகழ்ந்த சந்தர்ப்பங்கள்.

- அனுராதபுர இராசதானியின் வீழ்ச்சி

குழு II பொலன்னறுவை இராசதானி

விஜயபாகு அரசனின் குழந்தைப் பருவம்

- அரசியல் பணி
- சமயப்பணி
- பொருளாதாரப் பணி
- வெளிநாட்டுத் தொடர்புகள்

குழு III முதலாம் பராக்கிரமபாகு மன்னன்

- குழந்தைப்பருவம்
- தக்கண தேசத்தின் அரசனாதல்
- இராசரட்டையின் அரசனாதல்
- அரசியல்பணி
- பொருளாதாரப் பணி
- சமயப்பணி
- வெளிநாட்டுத் தொடர்புகள்

குழு IV நிசங்கமல்ல மன்னன்
- அரசியல் பணி
- சமய, பொருளாதாரப் பணிகள்
- வெளிநாட்டுத் தொடர்புகள்
- மாகனின் ஆக்கிரமிப்பும் அதன் இயல்புகளும்
- மாகனின் ஆக்கிரமிப்பின் விளைவுகள்

- ஒவ்வொரு குழுவும் சேகரித்த தகவல்களை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குக.

- ஒவ்வொரு குழுவும் முன்வைக்கின்ற தகவல்கள் பற்றி ஏனைய குழுக்களும் கருத்துக்களைக் கூற வாய்ப்பளியுங்கள்.

- குழுக்கள் முன்வைக்கும் விடயங்களைத் தொகுத்துக் கூறுக.

- குழுக்கள் முன்வைத்த தகவல்கள் அறிக்கைகளை ஒன்று திரட்டி தகவல் தொகுப்பொன்றை உருவாக்க ஆலோசனை வழங்குக.

- தேவையானபோது கற்றல் உசாத்துணையாக இத் தகவல் தொகுப்பைப் பயன்படுத்தும்படி வழிகாட்டுங்கள்.

**மாணவருக்கான வழிகாட்டல்கள்**
- ஆசிரியருடைய வழிகாட்டலின் படி குழுக்களுக்கு வழங்கப்பட்ட தலைப்பின் கீழ் தகவல்களைச் சேகரித்து ஆக்கபூர்வமான தகவற் பத்திரமொன்றைத் தயாரிக்குக.
- அதனை வகுப்பில் முன்வைக்குக.

- சக குழுக்களினதும் தகவல்களை ஒன்றுதிரட்டி தகவல் தொகுப்பொன்றை உருவாக்குக.
- தேவையானபோது கற்றல் உசாத்துணையொன்றாக இதனைப் பயன்படுத்துக.

**கணிப்பீட்டு நியதிகள்**

(1) தகவல்களின் பொருத்தப்பாடு
(2) தகவல்களின் போதுமான அளவு
(3) ஆக்கபூர்வமான முன்வைப்பு
(4) குழுச்செயற்பாடுகளில் அக்கறையுடன் ஈடுபடல்
(5) முழுமை.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

**கற்றல் - கற்பித்தல் செயன்முறைகளை நீடிப்பதற்கான கருவி**

**தரம் - 7**

**0.1 உள்ளடக்கப்படும் தேர்ச்சி மட்டங்கள்**

- கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம், அதன் பரம்பல் என்பவை தொடர்பான தகவல்களை விபரிப்பார்.
- மானியமுறைக் காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல், பொருளாதார சமூகக் கட்டமைப்பு தொடர்பாக பகுப்பாய்வு செய்வார்.
- சிலுவைப் போர் தொடங்கியதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் விபரிப்பார்.
- பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டுவரை இருந்த பிரதான அரசர்களின் அரசியல், சமய, கலாசார பணிகளைப் போற்றி அவற்றைத் தமதாக்கிக் கொள்வார்.
- யாழ்ப்பாண இராச்சியத்தின் பிரதான அரசர்கள் பற்றிய தகவல் திரட்டொன்றைத் தயாரிப்பார்.

**0.3 விடய உள்ளடக்கம் - 7.5, 7.6**

**0.4 கருவியின் தன்மை - வினாவிடை போட்டி முறை**

**0.4 கருவியின் நோக்கம்**

- கிறிஸ்தவ சமயத்தின் ஆரம்பம், அதன் பரம்பல் தொடர்பான தகவல்களைக் கற்றறிதல்
- மானியமுறை காலத்தில் ஐரோப்பாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புத் தொடர்பான தகவல்களைத் தேடுவதில் மாணவரை ஈடுபடுத்தல்.
- சிலுவைப் பொரின் தொடக்கம் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் தேடியறிவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கல்.
- பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரை இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமய, கலாசார பின்னணி தொடர்பாக தகவல்கள் பற்றி விசாரணை மேற்கொள்ளல்.

கருவியைச் செயற்படுத்துவது தொடர்பாக ஆசிரியருக்கான வழிகாட்டல்கள்:

- வினாவிடைப் போட்டி பற்றி மாணவருக்கு விளக்குக.
- விடய அலகு 7.5, 7.6 ஆகியவற்றை மாணவர் நன்கு வாசிக்கச் செய்க.
- தேசப்படங்கள், சித்திரங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றின் உதவியுடன் வினாக்களை உருவாக்க மாணவருக்கு ஆலோசனை வழங்குக.

Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- வினாக்களை உருவாக்குவதற்கு பொருத்தமான விதத்தில் மாணவரைக் குழுக்களாக்குக.

குழுI
- மத்தியகால ஐரோப்பா
- கிறிஸ்தவ மதப் பரம்பல்
- மானியமுறை
- சிலுவைப் போர்

குழுII
- தம்பதெனியா காலம்
- முக்கிய அரசர்கள்
- முக்கியமான சமூக, கலாசார தகவல்கள்

குழுIII
- யாப்பகூவ, குருணாகல, கம்பளை இராசதானிகள்
- முக்கியமான அரசர்கள்
- சமூக, கலாசார தகவல்கள்.

குழுIV
- கோட்டை இராசதானி
- முக்கிய அரசர்கள்
- சமூக, கலாசார தகவல்கள்

- ஒவ்வொரு குழுவும் தயாரித்துவர வேண்டிய வினாக்களின் எண்ணிக்கையை மாணவர்களுக்கு அறியத்தரவும்.

- வினாக்களைத் தயாரித்துக் கொண்டு வரவேண்டிய திகதியை அறிவியுங்கள்.

- தயாரிக்கப்பட்ட வினாக்களை வாசித்து அவசியமான திருத்தங்களை மேற்கொள்ளுங்கள்.

- சகல மாணவர்களும் இச் செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் வகையில் விடயப் பகுதியை நன்றாக எல்லோரையும் வாசிக்கச் செய்து பங்குபற்றுவதற்கு (ஆயத்தப்படுத்துவதற்கு) வலியுறுத்தவும்.
- குறித்த தினத்தில் இச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவும்.
- மாணவரின் நெறியாள்கையில் வினாவிடைப் போட்டியை நடாத்தவும்.
- வினாக்களுக்கு மாணவர் பிழையான விடைகளை அளித்தால் அவற்றைத் திருத்தவும்.
- பொருத்தமான விதத்தில் புள்ளிகளை வழங்கவும்.

**மாணவருக்கான வழிகாட்டல்கள்**
- ஆசிரியரின் வழிகாட்டலுக்கேற்ப தமது குழுவிற்குக் கிடைத்த அலகிற்குரிய வினாக்களைத் தயாரிக்கவும்.
- 7.5, 7.6 ஆகிய அலகுகளை நன்றாக வாசித்து வினாக்களுக்குரிய விடைகளை ஆயத்தம் செய்யவும்.

- செயற்பாட்டை நடாத்துவதற்குப் பங்களிப்பு செய்யுங்கள்.



Copyright © 2008 National Institute of Education - Sri Lanka. All rights reserved.